Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 28 | சுடர்: 28 | கதிர்: 277 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 14, வெள்ளி 30.08.2013


ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்
X 5

தமிழக மீனவர்களை விடுவிக்க உடனே நடவடிக்கை எடுங்கள் 08
சிரியா மீது பாயத் தயார் 09
உதைபந்தாட்ட போட்டி. முடிவுகள் 26
சங்காவின் தெரிவு கந்துரட்ட அணியே 27

# கொழும்பில் இன்று மெழுகுவர்த்திப் போர்

## நவநீதம்பிள்ளையின் கவனத்தை ஈர்க்க காணாமற்போனோரின் உறவுகள் திரள்வர்

கொழும்பு.ஒகஸ்ட் 30
சர்வதேச காணாமற்போனோர் தினமான இன்று வெள்ளிக்கிழமை இரவு காணாமற்போனோரின் உறவுகள் ஒன்றிணைந்து மெழுகுவர்த்தி ஏந்திப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.



காணாமற்போனோர் தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு இந்த மெழுகுவர்த்திப் போராட்டம் இன்று இரவு 7 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.
காணாமற்போனோரின் உறவுகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்று விசேடமாகச் சந்தித்துப் பேசிய பின்னர், அவர் கொழும்பில் தங்கியிருக்கும் நேரத்தில் இன்று இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.
காணாமற்போனோர் தொடர்பில் ஐ.நா.வினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இந்தப் போராட்டம் நடத் தப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
சர்வதேச காணாமற்போனோர் தினம் இன்று உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது.
இதனை முன்னிட்டு காணாமற்போனோரை தேடிக் கண்டறியும் குழு, பிரஜைகள் குழு, காணாமற்போன உறவுகளின் குடும்பங்களின் சங்கங்கள் ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து கொழும்பில் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடனான சந்

தொடர்ச்சி: பக்கம் 25

## நவிப்பிள்ளையுடன் மன்னார் ஆயர் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு. ஒக. 30
இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் இந்துமதக் குருக்களை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள ஐ.நா. செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.
இதன்போது இலங்கையில் பௌத்த மத தீவிரவாத அமைப்புகள் பிற மதங்கள் மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள அராஜகங்கள் குறித்து நவநீதம்பிள்ளை கேட்டறிந்து கொண்டார்.
இதேவேளை, இந்தச் சந்திப்பின்போது காணி அபகரிப்பு, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், காணாமற்போனோர், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் உள்ளிட்ட வன்னியில் இறுதிப்போருக்குப் பின்னர் மக்கள் எதிர்நோக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து நவநீதம்பிள்ளையிடம் மன்னார் ஆயர் விபரித்துக் கூறினார் எனத் தெரியவந்துள்ளது. (த-5)

## இராமநாதன் மீது கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், ஒக.30
கைது செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் அங்கஜனின் தந்தையாரான இராமநாதன் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.
சாவகச்சேரியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான சர்வானந்தாவின் ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை தொடர்பில் அங்கஜனின் தந்தையான இராமநாதனுக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டது.
இதனை அடுத்து நேற்று முன்தினம் கொலை முயற்சி குற்றச் சாட்டில் பொலிஸார் இராம

தொடர்ச்சி: பக்கம் 25

## காணாமற்போனோர் பட்டியல் இன்று நவநீதம்பிள்ளையிடம்

கொழும்பு. ஒக.30
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை கொழும்பில் இன்று வெள்ளிக்கிழமை சந்திக்கும் காணாமற்போனோரின் உறவினர்கள், இலங்கையில் காணாமற்போனோர் தொடர்பிலான பெயர்ப் பட்டியல் ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளனர் என்று காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலர் சுந்தரம் மகேந்திரன் தெரிவித்தார்.
சர்வதேச காணாமற்போனோர் தினமான இன்று, காணாமற்போனோரின் உறவினர்களை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மாலை 5 மணிக்குக் கொழும்பில் பிரத்தியேக இடமொன்றில் சந்திக்கின்றார்.
போர்க் காலத்தில் கடத்தப்பட்டுக் காணாமற்போனோர், இறுதிக்கட்டப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனோர் ஆகியோரின் உறவினர்கள் சுமார் 300 பேர் வரை இந்தச் சந்திப்பில் கலந்துகொள்கின்றனர்.
இந்தச் சந்திப்பின் போது இலங்கையில் காணாமற்போனோர் தொடர்பிலான பெயர்ப்பட்டியலொன் றும் நவநீதம்பிள்ளையிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (த-5)

## பயங்கரவாதச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யோம்

### நவிப்பிள்ளையிடம் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு.ஒக 30
பயங்கரவாதத் தடைச்சட்டம் கடந்த 30 வருடங்களாக இலங்கையில் நடைமுறையில் இருக்கின்றது. அதன் திருத்தச் சட்ட வரைவு பாதுகாப்பு நடவடிக்கைக்காகவே பயன்படுத்தப் படுகின்றது. அந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்யமாட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளைக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற் கண்



டவாறு தெரிவித்துள்ளார்.
கம்பஹா, ரத்துபஸ்வலவைச் சேர்ந்த மக்கள் சுத்தமான தண்ணீர் கேட்டு வெலிவேரியவில் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது மக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களின் போது துப்பாக்கிப் பிர

தொடர்ச்சி: பக்கம் 25

## இலங்கை அரசுக்கு எதிராக திட்டமிட்டு செயற்படுகிறது ஐ.நா.

### ஜனாதிபதி மஹிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக.30
இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை திட்டமிட்ட ரீதியில் செயற்பட்டு வருகின்றது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கிறார்.
இவ்வாறானதொரு நிலையில், மூன்று நாள் பயணமாக கிழக்கு ஐரோப்பிய நாடான பெலாரஸுக்குச் சென்ற ஜனாதிபதி, அந்த நாட்டு அதிபர் அலெக்சாண்டரிடம் மேற்கண்டவாறு தெரிவித்ததாக அரச ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.
நவநீதம்பிள்ளை இலங்கைக்கு



வந்த கடந்த ஞாயிற்றுக்கிழமை பெலாரஸுக்குப் பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி அங்கு வைத்து இவ்வாறு தெரிவித்துள்ளார்.
'இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபை திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது. குறிப்பிட்ட சில நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையை இலங்கை

தொடர்ச்சி: பக்கம் 25

## நவி-கூட்டமைப்பினர் இன்று முக்கிய பேச்சு

### தமிழர் பிரச்சினைகளைப் பட்டியலிட்டு அறிக்கை ஒன்றும் கையளிக்கப்படும்

கொழும்பு, ஒக.30
இலங்கைக்கு வந்து தரவுகள் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்று கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.
நவநீதம்பிள்ளைக்கும் தமிழ்க் தேசியக் கூட்டமைப்புக்குமிடையிலான சந்திப்பு இன்று காலை 8.15 மணியளவில் கொழும்பு -

தொடர்ச்சி: பக்கம் 25

## மறைந்த காவலரண்கள் முளைக்கின்றன மீண்டும்

### நவநீதம்பிள்ளை போன கையோடு

யாழ்ப்பாணம், ஒக.30
ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகையை முன்னிட்டு வட பகுதியில் இரவோடு இரவாக அகற்றப்பட்ட இராணுவக் காவலரண்கள் மீண்டும் முளைவிட ஆரம்பித்துள்ளன. அத்துடன் இராணுவத்தினரும் தமது வழமையான ரோந்து நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பித்துள்ளனர்.
அத்துடன் ஆனையிறவுச் சோதனைச் சாவடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவப் பதிவுகளும் மீள ஆரம்பிக்கப்பட்

தொடர்ச்சி: பக்கம் 25

## தேர்தல் விதி மீறல் குறித்து கிராம அலுவலரும் அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக.30
தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பான அறிக்கையை ஒவ்வொரு கிராம சேவையாளர்களும் வாரத்தில் இரு தினங்கள் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.
யாழ். மாவட்டத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறும் வகையில் சுவரொட்டிகள், 'கட் அவுட்கள்', பனர்கள், வீதிகளில் எழுதப்பட்ட தேர்தல் பிரசார வாசகங்கள், சின்னங்கள் என்பனவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவத்தாட்சி அலுவலர் மேலும் கூறியுள்ளார்.
யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
புதிதாக 'காப்பெற்' போடப்பட்ட வீதிகளில் வேட்பாளர்கள் தமது பெயர்கள், கட்சிச் சின்னங்கள், விருப்பு இலக்கங்கள் என்பவற்றை இரவிரவாக எழுதி வருகின்றனர். இதனையே கடந்த சில தினங்களாகக் கறுப்புமை பூசி அழிக்கும் நடவடிக்கைகளில் தேர்தல் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. (த-5-86)

உதயன்
30/08/2013

# கட்டுப்பாட்டை இழந்த பஸ் தடம்புரண்டதால் விபத்து

## 17 பயணிகள் படுகாயம்



யாழ்ப்பாணம், ஓக.30
சங்குப்பிட்டி வீதியூடாக மன்னார் சென்ற தனியார் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் 17 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து சாவகச்சேரி மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று சங்குப்பிட்டி-மன்னார் வீதியில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்குப் பயணிகளுடன் பயணித்த தனியார் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டது.

இதன்போது பஸ்ஸில் பயணித்தவர்கள் கை கால்கள் முறிவடைந்து படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

விபத்தின்போது காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் கிராஞ்சியைச் சேர்ந்த கந்தையா செல்வராசா (வயது-55), மன்னாரைச் சேர்ந்தவர்களான சுரேஷ்குமார் கிரிசாத் (வயது -22), இந்துஜன் சந்தியா (வயது-25), பூநகரியைச் சேர்ந்த ஏ.தர்மரூபி ஆகியோர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பள்ளிக்குடாவைச் சேர்ந்த இலங்கேஸ்வரன் கருணரூபி (வயது-35), கிராஞ்சியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் புஸ்பவதி (வயது-45), முழங்காவிலைச் சேர்ந்தவர்களான இராமு நல்லையா (வயது-69), பரமேஸ்வரன் சந்திரகுமாரி (வயது-35), பரமேஸ்வரன் யோககுமாரி (வயது-16), ஜெயபுரத்தைச் சேர்ந்த செல்லத்துரை ராஜசுதன் (வயது-65), பள்ளிக்குடாவைச் சேர்ந்த இளங்கோவன் எக்சிபா (வயது -17), கிராஞ்சியைச் சேர்ந்த பீற்றர் கமல் (வயது-36), முழங்காவிலைச் சேர்ந்த அன்ரனி கிறிஸ்ரி ஷட்சன் (வயது-18), கிராஞ்சியைச் சேர்ந்த கே.செல்வராஜா (வயது-55), நான்காம் கட்டை பூநகரியைச் சேர்ந்த பியதிலக பண்டார (வயது-36), மன்னார் வட்டக்கண்டலைச் சேர்ந்த சிந்துஜன் சிந்துஜா (வயது-24), ஆடியபாதம் வீதி கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா கனகரத்தினம் (வயது-30) ஆகியோர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட வண்ணம் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பஸ்ஸில் 46 வரையான பயணிகள் பயணித்ததாகத் தெரியவருகிறது.

(ஐ-14-4-9)

# மன்னாரில் சிங்களக் குடியேற்றம் ஐ.நா.சபைக்கு ஆதாரத்துடன் மனு

சென்னை, ஓக.30
மன்னார் மாவட்டத்தில் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் தமக்குக் கிடைத்துள்ள ஆதாரத்தை ஐ.நா.சபைக்கு அனுப்பவுள்ளதாக 'மே 17' இயக்கத்தினர் சென்னையில் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் தமிழர்களின் பாரம்பரியத் தாயகப் பிரதேசங்களில் இலங்கை அரசு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது.

இலங்கையின் வடமாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேச செயலர் பிரிவில் 500 சிங்கள குடும்பங்களை குடியமர்த்த இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பில் மன்னார் மாவட்ட அரச அதிபர் எழுதியுள்ள கடிதம் அதனை உறுதிப்படுத்துகின்றது.

இந்த முயற்சிக்கு இலங்கை இராணுவமும் பயன்படுத்தப்படுகின்றது.

தமிழர் தாயகப் பகுதிகளில், சிங்களக் குடியேற்றங்கள் நடப்பதை இலங்கை அரசு மறுத்து வந்த நிலையில் தற்போது வெளியாகியுள்ள இந்தத் கடிதம் இலங்கை அரசும் இராணுவமும் இணைந்து சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வருவதை உறுதி செய்துள்ளதாக 'மே 17' இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கடிதம் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (கு-5)

# மதத்தலங்களில் மிருக பலிக்குத் தடை

கொழும்பு.ஓக.30
அனைத்து மதத் தலங்களிலும் மிருக பலிக்குத் தடை விதிக்கப்படுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது. சிலாபம் முன்னேஸ்வரம் கோயில் தொடர்பிலான மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இந்த உத்தரவுப்படி இனிமேல் எந்தவொரு மதத் தலங்களிலும் மிருக பலிப் பூசை மேற்கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. (ஐ)

# அமெரிக்காவுக்கு எதிராக மஹிந்த வீரத்துடன் போராட வேண்டுமாம்

## தேசப்பற்றுள்ளதேசிய இயக்கம்

கொழும்பு.ஓக.30
கடாபி போன்ற வீரர்களை அமரிக்க கைக்கூலிகள் தான் படுகொலை செய்தனர். இலங்கையிலும் அமெரிக்கா இதனையே செய்ய நினைக்கின்றது. அதற்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ வீரத்துடன் போராட வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

சூடான், ஸ்லோவாக்கியா நாடுகளில் அமெரிக்கா செயற்பட்டதைப் போன்று இலங்கையில் தனது ஆதிக்கத்தை அமெரிக்காவினால் செலுத்தமுடியவில்லை. இதற்குக் காரணம் ரஷ்யா, சீனா போன்ற பலம் வாய்ந்த நாடுகள் எப்போதும் இலங்கைக்கு துணை நிற்பதே.

அமெரிக்கா, நவிப்பிள்ளை மூலமாக இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்த நினைத்தால் அதை ஒரு போதும் செய்ய முடியாது. கடந்த காலங்களில் தருஸ்மன் அறிக்கைமூலமாக இலங்கையின் அதிகாரத் தினை அடக்க முற்பட்டனர். எனினும் அது முடியாமல் போனமையால் நவிபிள்ளை மூலமாக செயற்பட ஆரம்பித்துள்ளனர் - என்றார்.

(ஐ)

# புலிகளின் ஓடுபாதையில் பயணித்த முதல் வெளிநாட்டுப் பிரதிநிதி நவி



கொழும்பு.ஓக 30
விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட இரணைமடு ஓடுபாதையில் இருந்து, இலங்கை விமானப்படை விமானம் மூலம், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கிழக்குக்கான தனது பயணத்தை மேற்கொண்டார். யாழ்ப்பாணம், மற்றும் முல்லைத்தீவுக்கான பயணத்தை முடித்துக் கொண்ட அவர், கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இரணை மடு விமான ஓடுபாதைக்குச் சென்றார்.

அங்கிருந்து ஐ.நாவுக்கான இலங்கைத் தூது வர் ரவிநாத் ஆரியசிங்கவுடன், இலங்கை விமானப்படையின் எம்.ஏ.60 விமானம் மூலம் திருகோணமலை சீனக்குடாவுக்கு புறப்பட்டுச் சென்றார். விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட இரணை மடு விமான ஓடு பாதையைப் பயன்படுத்திய முதலாவது உயர்மட்ட வெளிநாட்டுப் பிரமுகர் நவநீதம்பிள்ளையே என்பது குறிப்பிடத்தக்கது.(கு)

# சமாதான அரங்கு தூபி திறப்பு விழா இன்று

சுழிபுரம், ஓக.30
சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய நுழைவாயில் சமாதான அரங்கு தூபி திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சி.பிறைசூடிக் குரு தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தலைமையிலான யாத்திரைக் குழுவினரும் கலந்து கொள்வர்.

(ஓ-14-28)

# ஆஸி. செல்ல முயன்ற 27 பேர் கைது

கொழும்பு.ஓக.30
ஆஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக செல்லு வதற்கு ஆயத்தமாகவிருந்ததாகக் கூறப்படும் 27 பேரை தாம் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொடவில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்ததாகக் கூறப்படும் 8 பேரையும் காலியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்த தாகக் கூறப்படும் 13 பேரையும் பேருவளையில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்ததாகக் கூறப்படும் 6 பேரையுமே கடந்த புதன்கிழமை இரவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் அம்பலாங்கொட, காலி, நீர்கொழும்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

# வாக்களிக்கச் செல்வோருக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30
மாகாண சபைத் தேர்தலின் போது வாக்களிக்கச் செல்வதற்கு, சகல ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை நிறுவனங்களால் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் 21 ஆம் திகதி வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெறவுள்ளது. இதன்போது தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கை அளிப்பதற்கான விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

வாக்களிப்பதற்கான விண்ணப்பம் கோரி தொழில் தருநர்கள் (நிறுவன முகாமையாளர்கள்) எழுத்து மூலம் விண்ணப்பிக்கின்ற போது, சம்பள இழப்பை ஏற்படுத்தாத விடுமுறையை அவர்கள் வழங்க வேண்டும்.

ஊழியருக்கு வழங்கப்படும் விடுமுறைக் காலத்தை, அவர் தொழில் புரியும் நிலையத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று திரும்பி வரும் தூரத்தைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்கும் சகல ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்கப்பட வேண்டும். அத்துடன் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறையொன்றாக அது கருதப்பட வேண்டியதுடன் ஊழியர்களின் சாதாரண விடுமுறைகளிலிருந்து புறம்பானதாக இருக்க வேண்டும்.

இந்த நடவடிக்கைகளை மீறும் வகையில் தொழில் தருநர்கள் செயற்பட்டால் குற்றவாளியாகக் கருதப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களின் போது ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதால், இந்த முறை வாக்கெடுப்பின் போது வாக்களிக்க உரித்துள்ள ஊழியர்களுக்கு சட்டத்தின் கீழ் உரிமையுள்ள இந்த விடுமுறையை தனியார், அரச துறைகளிலுள்ள தொழில் தருநர்கள் தமது வேலைத் தளத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்க வேண்டும் - என்றார். (கு-5)

# வெடிகொளுத்தி ஆரவாரத்துடன் சபைக்கு வந்தார் விஜயகாந்த்

யாழ்ப்பாணம், ஓக.30
யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை வெளியே பலத்த வெடிச் சத்தங்கள் கேட்டன. இதனால் சபை அதிர்ந்துபோனது. சற்று நேரத்தில் ஆதரவாளர்கள் சகிதம் வந்தார் உறுப்பினர் எஸ்.விஜயகாந்த். திருட்டுக் குற்றச்சாட்டு ஒன்றில் கைதாகி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டவரான யாழ்.மாநகர சபை உறுப்பினரே நேற்று இந்தக் காரியத்தில் ஈடுபட்டார்.

வெளியே வெடிச்சத்தம் கேட்க முதல்வர் காதுகளைப் பொத்திக் கொண்டு திகைத்துப்போய் இருந்தார். ஏனைய உறுப்பினர்கள் வெளியே சென்றனர்.

இதனால் சபை நடவடிக்கைகள் நேற்றுச் சிறிது நேரம் தடைப்பட்டது.

(ஐ-7)

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100%
சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில்
நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம்.
பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.




ஷைலோ ஐஸ்கிறீம்
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. : 021 492 6003


## சர்வதேச கடற்பாசறை சிட்னியில்

யாழ்ப்பாணம், ஓக.30
சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் ஏற்பாட்டில் சர்வதேச கடற்பாசறை அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஆஸ்திரேலியா சிட்டினியில் நடைபெறவுள்ளது.
இந்தப் பாசறையில் பங்குபற்ற ஆர்வமுள்ள பாடசாலை மாணவர்கள் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என்று சென். ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ்.மாவட்ட ஆணையாளர் செ.செல்வரஞ்சன் அறிவித்துள்ளார்.
இந்தப் பாசறையில் 11 தொடக்கம் 17 வயதுக்கு இடைப்பட்ட ஆங்கிலத்தில் புலமையுடைய சென். ஜோன்ஸ் அம்புலன்ஸில் அங்கத்தவர்களாக உள்ள மாணவர்கள் பங்குபற்ற முடியும்.
ஆர்வமுடைய மாணவர்கள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(வ-14)

# கிளிநொச்சிக்கு நேற்றும் வந்தது ரயில்

## புனரமைப்புப் பணிகள் நிறைவை அடுத்து பரீட்சார்த்த சேவை





கிளிநொச்சி, ஓக.30
வவுனியா, ஓமந்தை ரயில் நிலையத்தில் இருந்து கிளிநொச்சிக்கான பரீட்சார்த்த ரயில் சேவை நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி நகரை வந்தடைந்தது.
போரின் போது சேதமடைந்த ரயில் பாதைகளின் புனரமைப்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில் நேற்று பரீட்சார்த்த சேவை இடம்பெற்றது. ஓமந்தையில் இருந்து கிளிநொச்சி வரையில் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
இதேவேளை, கிளிநொச்சி, மாங்குளம், புளியங்குளம் ஆகிய ரயில் நிலையங்களின் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. மேலும் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் கிளிநொச்சிக்கான ரயில் சேவை தொடர்ச்சியாக இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
1990 ஆம் ஆண்டுக்கு முன்பு இடம்பெற்றுவந்த இந்த ரயில் சேவை போர் காரணமாகத் தடைப்பட்டிருந்தது. தற்போது 23 வருடங் களின் பின்னர் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-6)

## அடிப்படை வசதிகளுடன் அமையவுள்ளது புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை

> சந்தையை மக்களின் விருப்பத்துக் கமைய சகல வசதிகளுடன் மாற்றியமைக்க முன்வந்துள்ள யு.எஸ்.எயிட் நிறுவனம் 3.8 மில்லியன் ரூபாவை பிரதேச சபைக்கு வழங்கியுள்ளது.

புதுக்குடியிருப்பு, ஓக.30
புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை அடிப்படை வசதிகள் உட்பட சகல வசதிகளுடன் சுமார் 3 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.
இதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச சபைச் செயலாளர் மேற்கொண்டுள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இயங்கி வந்த பொதுச் சந்தை முற்றாகச் சேதமடைந்தது.
முன்னர் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வசதி கருதி கோம்பாவில் பகுதியில் வசதியீனங்கள் மத்தியில் தற்காலிகமாக இயங்கி வந்த இந்தச் சந்தை மக்களின் வேண்டுகோளுக்கிணங்க புதுக்குடியிருப்பு கிழக்குப் பகுதியில் பிரதேச செயலர் வழங்கிய 2 ஏக்கர் காணியில் இயங்கி வருகிறது.
ஆனால் அடிப்படை வசதிகள் உட்பட வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வரும் மேற்படி சந்தையை மக்களின் விருப்பத்துக்கமைய சகல வசதிகளுடன் மாற்றியமைக்க முன்வந்துள்ள யு.எஸ்.எயிட் நிறுவனம் இதற்கென 3.8 மில்லியன் ரூபாவை பிரதேச சபைக்கு வழங்கியுள்ளது.
மேற்படி நிறுவனம் வழங்கிய நிதி மூலமாக சகல வசதிகளுடன் இந்தச் சந்தையை அமைப்பதற்கான ஒழுங்குகளைப் பிரதேச சபைச் செயலாளர் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-115)

# சைக்கிளில் பயணித்த மாணவனை மஞ்சள் கடவையில் பந்தாடிய ஹைஏஸ்

## அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு



வலி.வடக்கு, ஓக. 30
பரீட்சை எழுதிவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டு இருந்த மாணவனை வேகமாக வந்த ஹைஏஸ் வாகனம் பந்தாடியதில் தலையில் பலத்த காயத்துடன் குறித்த மாணவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
மல்லாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள விசாலாட்சி வித்தியாலயத்தின் முன்பாக நேற்று முற்பகல் 11.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பரீட்சை எழுதிவிட்டு வீட்டுக்குச் செல்வதற்காக சைக்கிளில் சென்று கொண்டிருந்த மாணவன் மஞ்சள் கோட்டின் வழியாகத் திரும்பியுள்ளார்.
அதனை அவதானிக்காது மிக வேகமாக வந்த ஹைஏஸ் வாகனம் குறிப்பிட்ட மாண வனை மோதியதுடன் 5 மீற்றர் தூரம் வரை தூக்கி எறிந்துள்ளது.
இதுதொடர்பாக தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் வாகனத்தையும் சைக்கிளையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். (வ-86)

# நல்லூர் கந்தனைத் தரிசிக்க

## வவுனியாவிலிருந்து பாத யாத்திரை



> இன்று வெள்ளிக்கிழமை காலை வேப்பங்குளம் ஶ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து பாத யாத்திரையை மேற்கொள்ள வுள்ளனர்.

வவுனியா, ஓக.30
சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆல யத்தின் வருடாந்த தேர்த்திருவிழாவை முன்னிட்டு வவுனியாவிலிருந்து இம்முறையும் வேல் தாங்கிய பாதயாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
வவுனியா வேப்பங்குளம் ஶ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய நிர்வாகி அறநெறிச் செல்வி கு.ஜெயராணி தலைமையிலான குழுவினர் இந்தப் பாத யாத்திரையை மூன்றாவது தடவையாக மேற்கொள்ளவுள்ளனர்.
இன்று 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை வேப்பங்குளம் ஶ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து பாத யாத்திரையை மேற்கொள்ளவுள்ளனர்.
பாதயாத்திரையில் இணைந்து கொள்ள விரும்பும் பக்தர்கள் தம்முடன் தொடர்பு கொள்ள முடியும் என்று கு.ஜெயராணி தெரிவித்துள்ளார்.
இதேவேளை குறித்த பாத யாத்திரையில் செல்லவுள்ள பக்தர்களுக்கான உணவு, தங்குமிடம் மற்றும் குடிதண்ணீர் வசதிகளை ஒழுங்கு செய்து கொடுப்பது தொடர்பில் ஏ-9 வீதியிலுள்ள ஆலயங்களுக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களை கடித மூலம் வேண்டியுள்ளார்.
பாதயாத்திரைக் குழுவினர் நல்லூர் கந்தன் தேர்த்திரு விழா அன்று நல்லூர் ஆலயத்தைச் சென்றடைவர். (ஓ-402)

## மல்லாவி மத்திய கல்லூரிக்கு உலக தரிசனத்தால் உதவிகள்

அக்கராயன், ஓக. 30
மல்லாவி மத்திய கல்லூரிக்கு உலக தரிசனம் நிறுவனம் கட்டில்கள், மெத்தைகள் என்பவற்றை வழங்கியுள்ளது.
மல்லாவி மத்திய கல்லூரியில் மாணவிகளுக்கென பெண்கள் விடுதியொன்று இயங்கி வருகின்றது. இந்த விடுதிக்கென கட்டில்கள் மற்றும் மெத்தைகளை உலக தரிசன நிறுவனம் வழங்கியுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தேசியப் பாடசாலைகளில் ஒன்றான மல்லாவி மத்திய கல்லூரியில் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.
இவர்களுக்குப் பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-18)

# வங்கிகளில் காத்திருக்கும் வீட்டுப் புனரமைப்பு நிதி

## பயனாளிகளுக்கு வழங்குவதில் அதிகாரிகள் அசமந்தநிலை

> வங்கிகளில் பணம் ஒதுக்கப்பட்டு இரு மாதங்களுக்கு மேலாகியும் பயனாளிகளுக்குப் பணம் வழங்கப்படாமல் காலம் கடத்தப்பட்டு வருகின்றது.

வலி.தென்மேற்கு, ஓக.30
குடாநாட்டில் வீடுகள் திருத்துவதற்காக விண்ணப்பித்த அரச ஊழியர்களுக்குக் கடன் வழங்குவதற்காக மூன்று வங்கிகளில் ஒதுக்கப்பட்டுள்ள 45 மில்லியன் ரூபா இரு மாதங்களுக்கு மேலாகியும் பயணிகளுக்கு வழங் கப்படாமல் முடக்கப்பட்டுள்ளது.
இத்தகைய அசமந்த நிலை குறித்து விசனம் தெரிவித் துள்ள பயனாளிகள் பணத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.
அரச உத்தியோகத்தர்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் அரசால் நாடு முழுவதிலும் ஆரம் பிக்கப்பட்ட 'ஜன செபன உப கார' வீட்டுத் திட்டத்தின் கீழ் 5 இலட்சம் ரூபா வரை கடன் வழங்கப்படுகின்றது.
குடாநாட்டிலுள்ள முந்நூறுக்கும் அதிகமான அரச ஊழியர் தங்கள் வீடுகளைத் திருத்தி அமைப்பதற்காக இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய வீடமைப்பு அபி விருத்தி அதிகார சபையி டம் கடனுக்கு விண்ணப்பித்திருந்தனர்.
அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின் அதிகாரிகளின் பரிந்துரைக்கு அமைய கடன் வழங்குவதற்காக இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகிய மூன்று வங்கிகளில் 45 மில்லி யன் ரூபா ஒதுக்கப்பட்டது.
வங்கிகளில் பணம் ஒதுக்கப்பட்டு இரு மாதங்களுக்கு மேலாகியும் பயனாளிகளுக்குப் பணம் வழங்கப்படாமல் காலம் கடத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள பயனாளிகள் மழைக்கு முன்பு வீடுகளைத் திருத்துவதற்கு வசதியாகப் பணத்தை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.
இதேவேளை விரைவாகப் பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் திருத்த வேலைகளை ஆரம்பித்தவர்கள் வங்கியிலிருந்து பணம் கிடைப் பதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் ஆரம்பித்த தங்கள் வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர். (வ-115)


பொதுநலவாய மாநாடு நடத்த எதிர்ப்பு

## உண்ணாவிரதம் இருந்த சட்ட மாணவர் மயக்கம்

சென்னை, ஓக.30
பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்த இந்தியா அனுமதிக்கக் கூடாது என திருச்சி சட்டக்கல்லூரி மாணவர்கள் 3 ஆவது நாளாக நடத்திய உண்ணாவிரதத்தில் மாணவர் ஒருவர் மயக்கமடைந்தார்.
இலங்கையில் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல், தமிழக மீனவர்கள் மீது இலங்கை படையினர் நடத்தும் தாக்குதல் என்பவற்றைக் கண்டித்தும், இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய மாநாட்டை நடத்த இந்தியா அனுமதிக்கக் கூடாது, அந்த மாநாட்டில் இருந்து இலங்கையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் திருச்சி அரசு சட்டக் கல்லூரி 3 ஆம் வருட மாணவர் மாரிமுத்து தலைமையில் புஷ்பராஜ், கஜேந்திரபாபு, சத்தியகுமரன், தமிழரசன் ஆகிய 5 மாணவர்கள் கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.
இதற்காக கல்லூரி பிரதான நுழைவாயில் அருகே மாணவர்கள் பந்தல் போட முயன்றனர். இதற்கு பொலிஸ் அனுமதி மறுத்ததை அடுத்து கல்லூரி முன் உண்ணாவிரதத்தைத் தொடங்கி உள்ளனர். 2 நாள்களாக கொளுத்தும் வெயிலில் மாணவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்தனர். செவ்வாய்க்கிழமை தொடக்கம் சாமியானா பந்தல் அமைத்து உண்ணா விரதத்தை தொடர்ந்தனர். 3 ஆவது நாளாக நேற்று முன்தினம் தொடக்கம் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருவதால் மாணவர்கள் சோர்வுடன் இருந்தனர்.
இந் நிலையில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் மாணவர் சத்தியகுமரன் மயக்கம் அடைந்தார். அதையடுத்து அவர் அம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் ஏனைய 4 மாணவர்களும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து வருவதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (வ)

> 2 நாள்களாக கொளுத்தும் வெயிலில் மாணவர்கள் உண்ணா விரதம் மேற்கொண்டு வந்தனர். செவ்வாய்க் கிழமை தொடக்கம் சாமியானா பந்தல் அமைத்து உண்ணா விரதத்தை தொடர்ந்தனர்.

# கச்சதீவு விவாதத்துக்கு தடை தமிழக எம்.பிக்கள் கொதிப்பு



டில்லி, ஓக.30
இந்தியாவின் நட்பு நாடாக, இலங்கை இருப்பதால் கச்சதீவு குறித்துப்பேசுவது, இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் சங்கடமான நிலையைத் தோற்றுவிக்கும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.
இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்ட கச்சதீவை திரும்பப் பெற வேண்டும் என்று அண்மைக் காலமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர். எனினும், இந்திய மத்திய அரசு இதுகுறித்து மௌனம் சாதித்து வருகிறது.
இந்தநிலையில், கச்சதீவு விவகாரம் குறித்து, நாடாளுமன்றத்தில் சிறப்பு விவாதம் நடத்த வலியுறுத்தி, தி.மு.க. உறுப்பினர் இளங்கோவன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் லிங்கம் ஆகியோர், சபாநாயகர் மீரா குமாரிடம் விண்ணப்பித்துள்ளனர்.
தற்போது நடைபெறும் மழைக்கால கூட்டத்தொடர் முடிவதற்குள் இதுகுறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று அவர்கள் கேட்டிருந்தும், அதற்கான அறிகுறிகள் இதுவரை தென்படவில்லை.
இந்தநிலையில் தான், கச்சதீவு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சு முட்டுக்கட்டை போட்டுள்ள தகவல் அம்பலமாகியுள்ளது.
கச்சதீவு விவகாரம் குறித்த விவாதம் தொடர்பாக, இந்திய வெளிவிவகார அமைச்சிடம், சபாநாயகர் கருத்துக் கேட்டிருந்தார்.
அதற்குப் பதிலளித்து, கடந்த, 5 ஆம் நாள் இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலர் ஹர்ஷ்வர்தன் சிரிங்லா, கடிதம் எழுதியுள்ளார்.
அந்தக் கடிதத்தில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் எல்லைகள் குறித்து, ஏற்கனவே வரையறுக்கப்பட்டு விட்டது.
இதுகுறித்து, 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இரண்டு உடன்பாடுகளில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.
இந்தியா தனது கடல் எல்லைப்பரப்பில் எதையும் விட்டுக் கொடுக்கவில்லை. இரு தரப்பும் ஒப்புக்கொண்ட படியே எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது.
அவ்வாறு செய்ததில் கச்சதீவு இலங்கைக் கடற்பரப்புக்குள் அமையும்படி ஆனது.
எனவே, கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமான பகுதி. இந்த விவகாரம், முடிந்து போன ஒன்று. அதை திரும்பவும் மறுபரிசீலனை செய்ய முடியாது.
இலங்கை, இந்தியாவின் நட்பு நாடு; நெருக்கமான நட்புக் கொண்ட அண்டை நாடாக இலங்கை இருக்கும் போது, கச்சதீவு குறித்து, நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவது, ஏற்புடையது அல்ல.
அவ்வாறு விவாதம் செய்தால் அது இருநாடுகளின் நட்புறவில் மிகப்பெரிய தர்மசங்கடத்தை ஏற்படுத்தும். எனவே நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்கக் கூடாது.
இந்தத் தகவல்கள் வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் ஒப்புதலின்படியே தெரிவிக்கப்படுகின்றன. இவ்வாறு, அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.
அந்தக் கடிதம் தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கடும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

> கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தமான பகுதி. இந்த விவகாரம், முடிந்து போன ஒன்று.அதை திரும்பவும் மறுபரிசீலனை செய்ய முடியாது.

## தமிழினப் படுகொலை குறித்து மஹிந்தவிடம் கேள்வி எழுப்புங்கள்

### தென்கொரியப் பிரதமரிடம் வி.உருத்திரகுமாரன் வேண்டுகோள்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலை குறித்து, அவரிடம் கேள்வி எழுப்புங்கள் என்று இலங்கைக்கு பயணம் சென்றுள்ள தென்கொரியப் பிரதமர் சுங் ஹொங்வோனிடம் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
மூன்று நாள் பயணமாக இலங்கைக்குச் சென்றுள்ள தென்கொரியப் பிரதமருக்கு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இலங்கையின் இறுதிப் போரின் கடைசி ஐந்து மாதங்களில் 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் படுகொலைகளுக்கும், நூற்றுக் கணக்கான தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வுகளுக்கும் இலங்கை அரசின் தலைமையிலான படையினரே காரணம் என்பதற்கான ஐ.நாவின் உள்ளக அறிக்கையினை சுட்டிக் காட்டி யுள்ளார்.
தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே தமிழர்கள் மீதான இத்தகைய மீறல்கள் இடம்பெற்றுள்ளன. போரின் போது இலங்கை இராணுவத்தினர் இரசாயன ஆயுதங்களைப் பாவித்துள்ளனர் என்ற குற்றச்சாட்டுக்குள் உள்ளனர் என்பதையும் தென்கொரியப் பிரதமருக்கு நினைவூட்டியுள்ளார்.
இதேவேளை இலங்கை ஜனாதிபதியை தாங்கள் சந்திக்கும் பொழுது அவர் தலைமையிலான இலங்கை இராணுவத்தினரால் போரில் 90 ஆயிரம் தமிழ் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர் என்பதனை தங்கள் மனக்கண்ணில் கொள்ளுமாறும், தற்போதும் அதே படையினரது பாலியல் அத்துமீறல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அந்த விதவைகளும் அவர்களது பெண் பிள்ளைகளும் உள்ளாகின்றனர் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (வ)

## மனித உரிமை கருத்தரங்கு 2 நாள்கள் கிளிநொச்சியில்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் நடத்தப்படும் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு இன்றும், நாளையும் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.
கிளிநொச்சி இரத்தினபுரம் வீதியிலுள்ள எஸ்.கே.விருந்தகத்தில் இன்று முற்பகல் 10 மணி முதல் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மதத் தலைவர்கள் மத அமைப்புகளுக்கான கருத்தரங்கும்.
நாளை முற்பகல் 9 மணி முதல் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள், தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கான கருத்தரங்கும் இடம்பெறவுள்ளன.
இதில் தொழிலாளரின் தொழிலுரிமைகள், மனித உரிமைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் கேட்டுள்ளார். (ரு-400-426)

## விபத்தில் முதியவர் சாவு

வவுனியா, ஓக.30
செட்டிக்குளம்-மதவாச்சி வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நேற்றுமுன்தினம் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.
மதவாச்சியில் இருந்து செட்டிக்குளம் நோக்கிப் பயணம் செய்த டிப்பர் ரக வாகனம் மோதியே மூதாட்டி உயிரிழந்தார்.
நேரியகுளம், செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த நடராஜா வீரம்மா (வயது-78) என்பவரே விபத்தில் சிக்கிப் பலியானவராவார்.
விபத்தில் படுகாயமடைந்த இவர் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஜ-400)

## 4ஆயிரத்து 673 படையினரை போரின்போது காணவில்லை

### படை வட்டாரங்கள் தகவல்



கொழும்பு,ஓக 30
விடுதலைப் புலிகளுடனான 30 ஆண்டுகாலப் போரில் பொலிஸார் உள்ளிட்ட 4673 இலங்கைப் படையினர் காணாமற்போயுள்ளதாக, இலங்கைப் பாதுகாப்புப் புலனாய்வு அமைப்புக்கள் தெரிவித்துள்ளதாக 'டெய்லி நியூஸ்' ஆங்கில நாளேடு தகவல் வெளியிட்டுள்ளது.
1981ஆம் ஆண்டு முதல் 2008ஆம் அண்டு வரை யான காலப்பகுதியிலேயே இவர்கள் காணாமற்போயுள் ளனர் என்று தெரிவிக்கப்படு கிறது.
காணாமற்போனவர்களில் 3484 இலங்கைப் படையினரும், 1189 பொலிஸாரும் அடங்கியுள்ளனர்.
இவர்கள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும், இது குறித்து எவரும் கேள்வி எழுப்புவதில்லை என்றும் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் விசனம் வெளியிட்டுள்ளார்.
அதேவேளை, 1981ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 27,953 இலங்கைப் படையினர் போரில் கொல்லப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (த)

**பாதுகாப்புச் சேவைகளுக்கான வெற்றிடங்கள்**
எமது நிறுவனத்தில் ஆண் பாதுகாப்பு ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.
01.J.S.O 02. A.S.O 03. S.O
பாதுகாப்புத் துறையில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றிருப்பவர்களும் (போலீஸ், இரா ணுவம், நேவி ) விண்ணப்பிக்கலாம்.
சமுகமளிக்கும் நேரம்:- காலை 10 மணி தொடக்கம் 01.00மணிவரை. மாலை 5.00 மணிதொடக்கம் 7மணிவரை.
வரும்பொழுது அடையாளஅட்டைப் பிரதி, குடும்ப அட்டைப் பிரதி எடுத்துவரவும்.
PERFECT SECURITY SERVICES Pvt.Ltd.
125B, K.K.S. ROAD, KOKUVIL JUNCTION, KOKUVIL. JAFFNA. SRILANKA.
தொலைபேசி இல 0778919367 - 0217200170

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

**வீட்டுடன் வயல் காணி விற்பனைக்கு**
3½ பரப்பில் வீடும், 7 பரப்பில் வயலும் உள்ளது. பிரித்தும் கொடுக்கப்படும்.
முகவரி: மாவடி, மூளாய் றோட்டில் கண்ணகை அம்மன் கோயில் கேணியின் மேற்குப் பக்க லேனில் உள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 078 617 3033 (39303) (10,6)

**அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**
புத்தூர் சோமாஸ்கந்தன் சனசமூக நிலைய கட்டட வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.
முதலாம் பரிசு - 1252
2ஆம் பரிசு - 67
3ஆம் பரிசு - 402
குறிப்பு: 7 நாள்களுக்குள் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும்.
ஆதரவளித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.
சோமாஸ்கந்தன் சனசமூக நிர்வாகத்தினர்.
தொடர்புகளுக்கு: 077 036 6296
(39300) (10,6)





வடமாகாணசபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர்கள் அறிமுகமும் தேர்தல் பிரசாரமும் உருத்திரபுரம் கூழாவடியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ஐ-18)

# ஒரே மேடையில் பகிரங்க விவாதத்துக்கு சி.வி.விக்னேஸ்வரன் வரவேண்டும்

## அழைப்பு விடுக்கிறார் ஈ.பி.டி.பி. தவராசா

யாழ்பாணம்.ஒக.30

கொண்ட கொள்கையில் உறுதியும் நம்பிக்கையும் இருந்தால் ஒரே மேடையில் பகிரங்கமாக பேச முன்னாள் நீதியரசரும் வடமாகாண சபையின் கூட்ட மைப்பு முதலமைச்சர் வேட்பாளருமான சி.வி.விக்னேஸ்வரன் முன்வரவேண்டும் என் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் எஸ்.தவராசா அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து ஊடகங்களுக்கு அவர் அனுப்பிரவைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நமது பாதங்கள் நாளைய தலைமுறைக்கு சரியான திசையைக் காட்ட வேண்டும். யார் வெற்றி பெற்றாலும் அதன் பலாபலன்களை அனுபவிப்பவர்கள் நமது மக்களாகவே இருக்க வேண்டும்.



அடுத்தவரை இழிவுபடுத்து வதும். அவர்கள் மீது சேறு பூசுவதும், அவதூறு சுமத்துவதுமான அனைத்தையும் அரசியலின் பெயரால் இலகுவாக செய்து விட முடிகின்றது. இந்த நாகரிகமற்ற போக்கை நாம் மாற்றியமைக்க முடியும்.

சக வேட்பாளர் என்பதற்கு அப்பால் நீதிபதி என்ற மரியாதைக்குரியவராக விக்னேஸ்வரன் உள்ளார். அந்த மரியாதை காரணமாவும் அவர் மீதுள்ள நம்பிக்கை காரணமாவும் இந்த அழைப்பை விடுக்கின்றேன்.

பொது மேடை ஒன்றில் உங்கள் கருத்தை நீங்கள் முன்வையுங்கள்.எனது கருத்தை நான் முன்வைக்கிறேன்.

மேலை நாடுகளில் இவ்வாறானதொரு நாகரிகமான பரப்புரை நடைமுறை உண்டு என்பதைநீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

ஒரே மேடையில் இரு வேறு கருத்துக்கள் கொண்டவர்கள்இருந்து தமது கருத்துக்களை மக்கள் முன்னிலையில் வைக்கும் பக்குவத்துக்கு இங்கு எவரும் பழக்கப்பட்டதாக தெரியவில்லை.

கொண்ட கொள்கையில் உறுதியும் உண்மையும் உள்ளது என்று நம்புகின்றவர்களுக்கு இது சாத்தியம்.

நான் ஏற்றிருக்கும் கொள்கை உண்மையானது என்ற உறுதியும் நம்பிக்கையும் எனக்கு உண்டு. மதிப்புக் குரிய உங்களுக்கும் அவ்வாறு இருந்தால் நாம் பொது மேடையில் தோன்ற முடியும்.

இந்த பகிரங்க அழைப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வீர் களாயின் எதிர்கால அரசியலாளர்களுக்கு நாம் வழிகாட்டிகளாக இருந்தவர்களாவோம்.

தனித்தனியாக பல மேடை களில் ஒருவரை சாடுவது அர்த்தமற்றது.

அது உங்களைப் போன்றவர்களுக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் பொருத்தமானதல்ல என்பது எனது பணிவான அபிப்பிராயமாகும்.

எனது பகிரங்க வேண்டுகோளை ஏற்பீர்களாயின் இது தொடர்பான மேலதிக ஏற்பாடுகளை இணைந்து செய்வ தற்கு என்னை தொடர்பு கொள்வீர்கள் என நம்புகின்றேன்- என்றுள்ளது. (ஐ)







# தேர்தலில் மக்கள் அதிகளவில் வாக்களித்தால் மாகாணசபைக்கான அதிகாரத்தைப் பெறமுடியும்

## அரசதரப்பு வேட்பாளர் சுபியான் கருத்து



நேர்காணல் : சோபனா

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவனான அஹமட் சுல்தான் சுபியான் இந்தியாவில் இஸ்லாமியச் சிறப்புப் பட்டம் பெற்றவர். தற்போது யாழ்ப்பாணத்தில் நகை வியாபா ரம் செய்துவரும் இவர், யாழ். மாநகர சபை, அகில இலங்கை ஜம்மியத்தில் உலமா என்பவற்றின் உறுப்பினராகவும், சர்வதேசக் குழுவின் உபதலைவராகவும் உள்ளார். வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள அவருடனான நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.

கே: வடமாகாண சபைத் தேர்தலில் நீங்கள் போட்டியிடத் தீர்மானித்ததற்கான காரணமென்ன?
ப: போரினால் பலவகையிலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவு டன் உயர்த்த வேண்டும் என்ற நோக்குடனும், எங்களு டைய பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்று சிந்தனையுடனும் நான் அரசியலில் குதித்தேன். ஆளுங்கட்சியின் ஊடாகவே அவற்றைச் சாத்தியப்படுத்தலாம் என்ற நம்பிக்கையுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து செயற்பட்டு வருகிறேன்.
2009 ஆம் ஆண்டு நடைபெற்ற யாழ். மாநகர சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்டேன். அதில் போட்டியிட்ட 23 வேட்பாளர்களில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றவர்களின் மூன்றாவது இடத்தை பெற்றுக் கொண்டு, கடந்த 4 வருடங்களாக மக்கள் சேவையைச் செய்து வருகிறேன். இந்த நிலையில் தான் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இதனை நானும் விரும்பி ஏற்றுக் கொண்டேன். ஏனெனில் மாநகர சபையை விடவும் மாகாண சபை அதிகாரம் கூடிய அலகு. எனவே மாநகர சபைமூலம் செய்வதை விடவும், மாகாண சபைமூலம் கூடுதலான அபிவிருத்திகளை மேற் கொள்ள முடியும். இலங்கையைப் பொறுத்த வரையில் வடமாகாண சபைத் தேர்தல் அறிவிக் கப்பட்டிருப்பது கூடுதல் நன்மையைப் பெற்றுத்தரும். மத்திய அரசுடன் நேரடியாக தொடர்பை ஏற்படுத்தி பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.
கே: நீங்கள் மாகாணசபைத் தேர்தலில் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் எத்தகைய பணிகளை மேற்கொள்வீர்கள்?
ப: கடந்த 4வருடங்களில் மாநகர சபை உறுப்பினராக செயற்பட்ட காலத்தில் எனது பதவி அதிகாரத்தை விடவும் தனிப்பட்ட ரீதியில் கூடுதலான பணிகளைச் செய்திருக்கிறேன். இன, மத பேதமின்றி எனது சேவையைச் சகல மக்களுக்கும் வழங்க நான் ஒருபோதும் தயங்கியதில்லை.
மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கயை விடவும் பொருளாதார அமைச்சிடம் இருந்து விசேட நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று -கிட்டத்தட்ட 7 மில்லியன் ரூபா நிதியைப் பெற்று- வீதிப் புனரமைப்பு, சந்தைக் கட்டடப் புனரமைப்பு, கல்லூரிக் கட்டடங்கள் புனரமைப்பு, மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் போன்றவற்றைச் செய்துள்ளேன். மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றால் இதற்கு மேலும் கூடுதலான பணியை மக்களுக்கு ஆற்றமுடியும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக பாதிக்கப் பட்ட மக்களுக்கு பல நன்மைகளை என் னால் பெற்றுக் கொடுக்க முடியும் என நம்புகிறேன்.
கே: அந்தப் பணிகள் எத்தகைய தன்மையுடையதாக அமையும் என எதிர்பார்க்கலாம்?
ப: கடந்த 30 வருட காலத்தில் போரால் பாதிக்கப்படாத எந்த ஒரு நபரும் வடக்கில் இருக்கமாட்டார். அனைவரும் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். போர் முடிந்த பின்னரும் அவர்களால் இன்னமும் அத்தகைய பாதிப்புகளில் இருந்து மீளமுடிய வில்லை. பல்வேறு பிரச்சினைகளை சுமந்தவர்களாகவே இருக்கிறார்கள். மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகள், பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈடுகள் சரியாகக் கிடைக்கவில்லை. இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் முழுமை பெறவில்லை, காணாமற் போனவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. விதவைப் பெண்களது வாழ்வாதாரம் கட்டியெழுப்பப்படவில்லை. மக்களது காணிகளில் ராணுவம் இருப்பதால் மக்கள் குடியமர முடியாத நிலை என்று பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றைத் தீர்க்க ஒரு மாகாண சபை உறுப்பினர் என்ற ரீதியில் நான் பாடுபடுவேன்.
கே: மாகாணசபை, அதிகாரங்கள் எதுவுமற்ற ஒன்று என்ற கருத்தே பரவலாக உள்ளது. இந்த நிலையில் வடமாகாணத் தேர்தலில் மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?
ப: கடந்த காலங்களில் மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டதாலும், அரசியல் தலைவர்களால் ஏமாற்றப்பட்டதாலுமே தேர்தல்களில் பெரிதாக ஆர்வம் காட்டியிருக்கவில்லை. எனினும் மக்களது மனதில் மாற்றத்தைக் கொண்டு வந்து அவர்களை அதிகளவில் வாக்களிக்கச் செய்வதன் மூலம் மாகாண சபைக்கான அதிகாரத்தை பெற்றுக் கொள்ள முடியும் எனக் கருதுகிறேன்.















# மின்சார சபை உத்தியோகத்தருக்கான அவசர முதலுதவிப் பயிற்சி




இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்களுக்கான அவசர முதலுதவிப் பயிற்சி முகாம் நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. வடமாகாண இலங்கை மின்சார சபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சி முகாமில் வடமாகாணத்தைச் சேர்ந்த 90 உத்தியோகத்தர்கள் பங்குபற்றி இருந்தனர். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர் செ.செல்வரஞ்சன். உதவி மாவட்ட ஆணையாளர் சோ.ஈழநேசன் ஆகியோர் முதலுதவிப் பயிற்சிக்கான விரிவுரைகளை வழங்கினர். இதன் போது வடமாகாண மின்சார சபை யின் உதவி பொது முகாமையாளர் யூ.குணதிலக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இதன் போது உத்தியோகத்தர்களுக்கு செயல்முறை ரீதியான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. (வ-14)

### தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும்

# ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் விவரங்கள் திரட்ட நடவடிக்கை

அச்சுவேலி. ஒக. 30

தேசிய பாடசாலைகளில் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் ஜனவரியில் இருந்து இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கு வசதியாக ஆசிரியர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன. இதற்கான படிவங்களையும் சுற்றறிக்கைகளையும் கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைப் பிரிவு தேசிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

தேசிய பாடசாலைகளின் நிர்வாகம் மத்திய கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் ஆளணி மேலதிக நிலையில் இருப்பதாகவும் ஆசிரியர்கள் நீண்டகாலமாக ஒரே பாடசாலையில் கடமையில் இருந்து வருவதாகவும் கூறப்பட்டு வந்தது. இதில் வலயக் கல்வி நிர்வாகம் தலையிட முடியாமல் இருந்தது.

> தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் ஆளணி மேலதிக நிலையில் இருப்பதாகவும் ஆசிரியர்கள் நீண்டகால மாக ஒரே பாடசாலையில் கடமையில் இருந்து வருவதாகவும் கூறப்பட்டு வந்தது.

தேசிய பாடசாலைகளின் ஆசிரியர் ஆளணியைபாடசாலைகளின்தேவைக்கு அமைய சீராக்கம் செய்வதற்கு வசதியாக 20 வருடங்கள் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக கடமைபுரிந்தவர்கள் இந்த வருடம் ஜனவரியில் இடமாற்றம் செய்யப்பட்டனர். அடுத்த வருடம் ஜனவரியில் பத்து வருடங்களும் அதற்கு மேலும் சேவையை பூர்த்தி செய்தவர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

நீண்டகாலம் தொடர்ந்து சேவையாற்றியவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் தேசிய ஆசிரியர்கள் இடமாற்றக் கொள்கைக்கு அமைய எதிர்காலத்தில் தேசிய பாடசாலை ஆசிரியர்களும் இடமாற்றத்துக்கு உள்ளாக்கப்படவுள்ளனர். இதற்கு ஏற்ற வகையில் புதிய தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையில் விசேட அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது. (வ-11)



### அரியாலையில் தொடர் கதையாகும்

# சட்டவிரோதமான மணல் அகழ்வு

யாழ்ப்பாணம்.ஒக.30

அரியாலை கிழக்குப் பகுதியில் உள்ள மண்வளத்தைச் சட்டவிரோதமாக அகழ்ந்து கடத்தும் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக தீவிரமாக மீண்டும் இடம்பெற்று வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பகல் முழுவதும் ஓய்ந்திருக்கும் மணல் கடத்தல் பேர்வழிகள் இரவு வேளைகளில்எவ்வித அச்சமுமின்றிமண்ணை அகழ்ந்து சென்று விற்பனை செய்கின்றனர்.

இரவிரவாக டிரக்டர்கள் பல தொடரணியாக மண் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாக அந்தப் பகுதி சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்குப் பகுதிகளில் உள்ள தனியார் காணிகள், வெட்டவெளி நிலங்கள் என்பவற்றிலேயே மண் அகழ்ந்து ஏற்றப்படுகிறது.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக நல்லூர் பிரதேசசபை மற்றும் பொலிஸார் பல நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் மண் அகழ்வு தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. (வ-135)

# தலைதூக்கும் கசிப்பு உற்பத்தி

### மீண்டும் வலி.கிழக்கில்

அச்சுவேலி, ஒக.30

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ்வரும் கிராமங்கள் சிலவற்றில் கசிப்பு உற்பத்தி விற்பனை மீண்டும் தலைதூக்கியுள்ளது. சாதாரண தினங்களில் மறைத்து வைத்துமேற்கொள்ளப்படும் கசிப்பு வியாபாரம் போயா தினங்களில் வெளிப்படை யாகவே மேற்கொள்ளப்படுகிறது.

இதனை தடுக்க மற்றும் தகவல் திரட்ட முற்படும் உள்ளூர் சிவில் அலுவலர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

வலி.கிழக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பொலிஸ்-பொது மக்கள் நல்லுறவு கூட்டத்தில் கசிப்பு உற்பத்தி விற்பனை தொடர்பாக காரசாரமாக விவாதிக்கப்பட்டது. உரும்பிராய் பகுதியில் சில கிராமங்களில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டது. மேற்படிதொழிலில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் சில 'தாதாக்கள்" உள்ளூர் சிவில் அலுவலர்களான, கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் மீது வன்முறையை பிரயோகித்து அச்சுறுத்தல் விடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் வெளிப்படைத் தன்மையுடன் உரிய நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்கள் நல்லுறவை பேண வேண்டும் என பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு கலந்துரையாடலில் கலந்து கொண்ட பிரமுகர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு சாதகமாக பொலிஸ் தரப்பில் சாதகமான பதில் அளிக்கப்பட்டது. (வ-11)



நேற்றைய பதினெட்டாம் திருவிழாவில் நல்லைக் கந்தன் திரு வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சிதந்த வேளை...

## பக்தர் எமைக் காத்திடு

நாடும் வரம் அருள்பவனே
நல்லூரின் நாயகனே
நல மருளிக் காப்பவனே
உமையின் மைந்தா!
பாடும் பணி அருள்பவனே
ஐங்கரனின் சோதரனே
அப்பனுக்கே பாடம் சொன்ன
சுவாமி நாதா!
பக்தர் நலன் காப்பவனே
தேசம் காக்கும் திருமகனே
மயிலேறி வருவாயா?
எமைக் காக்க!

**சிந்து சிவதாஸ், சுதுமலை**

## இது தகுமோ முருகா

கொடி ஏறிப் பவனி வரும் முருகா-எம்
கோலம் மட்டும் மாறாத தேனோ
அலங்காரக் கந்தனாய் நீயும்
அலங்கோல வாழ்வுடனே நாமும்
இது தகுமோ நல்லூர் வாழ் முருகா
எம் வாழ்வதையும் அழகாக மாற்று
உனக்கு மட்டும் வசதிகளோ கோடி
எமக்கு மட்டும் எது விதியோ அறியோம்
ஆண்டாண்டாய் அழுது புரள் கின்றோம்
மாளாத எம் துயரை மாற்று

**வேல்நந்தன், புலோலி**

## சகியே நீ சொல்லடி

இராகம்-அடானா
தாளம்-ஆதி

**பல்லவி**

நல்லூர்க் கந்தனிடம் எடுத்துச் சொல்லடி-சகியே
கணம் வராவிடில் என் மனம் வாடுமென்று
(நல்லூர்)

**அனுபல்லவி**

மாலைப் பொழுதும் மயில், தோகை அழகும் என்னை
வெந்தழல் நெருப்பாக தினம் தினம் வாட்டுதென்று
(நல்லூர்)

**சரணம்**

பன்னிரு தோளழகும் பரந்த நீள் விழி அழகும்
கண்டதும் என்மனது பாகாய் உருகுதடி
கனவில் வந்து என்னிடம் காதல் மொழி பேசிய
கந்தனவன் இன்னும் இங்கு வராதது ஏனென்று
(நல்லூர்)

**திருமதி மலர்விழி கனகசபை**
**சண்டிலிப்பாய்**




உதயன்
30/08/2013

## தனியாக செல்லாதீர்கள் பெண்களே: நாட்டு நிலைமை சரியில்லை

புதுடில்லி, ஓக.30
இந்தியாவில் பெண்கள் யாரும் தனியாக வெளியே செல்ல வேண்டாம். அந்தளவுக்கு நாட்டு நிலைமை சரியாக இல்லை என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமமாலி.
மும்பையில் பெண் ஊடகவியலாளர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்டமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:
"ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. நாட்டு நிலைமை சரியில்லை. பெண்கள் யாரும் வீட்டை விட்டுப் போக வேண்டாம். அப்படிப் போவதாக இருந்தால் தனியாக போக வேண்டாம், துணையுடன் போய் வாருங்கள். தனியாகச் சென்றால் எதுவேண்டுமானாலும் நடக்கலாம். இந்த அறிவுரையையே என்னால் கூறமுடியும்" என்று தெரிவித்துள்ளார்.
ஹேமமாலியின் இந்தக் கருத்து அரசியல்வாதிகளிடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## இலங்கைக்கு எதிராக இரத்தப் போராட்டம்



சென்னை, ஓக.30
இலங்கையை பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று சென்னையில் இரத்தக் கையெழுத்துப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இந்திய அரசு எதிர்வரும் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது என்றும், இலங்கையைப் பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியே போராட்டம் நடத்தப்பட்டது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இன்று இந்த இரத்தக் கையெழுத்துக்கள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## திரைப்படப் பாணியில் துணிகரக் கொள்ளை

### ரூபா 9 கோடி 'அபேஸ்'

மும்பை, ஓக.30
பட்டப்பகலில் 'ஏ.ரி.எம்' இயந்திரங்களுக்குப் பணத்தை எடுத்துச் சென்ற வங்கியின் வாகனத்தில் இருந்து ரூபா 9 கோடி திரைப்படப் பாணியில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.
இந்தத் துணிகரக் கொள்ளை மும்பை நகரில் தானே பகுதியில் நடந்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:
தானே அருகே உள்ள நலசோபரா மாவட்டத்தில் பதங்கர் பூங்கா பகுதியில் உள்ள வங்கி ஒன்றின் வாகனம் 'ஏ.ரி.எம்' இயந்திரங்களில் இடுவதற்கான பெருந்தொகைப் பணத்துடன் வங்கியில் இருந்து புறப்பட்டது. குறித்த வங்கியின் 'ஏ.ரி.எம்' இயந்திரங்களுக்கு பணத்தை நிரப்புவதே அந்த வாகனத்தின் வேலை. அவ்வாறு ஒரு 'ஏ.ரி.எம்' இயந்திரத்தருகே வாகனத்தை நிறுத்தி கீழே இறங்கினார்கள் வங்கி உத்தியோகத்தர்கள்.
அவ்வளவுதான் 'ஏ.ரி.எம்' இயந்திரத்தருகே நின்றிருந்த உயர் ரக 'குவாலிஸ்' காரில் இருந்து மளமளவென வெளியே வந்தது ஒரு கும்பல். ஒவ்வொருவரது கையிலும் 'ஹொக்கி' மட்டைகள். வங்கி உத்தியோகத்தர்கள் சுதாகரிப்பதற்கு முன்னரே சரமாரியாகத் தாக்கத் தொடங்கியது அந்தக் கும்பல்.
வங்கி ஊழியர்கள் அவர்களுடன் போராடிக் கொண்டிருக்க அந்தக் குழுவில் இருந்த சிலர் வங்கி வாகனத்துக்குள் இருந்த பணத்தை காருக்கு மாற்றிக் கொண்டார்கள். முழுப் பணத்தையும் எடுத்த பின்னர் காரில் ஏறி மறைந்தது அந்தக் கும்பல்.
அவர்கள் கொண்டு சென்ற பணத்தில் மொத்தப் பெறுமதி சுமார் 9 கோடி ரூபா என்று வங்கி நிர்வாகம் தெரிவித்துள்ளது. கொள்ளையர்களைப் பிடிப்பதற்கு தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர் மும்பைப் பொலிஸார். (ற)

# தமிழக மீனவர்களை விடுவிக்க உடனே நடவடிக்கை எடுங்கள்

## மீண்டும் கடிதம் எழுதினார் ஜெயலலிதா



சென்னை, ஓக.30
இந்திய கடல் எல்லையில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுகின்றனர். அவர்களை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்கு மீண்டும் கடிதம் எழுதியுள்ளார்.
இந்த விடயம் குறித்து நேற்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"கடந்த 26ஆம் திகதி கடலில் மீன்பிடிக்கச் சென்ற பாம்பன் பகுதி மீனவர்கள் 35 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ள மற்றொரு சம்பவத்தை இங்கு உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.
ஏற்கனவே 36 நாகப்பட்டினம் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்து சிறைக்காவல் நீடிக்கப்பட்டு, பல வாரங்களாக அவர்கள் சிறையில் வாடி வருகின்றனர். ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் 41 பேர் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை உடனடியாக விடுவிக்க தமிழக அரசு சார்பில் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தியும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
தமிழக மீனவர்கள் விவகாரத்தில் மத்திய அரசு தொடர்ந்து மௌன நிலையையே கடைபிடித்து வருகிறது. இந்த சம்பவங்களால், தமிழக மீனவர்களின் வாழ்வுரிமை பாதிக்கப்பட்டு, அவர்கள் சொல்லொணாத் துயரத்தில் உள்ளனர்.
கைது செய்யப்படும் மீனவர்கள் மட்டும் அல்லாமல், அவர்களது குடும்பத்தினர் வறுமையிலும், உறவுகளை பிரிந்தும் வாடுகின்றனர். 2011ஆம் ஆண்டு ராமேஸ்வரம் மீனவர்கள் 5 பேர் மீது பல்வேறு வழக்குகள் போட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.
பல்வேறு சமயங்களில் கைது செய்யப்பட்டு சிறையில் வாடும் 82 மீனவர்களையும் கடந்த 26ஆம் திகதி கைதான 35 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## இந்தியாவுக்கு எதிரான சக்திகள் வேரறுக்கப்படும்

### இணை அமைச்சர் ஆர்.பி.என்.சிங்

புதுடில்லி, ஓக.30
இந்தியாவுக்கு எதிரான சக்திகள் அனைத்தும் வேரறுக்கப்படும் வரை ஓய்வில்லை என்று கூறியுள்ளார் மத்திய இணை அமைச்சர் ஆர்.பி.என். சிங்.
"பயங்கரவாதத்துக்கு எதிராக மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுத்து ஒடுக்கி வருகிறது. இந்தியாவுக்கு எதிராக செயல்படும் அனைத்து பயங்கரவாதிகளையும் சிறையின் பின் தள்ளும் வரை ஓய்வே கிடையாது" என்று தெரிவித்துள்ளார் அவர்.
இந்தியன் முஜாகிதீன் அமைப்பின் நிறுவுனர் யாசின் பத்கல் நேபாள எல்லையில் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். (ற)

## நெருக்கடி நிலை தமிழகத்தில்

### பா.ம.க. குற்றச்சாட்டு



சென்னை, ஓக.30
தமிழகத்தில் அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. அதை எதிர்த்துப் போராட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பா.ம.க. கட்சித் தலைவர் ஜி.கே.மணி.
தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜி.கே.மணி.
அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:
"தமிழகத்தில் அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. அதனை எதிர்த்து தமிழகத்திலே ஜனநாயகத்திலே அக்கறை உள்ள அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார். (ற)

## கூடங்குளத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு

சென்னை, ஓக.30
தமிழகக் கடலோரங்கள் ஊடாக தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று இந்திய மத்திய உளவுத்துறை விடுத்துள்ள எச்சரிக்கையை அடுத்து கூடங்குளம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.
வழமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை விடவும் தற்போது 5 அடுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள தமிழக கடலோரக் காவற் பிரிவு பொலிஸார், அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திகரமாக இருக்கின்றன என்றும் தெரிவித்துள்ளனர்.
கூடங்குளம் அணுமின் உலையின் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அணுமின் நிலையத்தை ஆளில்லா விமானம் மூலம் கண்காணிக்கவும் திட்டமிடப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## மாயமாக மறைந்தது சோனியா தொலைபேசி

### தேடுதல் வேட்டையில் சைபர் பொலிஸார்



புதுடில்லி, ஓக.30
காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் கைத்தொலைபேசி திடீரெனக் காணாமற்போயுள்ளது. அதையடுத்து இந்திய சைபர் பிரிவுப் பொலிஸார் கைத்தொலைபேசியைக் கண்டு பிடிக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர்
காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் பிளாக் பெர்ரி ரக கைத்தொலைபேசியை உபயோகித்து வந்தார். கடந்த இரு நாள்களுக்கு முன்னர் அந்தக் கைத் தொலைபேசி காணாமற் போயுள்ளது. சோனியா காந்தி உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியபோது காணாமல் போன அந்த கைத்தொலைபேசி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.
அந்தக் கைத்தொலைபேசியில் முக்கியமான மின்னஞ்சல்கள் மற்றும் குறுந்தகவல்கள் சேமிக்கப்பட்டிருப்பதை அடுத்து அந்தக் கைத்தொலைபேசியை உடனடியாகக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் இந்திய சைபர் பிரிவுப் பொலிஸார் இறங்கியுள்ளனர்.
எனினும் இதுவரை அந்தக் கைத்தொலைபேசி குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது. (ற)

## முஜாகித்தீனை அமைப்பின் நிறுவுனர் நேபாள எல்லையில் மடக்கப்பட்டார்

புதுடில்லி, ஓக.30
பல்வேறு தீவிரவாதச் செயல்களுடன் தொடர்புடைய இந்திய முஜாகித்தீன் பயங்கரவாத அமைப்பை உருவாக்கிய யாசின்பத்கல் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய மத்திய அமைச்சர் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

**இந்தியாவில் இடம்பெற்ற பல் வேறு பயங்கரவாதச் செயற் பாடுகளுக்கு இந்தியன் முஜாகி தீன் அமைப்பு காரணம் என்று கூறப்படுகின்றது. சில குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு குறித்த அமைப்பு உரிமை கோரியுமிருந்தது.**

கடந்த சிலவாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட அப்துல் கரீம் துண்டா கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே யாசின்பத்கல் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.
இந்தியாவில் இடம்பெற்ற பல்வேறு பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு இந்தியன் முஜாகிதீன் அமைப்பு காரணம் என்று கூறப்படுகின்றது. சில குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு குறித்த அமைப்பு உரிமை கோரியுமிருந்தது. அந்த அமைப்பால் நடத்தப்பட்ட தாக்குதலில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.
அதையடுத்து யாசின்பத்கல் தேடப்படுவோர் பட்டியலில் இணைக்கப்பட்டார்.
இந்தநிலையில் யாசின்பத்கல் நேபாள எல்லையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
பத்கல் கைது தொடர்பாக, மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே கூறுகையில், "இந்தியன் முஜாகிதீன் அமைப்பை உருவாக்கிய யாசின்பத்கல் நேபாளம் - இந்திய எல்லையில் நேற்றுமுன்தினம்
இரவு கைது செய்யப்பட்டுள்ளார். தற்போது அவர் பீகார் பொலிஸாரின் காவலில் உள்ளார்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# சிலுவைப் போராட்டம்

## பணி நீக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து

அசன்சியான், ஓக.30

பராகுவே நாட்டில் பணி நீக்கப்பட்ட ஊழியர்கள் தம்மை சிலுவையில் அறைந்து கொண்டு விநோத போராட்டத்தை நடத்தியுள்ளனர்.




தென் அமெரிக்க நாடான பராகுவேவின் தலைநகர் அசன்சியானில் வேன்கார்டியா என்ற நிறுவனம் ஒன்று இயங்கி வருகின்றது. அதன் பணியாளர்கள் கூடுதல் நேர பணிக்கான ஊதியம், மருத்துவ உதவித் தொகை மற்றும் ஒய்வூதியம் வழங்க வேண்டும் என்று பல கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்தினர். அந்தப் போராட்டத்தை அடுத்து தொழிலாளர் அமைப்பைச் சேர்ந்த 8 பேரை வேன்கார்டியா நிர்வாகம் அதிரடியாகப் பணி நீக்கம் செய்தது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தொழிலாளர்கள் சிலுவையில் அறைந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 20 நாள்களுக்கு மேலாக நடக்கும் இந்தப் போராட்டத்தில் ஒரு பெண் உள்பட 8 பேர் கலந்துகொண்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் 5 பேரை மீண்டும் வேலைக்கு சேர்த்து கொள்வதாகவும், ஏனையோர் சட்டப்படி வழக்கை சந்திக்க வேண்டும் என்றும் வேன்கார்டியா நிர்வாகம் அறிவித்துள்ளது.

அதையடுத்து தமது விநோத போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர் தொழிலாளர்கள். (ற)



உயிரிழந்ததாகக் கருதப்பட்ட தனது மகன் உயிருடன் கிடைத்ததால் அளவில்லா மகிழ்ச்சியடையும் ஒரு தந்தையின் உணர்ச்சி வெளிப்பாடே மேலுள்ள புகைப்படங்கள். சிரியாவில் கடந்த 21 ஆம் திகதி நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலில் காணாமற்போனான் இந்தச் சிறுவன். சிறுவன் இறந்துவிட்டான் என்று கருதிய இந்தத் தந்தை மனமுடைந்து போனார். இந்தநிலையில், சிறுவன் தற்போது உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளான். இறந்துவிட்டதாகக் கருதிய மகனைத் திடீரெனக் கண்டதால் பாசத்துடன் தனது மகனைக் கட்டித் தழுவி கண்ணீர் விட்டார் அந்தத் தந்தை. (ற)



# குழந்தையை கொன்றுவிட்டு குத்துச்சண்டை பார்த்த பெண்

பெத்லகேம், ஓக.30

பிறந்த குழந்தைக் கொன்றுவிட்டு பெண் ஒருவர் 'ஜாலியாக' குத்துச் சண்டை பார்த்துள்ளார். இந்தச் சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தின் பெத்லகேம் நகரைச் சேர்ந்தவர் 26 வயதுடைய அமன்டா கேதரின் ஹெயின். திருமணம் ஆகாமலேயே கர்ப்பிணியான கேதரின் யாருக்கும் தெரியாமல் அதை மறைத்திருந்தார்.

கடந்த வாரம் தனது ஆண் நண்பர்களுடன் சேர்ந்து குத்துச் சண்டை பார்த்துக் கொண்டிருந்தார் கேதரின். திடீரென அங்குள்ள குளியலறைக்கு சென்றார். சுமார் 40 நிமிடங்களுக்கு பின் வெளியே வந்த ஹெயினின் உடைகளில் இரத்தக்கறை படிந்திருந்தது. பின்னர் வெளியே சென்று ஒரு சிகரெட்டை புகைத்து விட்டு மீண்டும் உள்ளே வந்து குத்துச் சண்டையைப் பார்க்கத் தொடங்கினார் கேதரின்.

மறுநாள் அந்த குளியலறையை சோதனையிட்ட ஊழியர் அங்கே ஒரு பிளாஸ்டிக் பையில் ஒரு ஆண் குழந்தையின் உடல் இருந்ததை கண்டுபிடித்தார். அதைத்தொடர்ந்து கைது செய்யப்பட்ட கேதரின் பொலிஸ் விசாரணையில் உண்மையை ஒத்துக் கொண்டார்.

தனக்கு குழந்தை பிறந்தது என்றும், அதை உடனேயே மூச்சடக்கி கொலை செய்து விட்டாகவும் அவர் கூறியுள்ளார். தற்போது அவர் மீது கொலைக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ற)

# சிரியா மீது பாயத் தயார்

## நட்பு நாடுகளுடன் ஒபாமா இடைவிடாது ஆலோசனை

வோஷிங்டன், ஓக.30

சிரியா மீது இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கான இறுதிக்கட்ட ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா. நட்பு நாடுகளின் தலைவர்களுடன் இந்த விடயம் குறித்து தொலைபேசியூடாக தொடர்புகொண்டு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



சிரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் ஒரு நாள் மட்டும் நீடிக்கக் கூடிய அளவில் குறுகிய அளவில் இருக்காது என்று ஒபாமா நிர்வாகம் கருதுகின்றது. அதனால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனால் வரும் பாதிப்புகள் குறித்தே அதிகம் ஆலோசிக்கப்படுகின்றது என்கின்றன வெள்ளை மாளிகை வட்டாரங்கள்.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர், ஆஸ்திரேலியா, பிரான்ஸ் நாடுகளின் தலைவர்களுடனும் ஒபாமா ஆலோசனை நடத்தியுள்ளார். டேவிட் கமரூனுடன் கடந்த 4 நாள்களில் 2 முறை ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

சிரியாமீது இராணுவ நடவடிக்கை எடுப்பது என்ற முடிவை அமெரிக்கா எடுத்தபின்னர், இதுவரை 88 வெளிநாட்டு அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு அந்த விடயம் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது என்று வெள்ளை மாளிகைத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

### விரைவில் தாக்குதல்

துருக்கியில் மேற்கத்திய நாடுகளின் தூதர்கள், சிரிய எதிர்க் கட்சியான சிரிய தேசிய கூட்டணிதலைவர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளனர். அதையடுத்து தாக்குதல் எந்நேரமும் தொடங்கப்படலாம் என்று கூறப்படுகின்றது. அதை ஆஸ்திரேலியாவும் உறுதிப்படுத்தியுள்ளது.

### விளைவு விபரீதம்

சிரியா மீதான இராணுவ நடவடிக்கை குறித்து நன்றாக யோசித்து முடிவெடுக்குமாறு அமெரிக்காவை மீண்டும் எச்சரித்துள்ளன ரஷ்யா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள். போர் ஏற்படுமானால் அந்தப் பிராந்தியம் முழுவதும் தீப்பற்றும் என்றும் அவை தெரிவித்துள்ளன. (ற)

### சிரியாவுக்கு எதிராக பிரிட்டன் தீர்மானம்

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சிரியாவுக்கு எதிராக பிரிட்டன் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. சிரிய மக்கள் மீது சிரிய அரசு இரசாயனத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது என்றும், அங்குள்ள மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை தேவை என்றும் அந்தத் தீர்மானம் கூறுகின்றது. எனினும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள ரஷ்யா, "தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்னர் சிரியாவில் உள்ள ஐ.நா. இரசாயன ஆய்வாளர்கள் தமது பணிகளை முடிக்கட்டும்" என்று தெரிவித்துள்ளது.

# உருவாகின்றது மனித மூளை; ஆஸ்திரியாவில் புது முயற்சி



வியன்னா, ஓக.30

முதன் முறையாக 'ஸ்டெம் செல்'களை பயன்படுத்தி மனித மூளையை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

விஞ்ஞான ஆராய்ச்சிகளில் நுண்ணுயிர் கிருமிகளை வளர்ப்பதற்காக பெட்ரி எனப்படும் தட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தத் தட்டுக்களைப் பயன்படுத்தியே இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தட்டுகளில் முதன் முறையாக 'ஸ்டெம் செல்'லைப் பயன்படுத்தி மனித மூளை யின் ஒத்த பகுதியை உருவாக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர் ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் உள்ள ஆராய்ச்சியாளர்கள்.

இதுகுறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள துணைச்செயலர் ஜுவொர்கன் நோபிளிச் கூறுகையில்,

"தற்போது அந்த பகுதி ஒன்பது வாரக்கருவினுடையமூளையை ஒத்தது போன்ற தோற்றத்தில் மூன்றிலிருந்து நான்கு மில்லிமீற்றர் அளவில் வளர்ந்துள்ளது.

இன்னமும் முழுவதும் வளர்ச்சியடையாத போதிலும், மூளையைப் போன்றே முதுகு புறணி, முன்மூளையின் கீழ்ப்புறம் மற்றும் முதிராத ஒரு விழித்திரை போன்றவை அதில் உள்ளன.

அதில் உருவாகியுள்ள பகுதிகள் சரியானவை என்ற போதும், அவை ஒருங்கிணைந்து உருவாகவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

மூளைப் பாதிப்பால் ஏற்படக் கூடிய மனநோய் மற்றும் குழந்தைகளிடம் காணப்படும் ஆட்டிசம் போன்ற நோய்களைக் கருத்தில் கொண்டே இந்த ஆராய்சி மேற்கொள்ளப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. (ற)

# சிறுவனைக் கடத்தி விழிகள் திருட்டு

## சீனாவில் நடந்த பயங்கரம்

பீஜிங், ஓக.30

சிறுவன் ஒருவனைக் கடத்திச் சென்ற கும்பல் ஒன்று அந்தச் சிறுவனின் கண்களைத் தோண்டி எடுத்து விழி வெண் படலத்தை மட்டும் திருடிச் சென்றுள்ளது. இந்தக் கொடூரச் சம்பவம் சீனாவில் நடந்துள்ளது.

சீனாவின் சான்ஜி மாகாணத்தில் லின்பென் என்ற பகுதியில் வசித்து வந்த பின்பின் என்றசிறுவன்வீட்டுக்குஅருகே விளையாடிக் கொண்டிருந்தான். விளையாடிக் கொண்டிருந்த பின்பின் திடீரென காணாமற்போனான். அதைப் பெற்றோர்களும் கவனிக்கவில்லை. சில மணி நேரம் கழித்து பின்பினின் அலறல் சத்தம் கேட்டது. அதைக் கேட்டு ஓடிச் சென்ற அவனது பெற்றோர்கள் அதிர்ந்து போனார்கள்.

சிறுவனின் முகம் முழுவதும் இரத்தமாகக் காணப்பட்டது. அவனது இரு கண்களும் தோண்டி எடுக்கப்பட்டிருந்தன. தோண்டப்பட்ட கண்கள் இரண்டும் சிறுவனுக்கு அருகில் வீழ்ந்து கிடந்தன.



சீனாவில் உடல் உறுப்பு தானங்களுக்காக 3 லட்சம் பேர் காத்திருந்தாலும் ஆண்டுதோறும் 10 ஆயிரம் பேருக்கு மட்டும்தான் உடல் உறுப்புகள் கிடைக்கின்றன. அதனாலேயே மனித உறுப்புகளை வேட்டையாடி கள்ளச் சந்தையில் விற்பனை செய்யும் கொடூரம் அரங்கேறி வருகிறது.

உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டான் பின்பின். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிறுவனைக் கடத்திக் கண்களைத் தோண்டி எடுத்தவர்கள், விழிவெண் படலத்தை மட்டும் திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர் மருத்துவர்கள். தற்போது பார்வையற்ற நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றான் பின்பின். (ற)

# முதலிடத்தில் மடோனா



நியூயோர்க், ஓக.30

கடந்த ஆண்டு அதிகம் சம்பாதித்த பிரபலங்களின் பட்டியலில் பொப் பாடகி மடோனா முதலிடத்தில் உள்ளார்.

கடந்த ஆண்டு அதிகம் சம்பாதித்த பிரபலங்களின் பட்டியலை 'போர்ப்ஸ்' பத்திரிக்கை வெளியிட்டுள்ளது. அதில் பிரபல பொப் பாடகி மடோனா ரூ.850 கோடி சம்பாதித்து முதலிடத்தில் உள்ளார்.

இரண்டாம் இடத்தில் ஹொலிவூட் இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் (ரூ.680 கோடி). பொப்மொகல்சைமன் கொவெல் மற்றும் 50 ஷேட்ஸ் ஓஃப் கிரே புத்தகத்தை எழுதிய இ.எல். ஜேம்ஸ் ஆகியோர் ரூ.646 கோடி வருவாயுடன் மூன்றாவது இடத்தில் உள்ளனர்.

இவர்களுடன் அமெரிக்க வானொலி பிரபலமான ஹேரா வெர்ட் ஸ்டெர்னும் 3 ஆவது இடத்தை பகிர்ந்துள்ளார். (ற)

உதயன்
30/08/2013

## கண்ணீர் அஞ்சலி



எமது நெருங்கிய நண்பன்
சிவதாசன் (தாஸ்)
அவர்களின் பாசமிகு தந்தை
**சின்னத்தம்பி வேலுப்பிள்ளை**
கடந்த 27.08.2013 அன்று
காலமாகிவிட்டார்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,நீர்வேலி. (39270) (4.6.3) **நண்பர்கள்.**

## பத்தாம் ஆண்டு நினைவு



தோற்றம்
10.09.1982

மறைவு
30.08.2003

அமரர் **இரத்தினசிங்கம் அசன்**
(WEMBLEY LONDON)

77,சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (39253) (6.3.12)
**குடும்பத்தினர்**

## Birthday Remembrance In Loving Memory of



**Alfred Rajendra Sabapathypillai**

"Safe in the arms of Jesus"
Affectionately remembered and
sadly missed by his ever loving sister
Vimala, Brother Kulam,
sisters-in-law Nieces and Nephews.

"Joylyn" Uduvil Road,
Manipay.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு : 14.10.1940 இறப்பு : 31.07.2013

கடந்த 31.07.2013 புதன்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்
**ஆறுமுகம் கனேஸ்வரி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.08.2013)வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவிலும் முற்பகல் 11.00 மணியளவில் சபிண்டீகரணக் கிரியைகளும் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/11843) (7.6.3)

நவிண்டில் வீதி,
பெரியகிணற்றடி, பொலிகண்டி.

குடும்பத் தலைவர்
ம. ஆறுமுகம்

## சந்நிதியில் தவறவிட்ட நகைகள், பொருள்கள் பிரதேச செயலகத்தில்

வடமராட்சி, ஒக.30
தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் திருவிழாக் காலங்களில் பக்தர்களால் தவற விடப்பட்ட பொருள்கள், ரொக்கப் பணம் என்பன பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளன.
இரண்டு கைத்தொலைபேசிகள், ஆண்களுக்கான ஒரு மணிக்கூடு, பெண்களுக்கான 4 மணிக் கூடுகள், சிறுவர் களுக்கான ஒரு தங்க நகை, 4 க்கு மேற்பட்ட பெண்களுக்கான ரொக்கப் பணத்துடன் கூடிய கைப் பைகள் ஆகிய பொருள்களே ஒப்படைக்கப்பட்ட பொருள்களாகும்.
பொருள்களுக்குரியவர்கள் உரிய அடையாளத்தைக் உறுதிப்படுத்தி பருத் தித்துறை பிரதேச செயலகத்தில் தமது பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார். (ஒ-8)

## நாளை கலைவிழா

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றம் நடத்தும் வருடாந்த கலை விழா நாளை சனிக் கிழமை பிற்பகல்2.30மணிக்கு சங்கானை மாவடி ஞான வைர வர் மண்டபத்தில் மன்றத் தலைவர் தி.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள, முறைசாராக் கல்விப்பிரிவின் உதவிக் கல் விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்து கொள்வார். (ஒ-29)

## கிளிநொச்சி தமிழ்ச் சங்க அறிவோர் ஒன்றுகூடல்

கிளிநொச்சி, ஒக.30
கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்று கூடல் நிகழ்வு நாளை பிற்பகல் 4.30 மணிக்கு கிளிநொச்சி கனக புரம் நண்பர்கள் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.
இதில் "வாழ்வியல் தமிழ்" என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவை யூ.என். கபிரட் நிறுவனத்தின் துணைத் திட்ட மேலாளர் க.பத்மநாதன் நிகழ்த்தவுள்ளார். (வ-6)

## அன்பைக் கொடுத்து அன்பைப் பெறு

இறைவன் அறச்செம்மையுடையார்பால் அன்பு வைக்கிறான். பக்குவப்பட்டு அருட் செம்மையுடையார் பால் அருள் வைக்கின்றான்.
ஆன்மாக்கள் இறைவனிடம் அன்பாகிய வித்தை விதைத்தால் அருளாகிய பழம் பழுக்கும். நாம் இறைவனிடம் அன்பு வைக்க வேண்டும். அவன் நம்பால் அருள் வைக்கிறான்.
பணத்தைக் கொடுத்துப் பண்டத்தைப் பெறுவதுபோல் அன்பைச் செலுத்தி அருளைப்பெற வேண்டும் எனத் தெளிந்து கொள்ளுங்கள்.

ஞானக்கதிர்

நன்றி:- ஞானச்சுடர்

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**நவரத்தினராசா தணிஜன்**

மலர்வு
23.09.1983


உதிர்வு
03.06.2013

கடந்த 03.06.2013 அன்று சுவிஸ் நாட்டில் அகால மரணமான எமது குடும்ப ஒளி விளக்கு **நவரத்தினராசா தணிஜன்** அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் நேரிலும் வந்தவர்களுக்கும், தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமும் துயர் பகிர்ந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் துயரில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
இன்று (30.08.2013) வெள்ளிக்கிழமை அன்னாரின் வவுனியா இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய, மதிய போசன நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 19/04, திருவள்ளுவர் வீதி,
உக்குளாங்குளம், வவுனியா. (C/11664) (11.3.6)
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி வேலுப்பிள்ளை



யாழ்.மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலுப்பிள்ளை (27.08.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-பூரணம் தம்பதியரின் மூத்த புதல்வனும், மலர், காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலாராணியின் பாசமிகு கணவரும், சசீந்திரன் (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்), அமிர்தா, சிவதாசன், சிவசுதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ்குமார் (பிரான்ஸ்), பிரசாந் ஆகியோரின் அன்பு மாமனும், அபினஜா (பிரான்ஸ்), அக்ஷனா (பிரான்ஸ்), டபிஷனா, கபிசாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற பவளகாந்தின் மைத்துனரும், காலஞ்சென்ற கோபிகா, பனோஜன், பிரதீஸ், றஜீவ் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.08.2013) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(39249)(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:077 724 4196, 077 935 2493

பருத்தித்துறை நகரில்

## வீதி அகலிப்புப் பணிகள் நடக்கின்றன இரவு பகலாக



வடமராட்சி, ஒக.30
பருத்தித்துறை நகரில் வீதி அகலிப்புப் பணிகள் இரவு பகலாகத் துரித கதியில் இடம்பெறுகின்றன.
நகரில் ஒரு வழிப்பாதை அமைக்கும் பணியே இவ்வாறு துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றது. ஒருவழிப்பாதையில் ஒரே நேரத்தில் மூன்று வாகனங்கள் செல்வதற்கு வசதியாக வீதி அகலிக்கப்படுகின்றது.
இதேபோல மாலி சந்தி தொடக்கம் இலகடிவரையான பிரதான வீதி அகலிப்புப் பணி வடிகால்கள் புனரமைப்புடன் இடம்பெற்று வருகின்றது.
பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நெல்லியடி முதல் பருத்தித்துறை வரையான வீதி அகலிப்புப் பணியில் பருத்தித்துறை நகரப் பகுதியிலும், மாலிசந்தி- இலகடி வரையிலுமான வீதி அகலிப்புப் பணிகளுமே இன்னமும் நிறைவடையவில்லை.
குறித்த இடம் வரையான பணிகளை நிறைவேற்றி, பருத்தித்துறை நெல்லியடி பிரதான வீதிக்கரையோரங்களும் மண் பரவப்பட்டு மக்கள் நடந்து செல்லக் கூடியவாறு செப்பனிடப் படுகிறது.
அதுபோல நெல்லியடி நகரப் பகுதியில் வடிகால்கள் அமைக்கும் பணியும் துரிதப்படுத்தப் பட்டுள்ளது. அடுத்த மாதத்துக்கு முன்னர் நெல்லியடி-பருத்தித்துறை பிரதான வீதி அக லிப்புப் பணிகள் முற்றாக நிறை வடைந்து விடும் என எதிர் பார்க்கப்படுகின்றது. (வ-8)

## இன்றும் நாளையும் உடுவிலில் நடமாடும் சேவை

வலி.வடக்கு, ஒக. 30
உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கான இரண்டு நாள் நடமாடும் சேவை இன்றும் நாளையும் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இரண்டாம் கட்டமாக இடம் பெறும் குறித்த நடமாடும் சேவையில் இன்று ஜே/182-195 வரையான கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும் , இரண்டாம் நாள் சனிக்கிழமை ஜே/196-211 வரையான கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் என இரு பிரிவுகளாக மக்களின் நன்மை கருதி நடைபெறவுள்ளது.
உத்தேச வயதுச் சான்றிதழைப் பெறவுள்ளவர்கள் இரண்டுதினங்கள் நடைபெறும் நடமாடும் சேவையிலும் கலந்து கொண்டு உத்தேச வயதுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும். இலவசமாக திருமணப் பதிவுகள், தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பிறப்பு, இறப்பு திரு மணச் சான்றிதழ் பெறுதல் போன்ற பல்வேறு விடயங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (வ-86)

## தூர்ந்த நிலையில் கிணறுகள்...



அரியாலை தபாற்கட்டைச் சந்திப் பகுதியில் இராணுவத்தினால் மக்களிடம் கையளிக்கப்பட்ட குடியிருப்புப் பகுதியில் உள்ள சில கிணறுகள் முற்றாக மூடப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அந்தக் கிணறுகளை மீளத் தோண்டும்போது குப்பைகூளங்கள், மரக்கட்டைகள், உரப்பைகள், உடைந்த போத்தல்கள் என்பன பெருமளவில் வெளிவருவதைக் காண முடிகிறது. (வ-135)

## கொழும்புத்துறையில் மூடப்படும் படைமுகாம்

கொழும்புத்துறை, ஒக.30
கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் இயங்கிவந்த ராணுவ முகாம் மூடப்பட்டு படையினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.
கடந்த 18 வருடங்களுக்கு மேலாக இந்தப் பகுதியில் உள்ள 10 இற்கும் மேற்பட்ட வீடுகளை படையினர் தமது முகாமாகப் பயன்படுத்தி வந்தனர்.
கடந்த சில தினங்களாக முகாம் பகுதியில் உள்ள ராணுவ தளபாடங்கள் மற்றும் பொருள்களை வேறு இடத்துக்கு மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். பொருள்கள் முற்றாக அப்புறப்படுத்தப்பட்டதையடுத்து வீட்டு உரிமையாளர்கள் தமது வீடுகளை பார்வையிட்டு வருகின்றனர். கையளிப்பு நிகழ்வு விரைவில் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-135)

# பொலிஸ் பொறுப்பதிகாரிகளே வெளிப்படையாகச் செயற்படுங்கள்

### பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்கிறார் வலி.கிழக்குப் பிரதேச செயலர்

அச்சுவேலி, ஒக.30
"பொலிஸ் பொது மக்கள் நல்லுறவு கலந்துரையாடலில் கலந்துரையாடப்படும் விடயங்கள் தொடர்பாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வெளிப்படைத் தன்மையோடு செயற்படுவதோடு பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் பொலிஸ் நிலை பொறுப்பதிகாரிகளுக்கு மேல் நிலையில் உள்ள உயர் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் கலந்துரையாடலை நடத்த வேண்டிய நிலை ஏற்படும்'' என வலி.கிழக்குப் பிரதேச செயலர் காட்டமாக தெரிவித்துள்ளார்.
வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவு மாநாட்டு மண்டபத்தில் பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுக் கூட்டம் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.
கூட்டத்தில் கலந்துரையாடப் பட்ட மற்றும் பொது மக்களால் முன்வைக்கப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக பொலிஸ் தரப்பில் தெளிவான பதில்கள் முன்வைக்கப்படாமல் மழுப்பல் நிலையில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதனை ஏற்றுக்கொள்ள பொது மக்கள் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் தொடர்ந்து பிரதேச செயலர் கருத்து தெரிவித்ததாவது:-
பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நல்லுறவு நிலவ வேண்டும். சமூகத்தில் சட்ட விரோத செயற்பாடு கள் இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டும் என்ற உயர் நோக்கோடு ஜனாதிபதியால் இந்த கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடல் மாதாந்தம் நடைபெறுகின்றது.
ஒவ்வொரு மாதமும் நடைபெறும் கலந்துரையாடலில் முன்னெடுக்கப்படும் விடயங்களுக்கு அடுத்த கலந்துரையாடலில் தீர்வு தொடர்பாக தெளிவான பதில் முன்வைக்கப்பட வேண்டும்.
கலந்துரையாடலின் அறிக்கை விவரம் அச்சுவேலி மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் நடைபெறும் சட்ட விரோத செயுற்பாடுகள் மற்றும் சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்பாக கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் முன்கூட்டியே அறிக்கை செய்து சமர்ப்பிக்க வேண்டும். இந்த விடயத்தில் தமது கடமை பொறுப்புக்களை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.
பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது நிலையம் சார் எல்லைப் பரப்பில் உள்ள பிரச்சினைகளை உரிய முறையில் தெரிவிக்கமுன்வரவேண்டும். பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள் ளப்பட்ட, கலந்துரையாடப்பட்ட விடயங்கள் உரிய முறையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊடாக தீர்வு காணப்படும்.-என்றார். (வ-11)

# போர் முடிந்து துப்பாக்கிகள் ஓய்ந்தாலும் அடிப்படை பிரச்சினைக்கு இன்னும் இல்லை தீர்வு

### காணாமற் போனவர்களின் உறவினர் சங்கம் ஆணையாளருக்கு அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக.30
ஆயுத மோதல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு துப்பாக்கிகள் ஓய்ந்து போயிருப்பதாக கூறப்பட்டா லும் இந்த நாட்டின் தேசியப் பிரச்சினைக்கான மூல காரணம் இன்னமும் தீர்க்கப்படாமல் அப்படியே இருந்து வருகிறது. மீள் நல்லிணக்கச் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு அரசு தயக்கம் காட்டி வருகின்றது. மாறாக இலங்கை மண்ணிலிருந்து தமிழ் மக்களைப் பூண்டோடு அழித்தொழிப்பதிலேயே இந்த அரசு ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.
காணாமல் போன குடும்ப உறுப்பினர்களை தேடிக் கொண்டிருப்பவர்கள் குடும்பங்களின் சங்கம் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் கையளித்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
போருக்குப் பின்னர் தீர்வு காணப்படாமலிருக்கும் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்று கட்டாயத்தின் பேரில் காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் பிரச்சினையாகும்.
அவ்வாறு காணாமற் போயுள்ளவர்கள், போர் பாதித்த மக்களின் கணக்கில் சேராதவர்களின் எண்ணிக்கை நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு வழங்கப் பட்டுள்ள தகவல்களின்படி 147, 679 ஆகும்.
காணாமற் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக வடக்கில் உள்ள குடும்பத்தவர்களை மரண சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும்படி அச்சுறுத்துவதாகவும் குற்றச்சாட்டுகள் உண்டு என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் காணாமற் போனவர்கள் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
1. அடையாளம் காணப்படாதவர்களால் அல்லது வெள்ளை வான்கள் அல்லது உறவினர் அறியாத வகையில் கடத்தப்பட்டவர்கள்.
2. பலவந்தமாக காவலில் வைக்கப்பட்ட, அல்லது நியாயமற்ற முறையில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்படாதவர்கள்.
3. சொந்தக் காரியத்துக்காக வெளியில் சென்று பின்னர் வீடு திரும்பாத-தகவல் தெரியாதவர்கள்.
4. போரின் இறுதிக் கட்டத்தில் முல்லைத்தீவில் தன் முனைப்பாக படைகளிடம் சரணடைந்தவர்கள் மற்றும் உறவினர்களால் அல்லது முக்கிய நபர்களால் படைகளிடம் கையளிக்கப்பட்டவர்கள். செட்டிகுளம் நலன்புரி முகாமில் வைத்து உறவினர்கள் முன் னிலையில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள்.
காணாமற்போன 1000 பேர் தொடர்பாக விவரங்களை சேகரித்து வருவதாகவும் அதன் அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் சபையில் ஒக்டோபர் மாத முடிவுக்கு முன்னர் தாக்கல் செய்யவிருப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
காணாமற் போனவர்கள் தொடர்பாக அண்மையில் அரசு வெளியிட்ட அறிக்கையொன்றில் இந்த நாட்டில் காணாமல் போனவர்கள் என்று எவருமே கிடையாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அந்த அறிக்கையில்,
இவ்வாறு காணாமற் போனவர்களுக்கு என்ன நேர்ந்ததென்பதை அதிகாரபூர்வமாக கண்டறிந்து தெரிவிக்க நடவடிக்கை எடுக்குப் படியும் கோரப்பட்டுள்ளது. அச் சங்கம் ஆணையாளரிடம் விடுத்துள்ள கோரிக்கைகளில் பின்வருவனவும் அடங்கியுள்ளன.
சமூகங்களுக்கிடையில் சுமுக உறவு நிலவுவதற்கு பாதுகாப்புப் படைகளும் அவர்களின் புலனாய்வாளர்களும் வடக்கிலிருந்து அகற்றப்பட வேண்டும். அண்மைக் காலத் தில் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் விசாரணை என்ற போர்வையில் நியாயமற்ற முறையில் கைது செய்யப்பட்டு வதைக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். காணாமற்போனவர்களின் குடும்பங்களை மரணச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள கட்டாயப்படுத்தாமல் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.
2009 ஆம் ஆண்டு முடிவடைந்த போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை அரசினால் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக சுயாதீனமான சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும்.
தமிழ் மக்களின் பாதுகாப்பு, சுயாட்சி, அரசமைப்பு உரிமைகள் சர்வதேச சமூகத்தினாலும் இந்தியாவினாலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் உள்ளது. (ப)

## வாழைப்பழத்தின் விலை குடாநாட்டில் உச்சத்தில்



அச்சுவேலி, ஒக.30
குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது. ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 85 ரூபா வரையிலும் கப்பல் வாழைப்பழம் 180 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது. மொந்தன் (கறி வாழை) வாழைக்காயின் விலையும் ரூபா 50 இற்கு மேல் அதிகரித்துள்ளது.
எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் வேலை ஆள்களின் நாளாந்த கூலி அதிகரிப்பு என்பவற்றால் வாழைச் செய்கையில் விவசாயிகள் மேலதிக கவனம்செலுத்தாமை, மே-ஜூன் ஆகிய மாதங்களில் வீசிய தென்மேற் பருவப் பெயர்ச்சிக் காற்றின் தாக்கத்தால் வாழைகள் முறிந்து சேதமடைதமை என்பவற்றால் வாழைக்குலை அறுவடை அளவு குறைவடைந்துள்ளது.
உள்ளூர் வாழைச் செய்கையாளரிடம் வாழைக்குலைகளை வியாபாரிகள் நேரடியாகக் கொள்வனவு செய்து 'படி' ரக சிறிய வாகனங்களில் எடுத்துச் சென்று வியாபார நடவடிக்கையில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருப்பதும் ஆலய உற்சவங்கள் நடைபெற்று வருவதும் வாழைப் பழத்தின் விலையை அதிகரிக்கச் செய்துள்ளது. (வ-11)

## வெளிச்சமின்றி சைக்கிளில் பயணித்தோருக்கு அபராதம்

வடமராட்சி, ஒக.30
வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் இரவு வேளையில் வெளிச்சமின்றி சைக்கிளில் பயணித்த 5 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
வெளிச்சமின்றி சைக்கிளோட் டிய 5 பேருக்கு எதிரான வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
விசாரணையின் போது 5 பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து தலா 2 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. (வ-8)



எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வருகை தரும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மட்டக்களப்புக்கு செல்லவுள்ளனர். அதற்கான முன்னேற்பாடுகளை கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகத்தின் குழு மட்டக்களப்புக்குச் சென்று ஆராய்ந்துள்ளது. (ச)

# அம்பாறையில் விகாரை அமைப்பதற்கு முயற்சி

## கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் ஆட்சேபம்

அம்பாறை.ஒக.30

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தங்க வேலாயுதபுரம் பகுதியிலுள்ள மலையில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அப் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்ந்து வரும் தங்க வேலாயுதபுரத்திலுள்ள மலையில் இராணுவத்தினர் இத்தகைய பௌத்த விகாரை அமைக்கும் ஆரம்ப நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில், ஆலையடிவேம்பு காரைதீவு பிரதேச சபைகளின் தவிசாளர்களது கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளனர்.

இதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான செல்லையா இராசையா தலைமையில், திருக்கோயில் பிரதேச சபைத் தவிசாளர் விவேகானந்தராஜா, புவிதராஜா, ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தவிசாளர் கணபதிப்பிள்ளை இரத்தினவேல் ஆகியோர் இணைந்து விகாரை அமைப்புக்கு எதிராக ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

தவிசாளர்கள் மூவரும் அம்பாறையிலுள்ள மாவட்டச் செயலகத்துக்கு நேரில் சென்று, அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் கோ.விமலநாதனிடம் இதுகுறித்து முறையிட்டதுடன்,விகாரை அமைப்புக்கான ஆரம்ப நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்தனர்.

தங்க வேலாயுதபுர தமிழ் மக்கள் போரால் பாதிக்கப்பட்டு முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

தங்க வேலாயுதபுரத்தில் சிங்கள மக்களெவரும் வாழவில்லை என்றும் தவிசாளர் செல்லையா இராசையா மேலதிக அரச அதிபர் விமலநாதனிடம் எடுத்து விளக்கினார்.

இந்த நிலையில் திருக்கோயில் பிரதேச செயலர் எம்.கோபாலரத்தினத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட மேலதிக அரச அதிபர் விமலநாதன், குறித்த பௌத்த விகாரை அமைப்பு தொடர்பான உண்மை நிலையைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**தங்க வேலாயுதபுர தமிழ் மக்கள் போரால் பாதிக்கப் பட்டு முகாம் களிலும், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.**

பிரதேச செயலரது அறிக்கை கிடைத்ததும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தவிசாளர்களிடம் உறுதியளித்தார்.

இதேவேளை மேலதிக மாவட்ட அரச அதிபரை தவிசாளர்கள் சந்திப்பதற்கு முன்னர், மாவட்ட அரச அதிபரை சந்தித்து இது விடயமாக தமது ஆட்சேபனையைத் தெரிவிக்க விரும்பிய போதும், சந்திப்புக்கான அனுமதி வழங்கப்படவில்லையென தவிசாளர்கள் கவலை தெரிவித்தனர்.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் மாவட்ட அரச அதிபர் அலுவலக வாசலில் காத்திருந்தும் சந்திப்புக்கான முன் அனுமதி பெறப்படாமையால் சந்திக்க வாய்ப்பில்லையெனத் தெரிவிக்கப்பட்டதாகவும் தவிசாளர்கள் கவலை வெளியிட்டனர்.

பின்னர் மேலதிக மாவட்ட அரச அதிபரை சந்திக்குமாறு கூறப்பட்டதாகவும் தெரிவித்தனர். மக்கள் பிரதிநிதிகளான மூன்று தவிசாளர்கள் சந்திக்க வந்துள்ளோமெனத் தகவல் தெரிவித்தும், மாவட்ட அரச அதிபரை சந்திப்புக்கு வாய்ப்பளிக்காமை கவலை அளிக்கிறது என்று அவர்கள் கூறினர். (ச-30)

# அபிவிருத்திக்கு உதவ முன்வந்தால் ஒத்துழைப்பு வழங்கத் தயார்

## கல்முனை முதல்வர் தெரிவிப்பு



அம்பாறை. ஒக.30

கல்முனை மாநகரின் அபிவிருத்திக்கு எந்த அமைச்சரோ, அரசியல்வாதியோ உதவ முன்வந்தாலும் அவர்களுக்கு ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளேன்.

இவ்வாறு கல்முனை மாநகர சபை முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாகிப் கூறினார்.

கல்முனை பிரிலியன்ட் விளையாட்டுக்கழகத்தின் 300 ஆவது உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கிலங்கையின் முகவெற்றிலை என முக்கியத்துவம் பெறும் கல்முனை மாநகரம் பல அபிவிருத்திகளைக் காண வேண்டிய நிலையுள்ளது.

நான் கல்முனை மாநகர சபையின் முதல்வராகப் பதவியேற்றபின் இதற்கான பல முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றேன். மக்கள் சேவைக்கென்றே அரசியலுக்கு வந்தவன் நான். எந்தச் சுயநல நோக்கும் என்னிடமில்லை.

கல்முனை மாநகரம் வாழ் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எவ்வித பேதமுமின்றி எனது சேவைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பேன். அதேவேளை எந்த அரசியல் இலாபம் கருதியும் எனது செயற்பாடுகளை முன்னெடுக்க நான் ஒருபோதும் தயாரில்லை.

கடந்த காலங்களில் கல்முனை மாநகரின் அபிவிருத்திக்கென முன்வந்து நடவடிக்கைகளை முன்னெடுத்த சில அமைச்சர்கள், அரசியல்வாதிகளுக்கு குறுகிய அரசியல் நோக்கில் முட்டுக்கட்டைகளும், தடைகளுமிடப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

ஆனால் என்னைப் பொறுத்தவரை குறுகிய அரசியல் நோக்கம் துளியும் கிடையாது.

குறுகிய அரசியல் பேதங்களை விடுத்து கல்முனை மாநகருக்கு வரும் எந்த அபிவிருத்தி முயற்சிக்கும் முட்டுக்கட்டை போடும் முதல்வராக நான் ஒரு போதும் செயற்படமாட்டேன் -என்றார். (ச-30)

# பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவில் காணிக்கச்சேரி நடமாடும் சேவை

மட்டக்களப்பு. ஒக.30

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புளுகுனாவ மற்றும் கெவிலியாமடு பிரதேசங்களில் நிலவி வரும் காணிப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான காணிக் சச்சேரி நடமாடும் சேவையொன்று நேற்று வியாழக்கிழமை பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

காணிக் கச்சேரி நடமாடும் சேவையில் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புளுகுனாவ மற்றும் கெவிலியாமடு போன்ற பிரதேசங்களில் இருந்து பெருமளவிலான தமிழ் மற் றும் சிங்கள மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அதன் அதிகாரிகள் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டதுடன் இந்த காணிப் பிரச்சினையைத் தீர்த்து வைப் பதற்கான விண்ணப்பப் படிவங்களும் வழங்கப்பட்டன.



இந்த விண்ணப்பப்படி வத்தை பூர்த்திசெய்து எதிர்வரும் புதன்கிழமைக்கு முதல் பட்டிப்பளை பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்குமாறு காணி ஆணையாளர் நாயகம் ஆர்.பி. ஆர்.ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதையடுத்து வருகை தந்த பொதுமக்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டன.

காணிக் கச்சேரியில் காணி ஆணையாளர் நாயகம் ஆர்.பி.ஆர்.ராஜபக்ஷ மற்றும் பிரதி காணி ஆணையாளர் அசந்த குணசேகர, மாகாண காணி ஆணையாளர் கே.ஆர்.டி.பி. ஜ.விஜேதிலக, பட்டிப்பளை பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரட்ணம் உட்பட காணி அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.(வ)

# மட்டக்களப்பில் சமாதானப் பேரணி



மட்டக்களப்பு.ஒக.30

மரபுரிமைகள் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் சமாதானப் பேரணி மட்டக்களப்பில் நடைபெற்றது.

இந்தப் பேரணியில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூரத்தி முரளிதரன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.பாஸ்கரன், மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் கே.சிவநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆரம்பமான இந்தப் பேரணி மட்டக்களப்பு மணிக்கூண்டு கோபுரம் ஊடாக சென்று மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் நிறைவு பெற்றது.

இதன்போது அகிம்சாவாதி காந்தி அடிகளின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தின் முன்பாக அமைக்கப்பட்ட விசேட மேடையில் பொதுக் கூட்டமொன்றும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதேச இளைஞர், யுவதிகள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (ச)

# ரத்துபஸ்வல குறித்த அறிக்கை வெளிவரும்



கொழும்பு.ஒக.30
வெலிவேரிய - ரத்துபஸ்வல சம்பவம் குறித்து நடத்தப்படும் விசாரணையின் அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
கடந்த சில நாள்களாக இந்த சம்பவம் குறித்து பலரிடம் வாக்கு மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹானாம தெரிவித்தார்.
ரத்துபஸ்வல சம்பவம் இடம் பெற்றபோது குறித்த இடத்தில் இருந்த ஊடகவியலாளர்களிடமும் சாட்சியம் பெறப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது.

**அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.**

இதேவேளை, ரத்துபஸ்வல குடிதண்ணீர் பிரச்சினை குறித்து இதுவரை இறுதித் தீர்மானத்திற்கு வரவில்லை என கம்பஹா மாவட்ட செயலாளர் ஏ.ஜே.ரத்னசிறி குறிப்பிட்டார்.
ரத்துபஸ்வல குடிதண்ணீர் பிரச்சினை குறித்து 7 அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. (எ)

# சிறுவர் இல்ல பிள்ளைகளை சமூகமயப்படுத்த நடவடிக்கை

## நன்னடத்தை விவகார திணைக்கள ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு. ஒக.30
சிறுவர் இல்லங்களிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதற்கான விசேட திட்ட மொன்றை ஆரம்பிப்பதற்கு நன்னடத்தை விவகார திணைக்களம் தீர்மானித்துள்ளது.
தற்போது 18 வயதைக் கடந்த 500ற்கும் அதிகமானவர்கள் சிறுவர் இல்லங்களில் இருப்பதாக நன்னடத்தை ஆணையாளர் யமுனா பெரேரா தெரிவித்தார்.
பெற்றோரற்ற பிள்ளைகளே சிறுவர் இல்லங்களில் இணைத்துக்கொள்ளப்படுகின்ற போதிலும், சில சந்தர்ப்பங்களில் பெற்றோர் இருப்பினும், அவர்களின் பொருளாதார பிரச்சினை உள்ளிட்ட காரணங்களினால், சிறிது காலத்திற்கு மாத்திரம் சிறுவர் இல்லங்களில் சிறுவர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.



எனினும் இவ்வாறு இணைத்துக்கொள்ளப்படும் பிள்ளைகளை, சிறுவர் இல்லங்களில் காணப்படும் வசதிகள் காரணமாக மீண்டும் தம்முடன் இணைத்துக்கொள்ள பெற்றோர்கள் தயங்குகின்றனர்.
பிள்ளைகள் தமது பெற்றோருடன் இருப்பதே சிறந்தது.
ஏதேனும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை காணப்படுமாயின் நெருங்கிய உறவினர்களிடம் அல்லது வேறு குடும்பமொன்றுடன் சிறுவர்கள் சமூகமயப்படுத்தப்படுவதையே எதிர்பார்க்கின்றனர்.
அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காகச் சென்றவர்கள் தமது பிள்ளைகளை தற்காலிகமாக சிறுவர் இல்லங்களில் தங்க வைத்துள்ளனர்.
இந்த அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து மீண்டும் சமூகமயப்படுத்தக் கூடியவர்களை இந்த விசேட திட்டத்தின் ஊடாக அடையாளம் காணவுள்ளதாக நன்னடத்தை ஆணையாளர் சுட்டிக்காட்டுகின்றார்.
சிறுவர் இல்லங்களிலுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களை சமூகமயப்படுத்தும் விசேட திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நன்னடத்தை விவகார திணைக்களம் குறிப்பிடுகின்றது.
18 வயது வரை பிள்ளையொன்றை சிறுவர் இல்லத்தில் வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்படின் அவரை தொழிலுக்கு அனுப்புவது உள்ளிட்ட மாற்று வழிகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.- என்றார் யமுனா பெரேரா. (எ)




தென்கொரியப் பிரதமர் ஜங்ஹொங் வொன் நான்கு நாள் உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இலங்கை வந்தார். அவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா வரவேற்கிறார். (எ)

# தேங்காய் பறித்தவர் மின்சாரம் தாக்கி சாவு

கொழும்பு.ஒக.30
தேங்காய் பறித்துக்கொண்டிருக்கையில் மின்சாரம் தாக்கி கீழே விழுந்த நபர் உயிரிழந்த பரிதாபகரமான சம்பவமொன்று நீர்கொழும்பில் இடம் பெற்றுள்ளது.
இந்தச்சம்பவம் நீர்கொழும்பு பலகத்துறை, கொச்சிக்கடை பிரதேசத்திலேயே நேற்று. முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.
தேங்காய் பறித்துக் கொண்டிருந்த தொழிலாளியின் கையிலிருந்த கத்தி அதிசக்தி வாய்ந்த மின்சாரக் கம்பியில் பட்டதனால் மின்சாரம் தாக்கி மரத்திலிருந்து கீழே விழுந் துள்ளார். கொச்சிக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான செல்டன் என்பவரே உயிரிழந்துள்ளவராவார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, பலகத்துறை, கொச்சிக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த சுஜித் பெரேரா என்பவருடைய தோட்டத்தில் தேங்காய் பறிக் கையில் தென்னை ஓலையூடாக சென்ற அதிசக்தி வாய்ந்த மின்சார கம்பி அவருடைய கையிலிருந்த கத்தியில் பட்டுள்ளது இதனால் மின்சாரம் தாக்கி கீழே விழுந்த நபர் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.
எனினும், சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.
இந்த சம்பவம் தொடர் பாக கொச்சிக்கடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# உளவியல் ரீதியான பிரச்சினையால் உயிரை மாய்த்த இளைஞன்


கொழும்பு. ஒக.30
அரலகங்வில பொலிஸ் பிரிவின் கந்தேகம பிரதேசத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
கந்தேகம பகுதியைச் சேர்ந்த 33 வயதான நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
பிரேதப் பரிசோதனைகளின் போது உளவியல் ரீதியான பிரச்சினை காரணமாகவே இவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரியவந் துள்ளது.



நேற்று முன்தினம் உயிரிழந்த குறித்த நபரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ)

# ஹஜ் செல்ல 4 லட்சம் ரூபா பௌசி கூறியது நடக்கவில்லை

## முஸ்லிம் மக்கள் கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு.ஒக.29
ஹஜ்ஜுக்காக நான்கு லட்சம் ரூபாவை ஹாஜிகள் செலுத்த வேண்டும் என்று சிரேஷ்ட அமைச்சர் பௌசி கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. எனினும் அதனை நடைமுறையில் காணமுடியாதுள்ளது என்று முஸ்லிம் மக்கள் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த வருடமும் நான்கு லட்சத்து இருபத்து ஐயாயிரம் ரூபா ஹஜ் கட்டணமாக அறிவித்திருந்த போதிலும் பல முகவர்கள் ஐந்து, ஆறு லட்சங்கள் அறவிட்டதை அவதானித்தோம். இந்த உண்மை நிலை எவருக்கும் தெரிய வருவதில்லை.
இதனாலேயே பெரும்பாலான மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்.
இந்த நிலையில் அர்த்தமற்ற கட்டண நிர்ணயிப்பு தேவையா என்று நினைக்கத் தோன்றுகிறது. விரும்பியோர் விரும்பிய கட்டணத்தை அறவிடலாம் என்று அறிவித்தால் மேல் மட்ட ஊழலை நிறுத்த முடியும்.
கடந்த கால ஊழல்கள் தொடர்பில் சில ஹாஜிகள் பொதுபல சேனாவினர் மூல மாக வழக்குத் தாக்கல் செய்து பணத்தை மீளப்பெற்றுள்ளனர். அதற்கான சாட்சியங்கள் எம்மிடம் உள்ளன. -என்றார். (ச-10)

# விசாலமான உணவுக்குளிரூட்டி களஞ்சியசாலை திறந்து வைப்பு

கொழும்பு. ஒக.30
ஒரே சமயத்தில் 7500 மெற்றிக் தொன் நிறைகொண்ட உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தக் கூடிய அதி விசேட தொழில்நுட்ப வசதியுடனான கூல் கார்டன் எனப்படும் விசாலமான குளிரூட்டும் அறை நேற்றுமுன்தினம் வெலிசறையில் திறந்து வைக்கப்பட்டது.
தீபக் வசன்ஜி மற்றும் தாஸ் ஆகிய இரு முதலீட்டாளர்களின் முயற்சியின் விளைவாகவே கூல் கார்டன் களஞ்சியசாலை வெலிசறையில் உருவாக்கப்பட்டுள்ளது.
இங்கு கீழ் காய்கறிகள், பழங்கள், பால் உற்பத்தி பொருள்கள், கடலுணவுகள் என்பவற்றை நீண்ட காலத்திற்கு பழுதடையாமல் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்த முடியும். அரசின் ஒத்துழைப்பின் கீழ் தனியாரினால் நிறுவப்பட்டிருக்கும் இந்த விசாலமான குளிரூட்டல் அறை விவசாயிகளின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் வரை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதற்குரிய சிறந்த தெரிவாகுமென இதனைத் திறந்து வைத்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



வெலிசறை, குணசேக்கர மாவத்தை யில் 25 ஆயிரம் சதுர அடியில் குளிரூட்டும் அறைகள் தொடர் மாடி களாக அமைக்கப்பட்டுள்ளன. 200 மில்லியன் ரூபாய் முதலீட்டில் உரு வாக்கப்பட்ட இக்குளிரூட்டல் அறையில் 800 லொறி பொருட்களை சேமித்து வைக்கக்கூடிய இடவசதி உண்டு.

**குளிரூட்டல் அறை நெடுஞ் சாலை ஓரமாக இருப்பதனால் போக்குவரத் துக்கான நேரம் மற்றும் செலவு என் பன குறையும்.**

குளிரூட்டல் அறை நெடுஞ் சாலை ஓரமாக இருப்பதனால் போக்கு வரத்துக்கான நேரம் மற்றும் செலவு என்பன குறையும். ஏற்றுமதியாளர்களுக்கு விமான நிலையத்திற்கு விரைவில் கொண்டு செல்லக் கூடியதாகவும் இருக்கும்.
அத்துடன் வெகு விரைவில் ஊவா பிரதேசத்தில் இது போன்ற தொரு குளி ரூட்டல் அறை இதே முதலீட்டாளர்களினால் உருவாக்கப்படவுள்ளது.

# மனைவிக்கும் மகனுக்கும் எமனான தந்தை

கொழும்பு. ஒக.30
கணவன் மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தியபோது மோட்டார் சைக்கிள் பாதையை விட்டு ஆற்றில் பாய்ந்ததால் இரண்டரை வயது ஆண் குழந்தையும் மனைவியும் உயிரிழந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணி அளவில் அரகங்வில பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.
போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியதற்காக கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
இவர்களது சடலங்கள் அரகங்வில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எல்லாம் வெளிமயக்கே... கச்சி ஏகம்பனே!... ஏதறிவோம்...

இன்று, ஓகஸ்ட் முப்பதாம் திகதி அனைத்துலக காணாமற்போனோர் தினம். காணாமற்போன, தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்களின் சம்மேளனத்தின் தூண்டுதலால் இந்த நாள் அனைத்துலக தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

சம்பந்தப்பட்டோரின் உறவுகளுக்கோ, சட்டபூர்வ உரித்துடையவர்களுக்கோ தெரியாமல்- தெரிவிக்காமல்- காணாமற்போகச் செய்யப்பட்டோர்கள், மிகவும் பாதகமான நிலையில் சிறை வைக்கப்பட்டோர்களின்பால் கவனத்தை ஈர்க்கும் (அல்லது கோரும்) பொருட்டே இந்த நாள் பிரகடனப்படுத்தப்பட்டது.

இரகசியமாக, எந்தக் காரணமும் தெரிவிக்கப்படாமல், ஆள்கள் (மக்கள்) சிறைவைக்கப்படுவதற்கு எதிராக 1981 ஆம் ஆண்டில் இந்நாள் பிரகடனப்படுத்தப்பட்டது. கோஸ்ராறிக்கா (COSTARICA) நாட்டில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில், இப்போது பல நாடுகளில் பாதிப்புற்றோர் சார்பாகப் பிரதிநிதித்துவம் உள்ளது.

சொல்லி வைத்தது போல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் வேளையில், காணாமற்போனோர் நாள் வந்திருப்பது-ஒன்றிணைந்திருப்பது என்றும் கூறலாம்-குறிப்பிடத்தக்க ஒத்திசைவு. (COINCIDENT) எனவும் கொள்ளலாம்.

அவர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்த வேளை காணாமற்போனவர்கள் என்று பெயர்க்குறிஇடப்பட்டுள்ள இளைஞர்கள், யுவதிகள், குடும்பத் தலைவர்களின் உறவினர்கள் விட்ட கண்ணீர் அவரது நெஞ்சை பெரிதும் உருக்கி இருக்கும்.

ஒருவரை இரகசியமாகத் தடுத்து வைத்திருப்பது, சிறையில் வைத்திருத்தல் அல்லது நிச்சயமற்ற சூழலில் வைத்திருப்பது மிகப் பெரிய மனித உரிமை மீறல் என்று வகுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில், இது குறித்து 1992 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இதனை அறுத்து உறுத்திக் கூறுகிறது.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் வருகையை முன்னிட்டு, வடக்கு-கிழக்கில் காணாமற்போனவர்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு, மூவர் கொண்ட குழு ஒன்றை ஜனாதிபதி மிக அண்மையில் நியமித்திருந்தார்.

காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்வதோடு, தேவைப்படும் பட்சத்தில் புலனாய்வு செய்வதும் அந்த ஆணைக்குழுவின் பிரதான பணிகளாக அமையும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

போர்நடைபெற்ற காலம், அது முடிவுக்கு வந்த வேளை, பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் வடக்கு கிழக்கில் காணாமற்போகச் செய்யப்பட்டனர் என்பது மூடு மந்திரம் அன்று.

கடந்த நான்கு வருடங்களுக்கும் மேலாக காணாமற்போனவர்கள் குறித்து, ஓர் அரசுக்குரிய அக்கறை இதற்கு முன்னர் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் விஜயம் ஊர்ஜிதமாகும் கட்டத்தில் விசாரணைக் குழு உருவாக்கப்பட்டமை பலவித உள்நோக்கங்களைக் கொண்டதாக இருக்கலாம் என்ற கருத்து பரவலாக மேலெழுந்தது.

இலங்கை வந்துள்ள நவநீதம்பிள்ளையை நேரில் சந்தித்து தமது மன வேதனையை கொட்டித் தீர்க்க ஆவலுடன் இருந்தார்கள் காணாமற்போனோரின் பெற்றோர் மற்றும் இரத்த உறவுகள். ஆனால் கிளிநொச்சி மற்றும் பரந்தனில் காணாமற்போனோர் தொடர்பில் கவனவீர்ப்பு நடத்த முற்பட்டவர்கள் பொலிஸாரால் கலைக்கப்பட்டனர்.

எனினும், மனித உரிமைகள் ஆணையாளர் முல்லைத்தீவு மாவட்டத்தில், புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால், கேப்பாபிலவு, பொன்நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த காணாமற்போனவர்களின் உறவினர்களைச் சந்தித்து விவரங்களைக் கேட்டறிந்தார். அதனால், பாதிக்கப்புற்ற மக்கள் ஆறுதல் அடைந்திருப்பர் என்பதில் சந்தேகம் இருக்க இடமில்லை.

ஆனாலும், காணாமற்போனோர் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள குழு, தனது அறிக்கையைச் சமர்ப்பித்த பின்னர், அதன் சிபார்சுகள் உடனடியாக, குறைந்த கால அவகாசத்தில் செயலுருப் பெறுமா என்பது......?!

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்களை நடைமுறைப்படுத்துவதில் அரசின் செயற்படு இலட்சணம் போன்றே காணாமற் போனோர் விவகாரமும் அசையும் என்று எதிர்வு கூறுவதைவிட வேறெதனைக் கொள்ளலாம்...?**

**எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சி ஏகம்பனே என்ற பட்டினத்தாரின் வரிகளே வானலையில் கேட்கின்றன.......**



### கதறியழும் எங்கள் குரல் கேட்கிறதா?

# ஐயோ.... எங்கள் உறவுகள் எங்கே...?

● பிறேமி

வெட்ட வெளியில் சுட்டெரிக்கும் வெயிலில் வெம்பி அழும் அந்த உறவுகளின் கதறல் நெஞ்சை அடைத்தது.

எத்தனை வருடங்கள் கடந்தாலும் இன்று போல், உயிர் துடிக்கும் அவர்களின் வலி, உணர்வுகள் இப்பொழுதும் புதிதாகவே இருக்கின்றது.

எத்தனை அச்சுறுத்தல்கள், துப்பாக்கி முனையில் விரட்டல்கள், காணாமற்போன உங்கள் உறவுகள் போலவே உங்களையும் காணாமல் போகச் செய்து விடுவோம் என்ற ஆளும் வர்க்கத்தின் அடக்கு முறைகளுக்கெல்லாம் அவர்கள் பயந்து ஒதுங்கிப்போய்விடவில்லை. எத்தனை ஆர்ப்பாட்டங்கள்?, எத்தனை பேரணிகள்?, காணாமல் போனோர் தொடர்பில் எத்தனை மனுக்கள்? எத்தனை கோரிக்கைகள்?, எத்தனை சந்திப்புக்கள்? எதற்குமே சளைத்துப் போகாது துணிந்து நிற்கும் அந்த உறவுகளின் கதறல்களுக்கு இப்பொழுது சின்னதாய் ஒரு நம்பிக்கை கீற்று.

கடைசியாய் சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லியாயிற்று. தங்கள் பிள்ளைகளை ,கணவன்மாரை, அண்ணாமாரை ,அக்காமாரை , அப்பாமாரை, அம்மாமாரைத் தொலைத்துவிட்டு நிற்கும் அந்த உறவுகளின் ஏக்கத்துக்கு ஒரு முடிவு கிடைக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்பு அவர்களிடம் இருந்தது.

**கண்ணுக்கு முன்னே உறவுகளை பறிகொடுத்தவர்கள்**

2009 இறுதிக் கட்டப் போரின்போது தங்கள் பிள்ளைகளை, பெற்றோரை, கணவன்மாரை, இராணுவத்திடம் சரணடைய வைத்துவிட்டு அவர்கள் திரும்ப வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்து காத்திருந்து காலங்கள் தான் கரைந்தனவே தவிர இன்று வரை ஆரோக்கியமான எந்தப்பதிலும் கிடைக்கவில்லை. உயிரோடு ஒப்படைத்த உறவுகள் இருக்கிறார்களா? இல்லையா என்பது தெரியாது ஒவ்வொரு நொடியும் அவர்கள் தவிக்கும் தவிப்புக்கு எப்போதுதான் முடிவு கிட்டப் போகிறது.

ஊர் தூங்கும் நேரம் துப்பாக்கியைக் காட்டி, விசாரித்துவிட்டு விடுகின்றோம் என்று வெள்ளை வாகனங்களில் கடத்தப்பட்ட பிள்ளைகளின் கதி என்ன? பட்டப் பகலில் சுற்றி நின்றவர்கள் பார்த்திருக்க கடத்திச் செல்லப்பட்ட பிள்ளைகள் எங்கே? இறுதிக்கட்டப் போரில் ஒப்படைத்தவர்கள், பெற்றோர், உறவுகள், மனைவி, பிள்ளைகள் கதறக் கதற விசாரித்துவிட்டு விடலாம் என அழைத்துச் செல்லப்பட்டவர்கள். இப்படியாக காணாமற்போன அந்த உறவுகளுக்காக இன்றும் நம்பிக்கையோடு காத்திருக்கும் இந்த உறவுகளின் ஏக்கம் தீரும் நாள் என்றோ?


இது ஒரு புறமிருக்க எங்கே ,எப்போது காணாமற் போனார்கள் என்பதைக் கூட நினைவில் கிரகிக்க முடியாமல், கொள்ள முடியாமல், அறிந்து கொள்ள முடியாமல் தவிக்கும் உறவுகள் தான் எத்தனை பேர்? இறுதிக்கட்டப் போரின் போது காணாமற்போன பல்லாயிரக்கணக்கான உறவுகளின் நிலை தெரியாது, தினமும் செத்துச் செத்துப் பிழைக்கும் இந்த உறவுகளின் கண்ணீருக்கு எப்போது விடிவு கிட்டும். அண்மையில் ஒரு 10 வயது மதிக்கத்தக்க சிறுமியைச் சந்தித்தேன். அந்தச் சிறுமியிடம் பேச்சுக் கொடுத்த போது தான் தெரிந்தது இறுதிக்கட்டப் போரில் தாயும் தந்தையும் தனது தம்பியும் இராணுவத்திடம் சரணடைய அந்தச் சிறுமி மட்டும் அம்மம்மாவுடன் வந்துவிட்டாள் என்று.

'தம்பி இப்ப வளர்ந்திருப்பான் . எப்படி இருப்பானோ தெரியாது? எனக்கு அம்மாவை, அப்பாவை , தம்பியைப் பார்க்க ஆசையா இருக்கு. ஒவ்வொரு நாளும் நான் கடவுளிட்ட வேண்டிறன். எப்பதான் அம்மா, அப்பா, தம்பியை எனக்குத் திருப்பித் தரப் போறாரோ தெரியேல்ல'. விழி நீர் சொரிந்து நின்ற அந்தக் குழந்தையின் கண்ணீரைத் துடைத்தேன். எனக்கு அவளது கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

"1997 ஆம் ஆண்டுதான் யாழ்ப்பாணத்தில் என்ர பிள்ளைய கழுகுகள் கொத்திக் கொண்டு போச்சுதுகள். ஒரேயொரு பிள்ளையெண்டு என்ரை குஞ்சை நான் என்ரை சிறகுக்கை பொத்திப் பொத்தி வளர்த்தன். ஆனா என்ரை கண்ணுக்கு முன்னாலையே பறிகொடுத்து போட்டனே. மகன் போன யோசனையில் அப்பா படுத்தபடுக்கையில இருந்து இந்த வருஷம் மோசம் போயிட்டார். என்ர பிள்ளை வரும்வரை நானாவது உயிர் வாழ வேணும். இல்லையெண்டா அவன் துடிச்சுப் போயிடுவான்! "அந்தத் தாயின் கண்ணீர் வற்றிவிட்டது. எலும்பும் தோலுமாய் தேய்ந்து போயிருந்த அந்த அம்மாவும் இன்னும் எத்தனை காலம் உயிரோடு இருப்பார் என்பது எனக்குள் பெரும் கேள்வியாக எழுந்து மனதைக் குடைந்தது.

"பிள்ளையின்ர முதலாவது பிறந்த நாளுக்கு 'கேக்' வாங்கவென்று போனவர்தான். திரும்பி வரவேயில்ல ..பிள்ளைக்கும் இப்ப 6 வயசாய்ப் போச்சுது. அவன் அப்பா எப்ப வருவார் எண்டு வருவார் என்று கேட்டுக் கொண்டே இருக்கிறான். எனக்குப் பதில் சொல்லத் தெரியல்ல.." எனத் தவித்தார் இன்னொரு இளந்தாய்.

காணாமற் போனவர்களின் ஆயிரக்கணக்கான உறவுகளுக்குள்ளும் இப்படிஒவ்வொரு சரித்திரம் உறங்கிக் கொண்டு இருக்கின்றது. இவர்களின் கதறல்களுக்கெல்லாம் ஒரு தீர்வு மிக விரைவில் கிடைத்தாக வேண்டும். உலகத்தின் மனச்சாட்சியே, ஒருமுறை இவர்களின் குரல்களுக்கு செவிசாய்த்து உறவுகளை ஒன்றிணைத்துவிடு.



*எங்கட அண்ணைய எங்க வச்சு வேல வாங்கிறீங்கள் ? எனக்கு சாப்பாடும் வேண்டாம், ஒண்டும் வேணாம், எங்கடை அண்ணைய விடுங்கோ , என்னைச் சுட்டாலும் பரவாயில்ல. நான் தனிய இருந்து என்ன செய்ய? ,ஆருக்குத் தெரியும் இண்டைக்கு இரவே எனக்கு வெடி வைக்கலாம் ,அதுக்குள்ள அம்மாவ நான் (நவநீதம் பிள்ளையை ) பார்க்கோணும் .*

*"என் அண்ணை எங்கே, என்ரை அண்ணையை எங்கே வைச்சிருக்கிறீங்க, என்ரை அண்ணையைத் திருப்பித் தாங்க ...., எனக்கு என்ரை அண்ணை வேணும்.... எனக்கு என் அண்ணை வேணும் ...."*

# ஈழத்தின் சோகம்

## தமிழினத்தின் கண்ணீர் இந்திய ஆட்சியாளர்களை அழிக்காமல் விடாது

வாளறிவன்



> தமிழர் நிலங்கள் பறிக்கப்பட்டு , மொழி சிதைகப் பட்டு, பண்பாடு அழிக்கப்பட்டு , கோவில்கள் உடைக் கப்பட்டு , தமிழர் இனமே பெரும் மீள முடியாத சோகத்தில் மூழ்கி உள்ளது.

தமிழினத்தின் கண்ணீர் இந்திய நாட்டை அழிக்காமல் விடாது என்பது மீண்டும் மீண்டும் நினைவூட்டப்படுகிறது. போர் முடிந்தவுடன் எல்லாம் சரியாகி விட்டது என்று உலக நாடுகளை நம்ப வைத்த இலங்கையும் இந்தியாவும் இன்று நவநீதம் பிள்ளை இலங்கைக்கு வந்த போது கண்ணீர் சிந்திய இந்த தாய் மார்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

இவர்கள் கேட்பது அவர்கள் இழந்த பூமியையோ. பொருள்களையோ. சுயமரியாதையையோ அல்ல. போரின் போதும். போர் முடிந்த பின்பும் காணாமற் போன தங்கள் பிள்ளைகள், அண்ணன்கள் , தம்பிகளைத் தான் தேடிக் கண்டுபிடித்துத். தரும்படி கேட்கிறார்கள். வீட்டுக்கு ஒரு ஆடவன் இருந்த நிலையில் இன்று வீட்டில் பெண்களைத் தவிர யாருமே இல்லாத நிலையில் தமிழர்களை வைத்துள்ளது இலங்கை அரசு.

தன்மானத்தோடும். சகல வசதிகளோடும் வாழ்ந்து வந்த தமிழினத்தை இந்தியாவும் இலங்கையும் கூறு போட்டன. கூட்டுச் சேர்ந்து கொத்துக் குண்டுகள் போட்டு அழித்தன. இலங்கை ராணுவத்தில் சிக்கிய விடுதலைப்புலிகளையும் அப்பாவித் தமிழர்களையும் கொடும் சிறையில் அடைத்து வைத்து இன்று வரை கொடுமைப்படுத்தி வருகிறது இலங்கை அரசு. இலங்கை செய்த போர் குற்றத்துக்கு. இனப்படுகொலைக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை , இழந்த பகுதிகள் தமிழர்களுக்கு கிடைக்கவில்லை . தமிழர் பகுதியை தமிழர்களே ஆட்சி செய்யும் நிலையும் அங்கு இல்லை.

தமிழர் நிலங்கள் பறிக்கப்பட்டு , மொழி சிதைக்கப்பட்டு. பண்பாடு அழிக்கப்பட்டு . கோவில்கள் உடைக்கப்பட்டு . தமிழர் இனமே பெரும் மீளமுடியாத சோகத்தில் மூழ்கி உள்ளது. நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகை தந்ததை. வானத்தில் இருந்து ஒரு தேவதூதர் வந்தது போல உணருகின்றனர் தமிழர்கள். அவரிடம் தங்கள் கண்ணீர் கதை யைக் சொல்லி அழுகின்றனர் . பல ருக்கு அந்த வாய்ப்பும் மறுக்கப்பட்டு விட்டது. குறையைச் சொன்ன மக்க ளுக்கு இலங்கை ராணுவம் மிரட்டல் விடுகிறது. இதையெல்லாம் பார்க்கும் போது. தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு என்பது அவர்களுக்கான தனி அரசு என்பது மட்டும் தான் என்பது புரிகிறது.

தமிழீழ மக்களின் இன்றைய அவல நிலைக்குக் காரணம் இந்திய காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மட்டுமல்ல . தமிழக திமுக அதிமுக கட்சி களும் தான். ஈழத்தில் நடந்த இனப் படுகொலையைத் தடுக்கத் தவறிய அனைத்து அதிகார வர்க்கமும் ஒரு நாள் தண்டனையைப் பெற்றே தீர வேண்டும். . இந்தியாவில் காங்கிரஸ் அரசு மண்ணோடு மண்ணாக போக வேண்டும். அப்போது தான் தமிழர் களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை களுக்கு நியாயம் கிடைக்கும்.

இனியாவது தமிழர்கள் ஒன்றுகூடி உண்மையான விடுதலைக்காக பாடு படவேண்டும். கட்சி, மதம், சாதி கடந்து நாம் ஒன்றி ணைந்தால் நிச்சயம் சுதந்திரம் காணலாம். பேராய திராவிடக் கட்சிகளை வீழ்த்தி தன்னாட்சி அதிகா ரம் கொண்ட தமிழகத்தையும் காணலாம்.

# வெளித் தோற்றத்துக்கு மட்டும் சொர்க்கமாகும் இலங்கை

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் தொடரப்பட்ட 26 ஆண்டுகால நீண்ட உள்நாட்டுப் போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகளின் பின்னர், தற்போது இலங்கை அரசு நாட்டில் சமாதானமும் ஒற்றுமையும் நிலைநாட்டப்பட்டுள்ளதாக உலகை நம்பவைக்க வேண்டிய நிலையிலுள்ளது.

பாங்கொங்கிலிருந்து புறப்பட்ட சிறிலங்கா எயர்லைன்ஸ் 423 விமானத்தின் விமானிஇலங்கைத் தீவில் தற்போது அமைதி ஏற்பட்டுள்ளதைப் பயணிகளுக்குக் காண்பிப்பதில் பெரும் விருப்பம் கொண்டிருந்தார்.

இந்த விமானி தேயிலைத் தோட்டங்களைக் கொண்ட இலங்கையின் மத்திய பகுதியின் மேலாகப் பறந்து கொழும்பைச் சென்றடைவதன் மூலம் தனது நாட்டின் வளங்களைக் காண்பிப்பதில் ஆர்வங் கொண்டுள்ளார்.

எங்களது எல்லாப் பயணிகளையும் சொர்க்கத்திற்கு மகிழ்வுடன் வரவேற்கிறோம்.... புத்துயிர் பெற்றுள்ள சொர்க்கத்திற்கு வரவேற்கிறோம் என எயர்லைன்ஸ் 423 விமானத்தின் விமானி தனது இனிமையான குரலில் வரவேற்றார்.

மகிழ்ச்சியை மட்டும் தருகின்ற இலங்கையின் கரையோர சுற்றுலா மையங்களைப் பார்க்கும் போது ஆசியாவில் மிகச் சிறந்த இடமாக இது காணப்படலாம். அத்துடன் போரில் வெற்றிவாகை சூடிய ராஜபக்ஷவின் அரசில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்களுக்கு இலங்கையானது சொர்க்கத்திற்குச் சமனான ஒன்றாகக் காணப்படுகிறது. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவாலும் அவரது மூன்று சகோதரர்களாலும் ஆளப்படும் இலங்கை அரசில் உள்ள உறுப்பினர்கள் பலரின் கனவுக் கோட்டையாக இலங்கை விளங்கு கிறது.

2005இலிருந்து மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் இலங்கையை ஆட்சி செய்கின்றனர். தென்னாசியாவில் மாறிவரும் தற்

> சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கிடையில் பல பத்தாண்டுகளாகத் தொடரப்பட்ட போரின்போது முஸ்லிம் சிறுபான்மையினர் நடுநிலையாகச் செயற்பட்டனர். ஆனால் தற்போது சிங்கள பெரும்பான்மையினரால் தாம் அடக்கப்படுவதாக இலங்கையில் வாழும் பெரும்பாலான முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

போதைய அரசியல் இயங்கு நிலையானது ராஜபக்ஷ குடும்பம் இன்னுமொரு தலைமுறைக்கு அரசியல் உயர்பீடத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கான நிலைப்பாட்டை வழங்குகிறது. ராஜபக்ஷ சகோதரர்களுக்கு வர்த்தக மற்றும் இராணுவ உதவிகளை வழங்கும் நாடுகளுடன், போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தமிழ் மக்கள் வாழும் வடக்கில் ஆதாயங்களை ஈட்டக்கூடிய நவீன பொருளாதார மீள்கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன.

இவ்வாறான ஒரு நிலையில். போருக்குப் பின்னான இலங்கையில். சொர்க்கம் எனக் கூறப்படுகின்ற எண்ணக்கருவானது இத்தீவில் வாழுகின்ற பெரும்பாலானவர்கள் மத்தியில் விவாதத்திற்குரிய ஒன்றாகவே காணப்படுகிறது என்பதை The Global Mail ஊடகம் ஆய்வு செய்துள்ளது.

இந்நிலையில்இலங்கைக்குச் செல்லும் சுற்றுலாப்பயணிகளுக்கோ அன்றி ராஜபக்ஷவால் ஊட்டப்படுகின்ற அரசியல்வாதிகளுக்கோ அன்றி இலங்கைத் தீவில் வாழும் குடிமக்களைப் பொறுத்தளவில் 'இலங்கை ஒரு சொர்க்கபுரி' என்கின்ற கருத்தாக்கமானது கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. இத்தீவில் வாழும் முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்களைப் பொறுத்தளவில் போருக்குப் பின்னான இலங்கையில் வாழ்வதற்கான நிலை காணப்படவில்லை.

தற்போது ஆட்கடத்தலானது ஆதாய மீட்டுகின்ற ஒரு வர்த்தகமாக மாறியுள்ளது. இந்நிலையில் ஆஸ்திரேலியாவானது தனது நாட்டுக்குள் அத்துமீறி நுழைபவர்களை பப்புவா நியூ யோகினிக்கு இடம்மாற்றம் செய்வது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானமானது புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் நிச்சயமற்ற சூழலை ஏற்படுத்தியுள்ளது.

போரின் முடிவானது சிங்கள தேசியவாதம் நாட்டில் மிகத் தீவிரம்பெற வழிவகுத்துள்ள அதேவேளையில், சிறிலங்காத் தீவின் மொத்த சனத்தொகையான 21மில்லியனில் 15 சதவீதமான சிறுபான்மை தமிழ் சமூகமானது தாம் தொடர்ந்தும் அடக்கப்படுவதாகவும், 'திட்டமிடப்பட்ட ரீதியில் இனப்படுகொலைக்கு' ஆளாவதாகவும் கருதுகின்றனர். பல நூற்றாண்டுகளாக சிறிலங்காத் தீவில் வேரூன்றியுள்ள இந்து-தமிழ் கலாசாரத்தை முற்றாக அழிப்பதற்கான நடவடிக்கைகளை சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் மேற்கொள்வதாக தமிழ் மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

தமிழர்கள் வாழும் வடக்கு- - கிழக்கு முழுவதிலும் இலங்கை இராணுவத்தினர், தனியாருக்குச் சொந்தமான காணிகளை அபகரித்து இராணுவத் தளங்களை உருவாக்குகின்றனர். ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் இலங்கையில் படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல வேண்டாம் என்பதை வலியுறுத்தி விளம்பரப் பலகைகள்நாட்டப்பட்டுள்ளன. இலங்கை அரசானது இவ்வாறு படகுகள் மூலம் தமிழ் மக்கள் ஆஸ்திரேலியா செல்வதற்கு துணைபோவதாக சந்தேகிக்கப்படும் அதேவேளையில், கெவின் றூட்டின், பப்புவா நியூயோகினித் தீர்மானமானது எவ்வளவு தூரம் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாட்டுக்குள் நுழைவதை நிறுத்தும் என்பதை நிச்சயப்படுத்திக் கூறமுடியாது.

இலங்கைத்தீவின் மொத்த சனத்தொகையில் 10 சதவீதத்தைக் கொண்ட முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தின் மத்தியிலும் தற்போது விரோதம் தோன்றியுள்ளது. தமிழ் மொழியைப் பேசும் முஸ்லிம் மக்கள் அரேபியாவிலிருந்து 7ஆம் நூற்றாண்டில் வர்த்தக நோக்கம் கருதி இலங்கையில் குடியேறிய மக்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கிடையில் பல பத்தாண்டுகளாகத் தொடரப்பட்ட போரின்போது முஸ்லிம் சிறுபான்மையினர் நடுநிலையாகச் செயற்பட்டனர். ஆனால் தற்போது சிங்கள பெரும்பான்மையினரால் தாம் அடக்கப்படுவதாக இலங்கையில் வாழும் பெரும்பாலான முஸ்லீம்கள் கருதுகின்றனர். தென் இலங்கையைச் சேர்ந்த கல்வியறிவு குறைந்த கிராமிய மட்ட பௌத்த சிங்களவர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷக்கள் தம்மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதாக முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

பௌத்த பிக்குகளின் தலைமையில் செயற்படும் சிங்களக் காடையர்கள் தம்மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதாக முஸ்லிம்கள் நம்புகின்றனர். தொடர்ச்சியாக தற்போது முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் ஏனைய இடங்கள் மீது சிங்களக் காடையர்கள் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். அண்மையில் அதாவது ஆகஸ்ட் 10இல். கொழும்பு பள்ளிவாசல் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளில். முஸ்லிம் மக்கள் மீது சிங்கள ஆயுதக் குழுவினரால் 30இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை பதிவு செய்யப்பட்டுள்ளன.


பொது அமைப்புக்கள் தமது கருத்துக்களை முன்வைப்பதற்கும் ஊடகங்கள் சுயாதீனமாக தமது கருத்துக்களை முன்வைப்பதற்கும் ராஜபக்ஷக்கள் முட்டுக்கட்டைகளாக உள்ளனர். பொது அமைப்புக்கள் மற்றும் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதில் ராஜபக்ஷாக்கள் அதிகம் ஈடுபாடு காட்டுகின்றனர். ஊடகவியலாளர்கள் மீதும் இவர்கள் தமது செல்வாக்குகளைப் பிரயோகிக்கின்றனர். ஊடகவியலாளர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் தஞ்சம் புகுகின்றனர்.

ஒற்றையாட்சி நிலவும் பல்கலசாரத்தைக் கொண்ட தமது 'மசாலா சமூகத்தின்' விழுமியங்களும் சுதந்திரம் என்பனவும் சிதைவுற்று வருவதாக சிங்கள மிதவாதிகள் மற்றும் கல்விமான்கள் போன்றோர் கவலை கொள்கின்றனர். காலனித்துவத்தின் பின்னரும் ஜனநாயகம் பின்பற்றப்பட்ட தென்னாசியாவின் ஒரேயொரு நாடான இவங்கையானது தற்போது வன்முறைகள் இடம்பெறும் 'மாபியா நாடாக' மாறிவருவதானது இங்கு வாழும் புத்திமான்கள் மனதில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

*(ஆஸ்திரேலிய குளோபல் மெயில் ஊடகத்திலிருந்து)*


உதயன் 30/08/2013

# அப்பிளின் புதிய 'ஐ' கடிகாரம்



அப்பிள் நிறுவனம் புதிய 'ஐ' கடிகாரம் உற்பத்தியில் மும்முரமாக ஈடுபட்டு வருவது அறிந்த விடயமே.
தற்போது குறித்த கடிகாரம் தொடர்பான வடிவமைப்பு குறித்த தகவல்களை அப்பிள் நிறுவனம் வெளியிட்டுள்ளது.
எதிர்வரும் 2014 ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இச்சாதனம், அப்பிளின் முன்னைய ஸ்மார்ட் கைக்கடிகாரத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது.
மேலும் இதனைக் கைபேசிக்கு இணையாக பயன்படுத்தக்கூடியவாறு இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.
இதனிடையே அப்பிளுக்குப் போட்டியாக விளங்கும் 'சம்சுங்' நிறுவனம் இவ்வருட இறுதியில் தனது ஸ்மார்ட் கைக்கடிகாரத்தை அறிமுகம் செய்யவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.


அடுத்த வருடமளவில் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இச்சாதனம் அப்பிளின் முன்னைய ஸ்மார்ட் கைக்கடிகாரத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது.



# அமெரிக்காவில் மிகத் துல்லியமான கடிகாரம் வடிவமைப்பு

உலகின் மிகத் துல்லியமான கடிகாரத்தை, அமெரிக்க விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.
அமெரிக்காவின், தேசிய தரம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயற்பியலாளர், ஆன்ட்ரு லுட்லோ இது பற்றிக் கூறியதாவது,
அடுத்த தலைமுறைக்கான, அதிநவீன மற்றும் துல்லியமான இரண்டு கடிகாரங்கள் பரிசோதனைக்காகத் நயாரிக்கப்பட்டுள்ளன.
ஏட்டர்பீயம் லேட்டிஸ்' என்ற வேதியியல் தனிமம் பயன்படுத்தப்பட்டிருப்பதால், கடிகாரத்தின் அளவீட்டு முறை நிலைப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தக் கடிகாரம், அதில் உள்ள பெண்டுலத்தின் அலைவீச்சுக்கு ஏற்ப செயல்படும். இந்த எட்டர்பியம் கடிகாரத்தில், 10 ஆயிரம் அரிய அணுக்கள் 10 மைக்ரோகெல்வின் அளவுக்கு குளிர்விக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.
இது மற்றக் கடிகாரங்களை விட, 10 மடங்கு துல்லியமான நேரத்தைக் காட்டும்.
இக்கடிகாரத்தைக் கப்பல் போக்குவரத்து, காந்தப்புலங்கள் மற்றும் வானிலை போன்றவற்றில் பயன்படுத்த முடியும் என்று ஆன்ட்ரு கூறினார்.


# Honor 3 ஸ்மார்ட் கைபேசி விரைவில் அறிமுகம்



Huawei நிறுவனம் Honor 3 என்ற புதிய ஸ்மார்ட் கைபேசியை சீனாவில் அறிமுகம் செய்யவுள்ளது.
4.7 அங்குல அளவுடைய தொடுதிரையைக் கொண்ட இக்கைபேசி 1.5GHz வேகத் தில் செயலாற்றவல்ல Processor, மற்றும் பிரதான நினைவகமாக 2 ஜிபி றம் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.
இதன் சேமிப்பு நினைவகமாக 8 ஜிபி தரப்பட்டுள்ளது.
கூகுளின் அன்ரோயிட் - 4.2.2 ஜெலி இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட துடன் 13 மெகாபிக்சல்களை உடைய கமராவையும் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேஸ்புக் பாவனையாளர்களுக்கான Canon வடிவமைத்துள்ள அதிநவீன கமரா

முதற்தர கமராக்களை உற்பத்தி செய்யும் நிறுவனமான கனொான் ஆனது தற்போது பேஸ்புக் பயன்படுத்துவோருக்கான அதிநவீன கமரா ஒன்றை வடிவமைத்துள்ளது.
பவ சொட் என் பேஸ்புக் எடிசன் கொம்பக் கமரா (PowerShot N Facebook Edition Compact Camera) என அழைக்கப்படும் இக்கமராவில் பேஸ்புக் பொத்தான் ஒன்று தரப்பட்டுள்ளது. இதனை அழுத்துவதன் மூலம் புகைப்படத்தை நேரடியாகவே பேஸ்புக் தளத்தில் தரவேற்றம் செய்துகொள்ள முடியும்.
இது தவிர 2.8 அங்குல ஸிலிம் திரை, 12.1 பெரியளவிலான பிக்சல்களை உடைய உயர் தரத்தை உடைய சி.எம்.ஓ.எஸ். சென்சார் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இதன் பெறுமதி 300 டொலர்களாகும்.



# சாரதி இல்லாமல் ஓடும் அதிவேக ரோபோ கார்

## வடிவமைக்கிறது கூகுள்




சாரதி இல்லாமல் ஓடும் அதிவேக ரோபோ காரை கூகுள் நிறுவனம் விரைவில் தயாரிக்க உள்ளது.
தொழில்நுட்பத் துறையில் முன்னணியில் இருக்கும் கூகுள் நிறுவனம் 2010 ஆம் ஆண்டு கார்களில் தானியங்கி தொழில்நுட்பத்தை உருவாக்கியது.
இருப்பினும் எந்தவொரு நிறுவனமும் ஒப்பந்தம் செய்ய முன்வரவில்லை.
இதனையடுத்து தானாகவே கார்களை உற்பத்தி செய்ய நினைத்த கூகுள், சாரதி இல்லாமல் இயங்கும் ரோபோ கார்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
இதற்காக காரில் கமராக்கள், ரேடர்கள் மற்றும் கணினி தொழில்நுட்பங்களை கூகுளே வழங்கவுள்ளது.
இந்தக் கார்கள் பயணிகளை ஏற்றிச்சென்று குறிப்பிட்ட இடத்தில் இறக்கிவிடும்.
இதற்கான பணிகள் முடிவடைந்து, இந்த ஆண்டு இறுதிக்குள் லண்டன் வீதிகளில் சோதனை ஓட்டம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.
மேலும் இந்த கார்களால் சாலை விபத்துகள் மிகவும் குறைவாக இருக்கும், சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படாது. போக்குவரத்துத் துறையையே இக்கார்கள் அடியோடு மாற்றிவிடும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வட்டக்கச்சி மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவரை நியமிக்குக

## மீள்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை


அக்கராயன், ஓக.30


கிளிநொச்சி வட்டக்கச்சி மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்குமாறு இந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியின் கிழக்குப் பகுதியில் உபநகரமாக வட்டக்கச்சி உருவாகி வரும் இராமநாதபுரம் பகுதிகளின் உயிர் நாடியாக வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனை விளங்குகின்றது.

ஆனால் கிளிநொச்சியிலிருந்து தற்காலிகக் கடமையில் செல்லும் மருத்துவர்கள் வாரத்தில் சில நாள்களில் மட்டுமே வெளி நோயாளர்களைப் பார்வையிடுவதால் பாம்புக்கடிக்கு உள்ளாகியவர்கள் உள்ளிட்ட அவசர நோயாளர்கள் 10 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள கிளநொச்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் செல்ல வேண்டியுள்ளதாக இங்கு மீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய கிராமங்களில் மீளக்குடியமர்ந்துள்ள ஆயிரத்து 400 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் நன்மை கருதி அம்புலன்ஸ் வண்டி ஒன்றை வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனையில் நிறுத்தி வைப்பதற்கான ஏற்பாடுகளை மருத்துவ அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-18)





நெடுங்கேணி வேலங்குளம் பகுதியில் காட்டுயானைகள் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. வீட்டின் சுவரொன்று சேதமாக்கப்பட்ட நிலையிலும் பயன்தரு பயிர்கள் அழிக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. (க-435)

### கல்வித் தேடலுக்கான

# வசதிகள் இல்லாத பொது நூலகம்

அக்கராயன், ஓக.30

கிளிநொச்சி நகரில் இயங்கி வரும் பொதுநூலகம் மாணவர்களின் கல்வித் தேடலுக்கு உதவும் வகையில் இயங்குவதில்லை என இங்குள்ள கல்விச் சமூகத்தினர் தெரிவிக்கின்றனர்.

கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் தற்போது இங்கு இயங்கி வரும் பொது நூலகம் இட நெருக்கடிக்கு மத்தியில் உள்ளதைக் காண முடிகின்றது.

இதனால் இந்த நூலகத்தைப் பயன்படுத்தும் பலரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அக்கராயன் மத்திய பகுதியிலும் நூலகம் ஒன்றை அமைக்குமாறு இங்கு மீளக் குடியமர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சியின் உப நகரங்களில் ஒன்றாக வளர்ந்து வரும் அக்கராயனில் சிறந்த நூலகம் ஒன்று அமைந்திருக்க வேண்டியது அவசியம் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-18)

# கூட்டுவலை வீசி மீன்பிடிப்பதற்கு சிங்களவருக்கு அமைச்சர் அனுமதி

## கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில்

முல்லைத்தீவு, ஓக 30

கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் தடை செய்யப்பட்ட கூட்டு வலை வீசி மீன் பிடிப்பதற்கு எதிர்வரும் 21ஆம் திகதி வரை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன சிங்கள மக்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.



கடந்த காலங்களில் இந்தப் பகுதியில் விளக்கு வைத்து கூட்டு வலை வீசி மீன் பிடிப்பதற்கு முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கம் கடும் எதிர்ப்பு வெளியிட்டு வந்ததுடன், சங்கத் தலைவர் உண்ணாவிரதமும் மேற்கொண்டிருந்தார்.

இதனை அடுத்து கடற் றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு அங்கு அத் தொழிலை மேற்கொள்வதற்கு தடை விதித்திருந்தது.

இந்தச் சூழ்நிலையில் நேற்றைய தினம் கொக்கிளாய் முகத்துவாரம் பகுதிக்கு பயணம் மேற்கொண்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரிடம் அந்தப் பகுதியில் கூட்டு வலை வீசி மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்குமாறு சிங்கள மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் எதிர் வரும் 21 ஆம் திகதி வரை அத் தொழிலை மேற்கொள்ள அனு மதி வழங்கினார் என்று கூறப்படுகின்றது.

அங்கு பிரசன்னமாகியிருந்த முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத் தலைவர், எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடுவதால் அமைச்சரின் அனுமதிக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை என்றும்-

அமைச்சரின் இந்த நடவடிக்கையானது வடமாகாண சபைத் தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளைக் கவரும் வகையில் மேற்கொள்ளப்பட்டதாவும் அந்தப் பகுதி மீனவ சங்கங்கள் தெரிவித்தன. (க-5-400)



# மின்னல் தாக்கியதில் பெண் சாவு

மாங்குளம், ஓக.30

மாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீட்டுக் கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தபோது மின்னல் தாக்கத்துக்கு உள்ளான இவர் மாங்குளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை ப்பயனின்றி உயிரிழந்தார்.

மாங்குளம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணா நிர்மலாதேசி (வயது -26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-400)

# வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழா

## நாளை மறுதினம் ஆரம்பம்

முல்லைத்தீவு,ஓக.30

வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் தமிழ் இலக்கியப் பெருவிழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலுள்ள மிஸ்கின் புலவர் அரங்கில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமியும் கௌரவ விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திராவும் கலந்து கொள்வர்.

இதன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் மறுநாளான திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியின் அரியான் பொய்கை செல்லத்துரை அரங்கிலே வடக்கு மாகாண கலை பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, வடக்கு ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ். அரச அதிபர் சு.அருமை நாயகம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்த இரண்டுநாள் நிகழ்வுகளிலும் வடமாகாணப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-288)

# அதிவேக ரயில்கள் பயணிக்கவுள்ளதால் கவனமாக இருக்குமாறு அறிவுறுத்தல்

## பரீட்சார்த்த அடிப்படையில்

கிளிநொச்சி, ஓக. 30

ஓமந்தை தொடக்கம் கிளிநொச்சி வரை புனரமைக்கப்பட்ட ரயில் பாதையில் பரீட்சார்த்தமாக அதிவேக ரயில்கள் பயணிக்கவுள்ளதால் ரயில் கடவைகளை மக்கள் கடந்து செல்லும் போது மிக வும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



ஓமந்தையில் இருந்து கிளி நொச்சி வரையான பகுதிகளில் ரயில் பாதை யின் புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று முடிவடைந்துள்ளன. தற்போது இந்தப் பாதையால் பரீட்சார்த்தமாக அதிவேக புகையிரதங்கள் பய ணிக்கவுள்ளன. ஆனால் இந்தப் பரீட்சார்த்த அதிவேக ரயில்கள் நேரகாலம் இல்லாது பயணிக்கவுள்ளதால் புகையிரதக் கடவைகள் உள்ள இடங்களைச் சேர்ந்த மக்கள் அந்தப் பகுதியைக் கடந்து செல்லும் போது மிகவும் அவதானமாக கடந்து செல்லுமாறும், சிறுவர்கள் மேற்படி புகையிரதக் கடவைகளைக் கடந்து செல்வதில் பெற்றோர்கள் மிகவும் அவதானம்செலுத்தவேண்டும் எனவும், ரயில்வேப் பகுதி யினர் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும் ரயில் பாதையின் அருகே குடியிருப்பவர்கள் மற்றும் அங்குள்ள சிறுவர்கள் ரயில் பாதைகளில் நடந்து செல்லல், விளையாடுதல் போன்றவற்றையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், ரயில்வே புனரமைப்புப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (க-426)

# வவுனியா நடைபாதையூடாக வாகனங்கள் செல்லத் தடை

வவுனியா, ஓக.30

வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள நடைபாதையூடாக மோட்டார் சைக்கிள் உட்பட வாகனங்களில் செல்வதற்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

இந்த நடைபாதையை முன்னர் நடை பாதை வியாபாரிகள் பயன்படுத்தி வந்தனர். தற்போது வவுனியா நகர சபை அதனைத் தடை செய்ததால் நடைபாதை வியாபாரம் இடம்பெறுவதில்லை.

இதனால் வெற்றிடமாகவுள்ள அப்பாதையூடாக வாகனங்கள் செல்வதால் பொதுமக்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டியதை அடுத்து இந்தத் தடை உத்தரவைப் பொலிஸார் பிறப்பித்துள்ளனர்.

இந்தத் தடையை மீறி வாகனங்களில் பயணிப்போர் தண்டம் செலுத்த நேருமென பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

# மக்கள் தமது பிரச்சினைகளை அரசியல்வாதிகளின் கரங்களுக்கு எட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்

## கபே அமைப்பின் பணிப்பாளர் ஆலோசனை

கிளிநொச்சி, ஓக.30

மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பான தகவல்கள் அரசியல்வாதிகளின் கரங்களுக்கு எட்டாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார் கபே அமைப்பின் பணிப்பாளரான ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன்.

கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்ற மக்களுடனான கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம், பௌத்தம் ஆகிய மதங்களைச் சேர்ந்த மக்கள் இன பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நாம் நாட்டில் உள்ள சிவில் அமைப்புக்களை-ஒன்றிணைந்து செயற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். வடமாகாண சபை அமையும் போது கிராமங்களில் உள்ள சிவில் அமைப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தால்தான் பிரச்சினைகளை இலகுவாக இனம் காண முடியும். மக்களுடைய பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளின் கைகளில் இவற்றைக் கொடுக்கக் கூடாது. நேர்மையான தேர்தலை நடத்த வேண்டியது முக்கியமானதாகும்.-என்றார். (க-18)



கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் நடத்திய கண்காட்சியை யாழ்.அரச அதிபர் சுந்தரம் அரு மைநாயகம் பார்வையிடுகின்றார். (வ-7)

# ஒரு மாத காலத்துக்குள் பழுதடையும் களஞ்சியத்திலிருக்கும் விதை வெங்காயம்

## விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு

வலி.தென்மேற்கு, ஓக.30
பண்டத்தரிப்புப் பிரதேசத்தில் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் விதை வெங்காயம் ஒரு மாத காலத்துக்குள் பழுதடைவதால் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வரும் நூற்றுக் கணக்கான விவசாயிகள் பெரும் நட்டத்துக்குள்ளாகியதுடன் விதை வெங்காயம் கிடைக்காததால் வெங்காயச் செய்கையையும் கைவிட்டுள்ளனர். இதனால் அவர்களுடைய வருமானத்தில் கணிசமான இழப்பு ஏற்பட்டுள்ளது.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பண்டத்தரிப்புப் பகுதியில் காலபோக நெல் அறுவடை முடிவடைந்ததும் சுமார் 300 இற்கும் அதிகமான விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வருவது வழக்கம். அவர்கள் தங்களுக்குத் தேவையான விதை வெங்காயத்தை அறுவடை காலங் களில் பிடி களாகக் கட்டி பாரம்பரிய முறையில் களஞ்சியப்படுத்தி வைப்பது வழக்கம்.
இவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கும் விதை வெங்காயம் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக ஒரு மாத காலத்துக்குள் பழுதடைகிறது. ஆறு மாத காலத்துக்கு மேல் பழுதடையாது இருக்க வேண்டிய விதை வெங்காயம் ஒரு மாதத்துக்குள் பழுதடைவது குறித்து கவலையடைந்துள்ள விவசாயிகள் இதற்கான காரணத்தை அறிய முடியாமல் திண்டாடுகின்றனர்.
பண வசதியுள்ள விவசாயிகள் கூடி விலைக்கு விதை வெங்காயத்தை வாங்கி நடுகை செய்யும் அதேவேளை ஏழை விவசாயிகள் நிதியின்மை காரணமாக வெங்காயச் செய்கையை நிறுத்தி விட்டனர். இதனால் நூற்றுக் கணக்கான விளை நிலங்கள் வெறிச் சோடிக் காணப்படுகின்றன.
கடந்த காலங்களில் பண்டத்தரிப்பு பிரதேசத்திலிருந்து லொறிகள் மூலம் தென்னிலங்கைக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. விதை வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள நோய் காரணமாகவும் விலை அதிகரிப்பாலும் வெங்காய ஏற்றுமதி தடைப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பாதிக் கப்பட்டுள்ள விவசாயிகள் விதை வெங்காயத்துக்கு ஏற்படும் நோய் குறித்து ஆராய்ச்சி செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.



இதேவேளை சுனாமிக்குப் பின்பு தான் விதை வெங்காயத்துக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அனுபவம் முதிர்ந்த விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (வ-115)

# இலாவகமாகப் பேசி ஒயில் திருட முற்பட்டோர் வசமாக மாட்டினர்

வலி.வடக்கு.ஓக.30
எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஒயிலின் விலையைக் கேட்பது போன்று நடித்து இருபது லீற்றர் ஒயிலை திருடிக்கொண்டு செல்ல முற்பட்டபோது எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளரிடம் வகையாக மாட்டிக்கொண்ட சம்பவம் சுன்னாகத்தில் இடம் பெற்றுள்ளது.
இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-
குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் ஒயிலை விலைகேட்டு முகாமையாளரின் கவனத்தைத் திசை திருப்ப மற்றைய நபர் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஒயில் கான்களை திருட்டுத்தனமாக எடுத்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளார். இதனை அவதானித்த முகாமையாளர் தன்னுடன் கதைத்துக்கொண்டு நின்றவரைப் பிடித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.
அதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த சந்தேக நபர்கள் இருவரும் மன்னார் மற்றும் உடுவில் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்க்கொண்டுள்ளனர். (வ-86)

# முதியோர், மாற்றுவலுவுள்ளோர் தினங்களை அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக.30
வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தினர் மாகாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் சர்வதேச முதியோர் தினம், சர்வதேச மாற்றுவலுள்ளோர் தினம் ஆகியவற்றைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.
ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் தினத்தையும் டிசெம்பர் 3ஆம் திகதி சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினத்தையும் கொண்டாடுமாறும் அறிவித்துள்ளனர்.
'முதியோர் அபிவிருத்திக்கான புதிய சக்தி' என்னும் தலைப்பில் முதியோர் தின விழாவையும், 'தடைகளைத் தகர்த்த திறந்த கதவுகளுக்கு ஊடாக அனைவருக்குமான சமுதாயம்' என்னும் தலைப்பில் மாற்று வலுவுள்ளோர் தினத்தையும் கொண்டாடுமாறும்,
இது தொடர்பாக மாணவர்களிடையே விழிப்புணர்வூட்டும் கட்டுரை, கவிதை, சித்திரம், பேச்சுஆகிய போட்டிகளை நடத்துமாறும் அறிவித்துள்ளனர். (வ-9)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தி யோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.



**இடபம்:** ஓய்வின்றி உழைக்க வேண்டி வரும். மனஇறுக்கங்கள் உருவாகும். பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். உத்தி யோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.



**மிதுனம்:** வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். அரச காரியங்கள் தாமதமாக முடியும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள்.



**கடகம்:** பணவரவு திருப்தி தரும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.



**சிங்கம்:** திருப்திகரமாக இருக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம் வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**கன்னி:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**நாளை**

ஆவணி-15 சனிக்கிழமை 31.08.2013
திதி: தசமி மு.ப.10.26 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.11.27 வரை
சுபநேரம்: 03.05 - 04.35 வரை
இராகுகாலம்: 09.05 - 10.35 வரை



**துலாம்:** மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். அநாவசியப் பேச்சைத் தவிர்ப்பது நல்லது. யாரையும் முழுமையாக நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பின்மையால் லாபம் குறையும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.



**விருச்சிகம்:** குடும்பத்தில் அமைதி திரும்பும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**தனுசு:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.



**மகரம்:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளை தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளி வட்டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு.



**கும்பம்:** பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.



**மீனம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரிய மானவர்களின் சந்திப்பு நிகழும். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 1 | 9 |
| 1 | | 5 | | | | 4 | 3 | |
| 9 | 8 | | 1 | 3 | 5 | | | 6 |
| 5 | | | | 1 | | | 6 | |
| 2 | 4 | 3 | | | | 1 | 9 | 7 |
| | 6 | | | 9 | | | | 4 |
| 3 | | | 7 | 2 | 6 | | 4 | 5 |
| | 5 | 6 | | | | 3 | | 2 |
| 4 | 2 | | | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 8 | 2 | 6 | 4 | 3 | 9 | 5 |
| 3 | 4 | 2 | 9 | 8 | 5 | 6 | 1 | 7 |
| 9 | 6 | 5 | 1 | 7 | 3 | 4 | 2 | 8 |
| 7 | 2 | 9 | 8 | 1 | 6 | 5 | 3 | 4 |
| 6 | 3 | 4 | 5 | 9 | 2 | 7 | 8 | 1 |
| 8 | 5 | 1 | 3 | 4 | 7 | 2 | 6 | 9 |
| 2 | 9 | 7 | 6 | 5 | 8 | 1 | 4 | 3 |
| 4 | 1 | 3 | 7 | 2 | 9 | 8 | 5 | 6 |
| 5 | 8 | 6 | 4 | 3 | 1 | 9 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நல்லூர் ஆலயச் சூழலில்



யாழ்ப்பாணம், ஒக. 30
நல்லூர் கந்தன் ஆலய பத்தொன்பதாம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.
நிகழ்வில் 'ஒன்றே தேவன்'' என்ற பொருளில் ஓய்வு பெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசுவின் சிறப்புச் சொற்பொழிவும், வட்டுக்கோட்டை ஸ்ரீ கண்ணகி அம்மன் அறநெறிப் பாடசாலை, சாவகச்சேரி- சங்கத்தானை இத்தியடி இந்து இளைஞர் சங்க அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.
இசை அரங்கில் பாடலை செல்வி ஹம்சத்வனி சோமசுந்தரக் குருக்கள் வழங்க, அணிசெய் கலைஞர்களாக வயலின்- ஏ.ஜெயராமன், மிருதங்கம்- கே.கமலதாஸ், முகர்சிங்- கே.நந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

★ ★ ★

நல்லூர் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நல்லை ஆதீனத்தில் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு கலை வித்தகர் திருமதி குமுதா உமாகாந்தனின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நடைபெறும் மகாபாரத தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று மாலை 6.30 மணிக்கு ஆரம்பாகும். பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'அர்ச்சுணன் தபசு' பற்றி இசைப் பேருரை நிகழ்த்துவார்.

★ ★ ★

நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று இரவு 7.15 மணிக்கு சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் 'இந்து கலாசாரம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார்.

★ ★ ★

நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டு கழகத்தினர் நடத்தி வரும் தெய்வீக பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு "உள்ளத்தனைய உயர்வு" என்னும் தலைப்பில் தென் புலோலியூர் பராரமேஸின் சொற்பொழிவு இடம்பெறும். (ந-86-7-14)

# மாணவர்களின் அறிவை கணினிகள் தீர்மானிக்கக்கூடாது

## கூறுகிறார் மருத்துவர் முரளிகரன்

அக்கராயன், ஒக. 30
மாணவர்களின் அறிவைத் தீர்மானிக்கும் சக்தியாக கணினிகள் இருக்கக்கூடாது இவ்வாறு தெரிவித்தார் மருத்துவர் எஸ். முரளிகரன்.
கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற சிறுவர் அபி விருத் திக் குழுக்கூட்டத்தில் மாணவர்கள் இணையத் தளங்களில் மூழ்கியுள்ளார்கள் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.
கணினி தொடர்பான கல்வி அவசியமானதென்பதை எவரும் மறுக்க முடியாது.
ஆனால் மாணவர்களின் அறிவை கணினிகள் தீர் மானிக்கக் கூடாது. மாணவர்கள் சுய கற்கைகளில் அதிகளவில் ஈடுபடவேண்டும். கிளிநொச்சி பாடசாலை களில் பாதிப்படைந்த நிலையில் காணப்படும் மாணவர்களை வழி நடத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கே உள்ளது. மேலும் மாணவர்களின் அறிவை மேம்பட வைக்கும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கே உள்ளதெனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (க-18)

மணிவிழாக் காணும் நாயகியை வாழ்த்துகின்றோம்
திருமதி அருளானந்ததேவி மேகநாதன்
(SLTS-I) பயிற்றப்பட்ட கணித ஆசிரியர், பகுதித் தலைவர், பாட இணைப்பாளர்



சேவைக் காலம்

| | |
|---|---|
| யா/கொலம்பகம் றோ.க.ஆண்கள் பாடசாலை | 23.05.1978 |
| யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் | 01.03.1980 |
| கிளி/பரந்தன் குமரபுரம் மகாவித்தியாலயம் | 01.02.1981 |
| யா/ பலாலி பயிற்சிக் கல்லூரி | 01.01.1982 |
| யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் | 01.01.1984 |
| யா/அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம் | 14.09.1987 |
| யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் | 14.09.1989 |
| யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி | 01.01.1999 -இன்றுவரை |

வண்ணை வைத்தீஸ்வரனின் புகழோங்கும் வண்ணார்பண்ணைப் பதியினிலே
சிறப்புடனே தான் பிறந்த சுந்தரவதனமுடைய சுந்தரியாள்
எண்ணும் எழுத்தும் தன் இருகண்ணாய்க் கொண்டு
கணிதத் துறையிலே சிறப்புறத்தேறி
நல்லாசிரியனாய் மாணவ நலனில் அக்கறை செலுத்தி
இடர்ப்படும் மாணவர்களுக்கு கணித பாடமதை
இன்னமுதமாய் செவ்வனே ஊட்டி
நல்ல குருநாதனாய் நானிலம் போற்ற அயர்வு என்பது ஏதுமின்றி
இந்து மகளிர் கல்லூரி வளர்ச்சியில் ஆர்வம் மிகக்கொண்டு
பகுதித் தலைவராய் பாட இணைப்பாளராய் எனப்
பணிகள் பல விருப்போடு ஆற்றி - இன்று
அகவை அறுபதில் இளைப்பாறும் -எம் ஆசிரியை
நலம் பல பெற்றுப் பல்லாண்டு காலம் இனிதே வாழ
விநாயகனை வேண்டுகின்றோம்

Best Wishes

கல்லூரிச் சமூகம்
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஒக.30
சுன்னாகம் கிறிஸ்தவ ஆச் சிரமத்தின் 74 ஆவது ஆண்டு விழா இன்று வெள்ளிக் கிழமை தொடக்கம் தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறவுள்ளது.
குரு முதல்வர் எஸ். ஐ.ஜெயவீரசிங்கன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தூய நற்கருணை வழி பாடு, தோத்திர வழிபாடு, வேதாகமப் படிப்பு, பகிரங்கக் கூட்டம், பரிந்து வேண்டல், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம் பெறும். (ந-14)

## சந்தா அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக.30
பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் மாதாந்த சந்தா 20 ரூபாவில் இருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியத்தின் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுச் சங்கச் செயலாளர் செ.சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.
மேலும் சந்தா அதிகரிப்புக்கு ஏற்ப அங்கத்தவர்களுக்கு நிதியத்தால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க)

# வவுனியா பிரதேச மட்டத்திலான கலாசார போட்டி முடிவுகள்

வவுனியா பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட இந்த ஆண் டுக்கான பிரதேச தமிழ் மொழி மூலமான கலாசாரப் போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன. இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**தமிழ் மொழி மூலம்- பாலர் பிரிவு கவிதைப் போட்டி**
அ.கார்த்திகேயன் (தமிழ் மத்திய ம.வி.), ர.ஆதித்தன் (தமிழ் மத்திய ம.வி.), தே.கோபிதன், (தமிழ் மத்திய ம.வி.)

**கையெழுத்துப் போட்டி**
தி.அபினாஷ் (தமிழ் மத்திய ம.வி.), சு.அபிஷேக் (இறம்பைக் குளம் மகளிர் ம.வி.), சு.கிருசன் (பெரிய கோமரசன்குளம் ம.வி.)

**கனிஷ்ட பிரிவு - கவிதைப் போட்டி**
ந.ஆரதி (இறம்பைக்குளம் மகளிர் ம.வி.), அ.யதுர்சா (இறம்பைக்குளம் மகளிர் ம.வி.), ஜே.எவ்.மபாஸா (முஸ்லிம் ம.வி.), ச.பாத்திமா (இறம்பைக் குளம் மகளிர் ம.வி.)

**கட்டுரைப் போட்டி**
எம்.ஆர்.எவ்.றிப்கா (முஸ்லிம் ம.வி.), சி.விசாகி (தமிழ் மத் திய ம.வி), என்.எவ். சானாஸ் (முஸ்லிம் ம.வி.), சி.பவதாரணி (இறம்பைக் குளம் மகளிர் ம.வி.)

**கவிதைப் பாடல் போட்டி**
ஜீ.ஜெனுசன்(தமிழ் மத்திய ம.வி.), வி.சாகித்தியா (தமிழ் மத்திய ம.வி.), சி.லவன் (விபுலானந்தாக் கல்லூரி), வி.சம்யுத்தா (தமிழ் மத்திய ம.வி.)

**சிரேஷ்ட பிரிவு- கவிதைப் போட்டி**
நா.சுதர்சன் (கந்தபுரம் வாணி வித்தியாலயம்), ச.வர்ணிகா (இறம்பைக்குளம் மகளிர் ம.வி.), ரி.முஜீபா (முஸ்லிம் ம.வி.), த.லக்ஷி திரியங்கா (இறம்பைக்குளம் மகளிர் ம.வி.)

**கட்டுரைப் போட்டி**
தே.கிரேஷி (புதுக்குளம் ம.வி.), இ.கீர்த்தனா (விபுலானந்தா கல்லூரி), அ.அனுஜா (இறம்பைக் குளம் மகளிர் ம.வி.), வெ. கனீஸ்ரன் (தமிழ் மத்திய ம.வி.)

**கவிதை பாடல் போட்டி**
த.ஆரபி (இறம்பைக்குளம் மகளிர் ம.வி.), த.லக்ஷி திரியங்கா (இறம்பைக்குளம் மகளிர் ம.வி.)

**திறந்த பிரிவு- சிறுகதைப் போட்டி**
த.ஜங்கரன் (இல. 29, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா), ஜெ.சிங்கராசா (இல.242, தேக்கவத்தை, வவுனியா), து.நந்தீஸ்வரி (இல.41, 2ம் ஒழுங்கை, கோவில் புதுக்குளம், வவுனியா), மா.ஜெகன் (இல.46/16, கற்குழி, வவுனியா)

**சிறுவர் க்தை ஆக்கப் போட்டி**
மா.ஜெகன் (இல.46/16, கற்குழி, வவுனியா), ல.பாத்திமா நுஸ்கியா (தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), ச.பிருந்தா (தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா)

**இலக்கிய விவரணப் போட்டி**
வி.பவித்திரா (தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), மா.ஜெகன் (இல.46/16, கற்குழி, வவுனியா), ச.நிபோஜன் (தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா)

**பாடலாக்கப் போட்டி**
த.ஜங்கரன் (இல. 29, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா), நா.தியாகராசா (இல. 108, திருநாவற்குளம், வவுனியா), மா.ஜெகன் (இல.46/16, கற்குழி, வவுனியா), து.நந்தீஸ்வரி (இல.41, 2ம் ஒழுங்கை, கோவில் புதுக்குளம், வவுனியா)

**கவிதைப் போட்டி**
த.ஜங்கரன் (இல. 29, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா), த.ஷந்திரிக்கா (தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), சி.கிருஷ்ணவேள் (தேசிய கல்வியியற் கல்லூரி.வவுனியா)

**நாட்டார் கலை கற்றல் போட்டி**
மா.ஜெகன் (இல.46/16, கற் குழி, வவுனியா)

**சிங்கள மொழி மூலம்**
**திறந்த பிரிவு - கவிதைப் போட்டி**
டி.எம்.சந்திமாகுமாரி (இல. 108, தேக்கவத்தை கண்டி வீதி, வவுனியா)

**ஆங்கில மொழி மூலம்**
**திறந்த பிரிவு - கவிதைப் போட்டி**
நா.தியாகராசா (இல.108, திருநாவற்குளம், வவுனியா), வ.தர்மலிங்கம் (நொச்சிமோட்டை, ஓமந்தை)

**விமர்சனப் போட்டி**
நா.தியாகராசா (இல.108, திருநாவற்குளம், வவுனியா)

**சிறுகதைப் போட்டி**
நா.தியாகராசா (இல.108, திருநாவற்குளம், வவுனியா)

# வேட்பாளரின் அலுவலகம் மீது நேற்றுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக.30
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் க.செவ்வேளின் அலுவலகம் மீது இனந்தெரியாதோர் நேற்று அதிகாலை கல் வீசி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.
கே.கே.எஸ். வீதியில் கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அங்கு வைக்கப்பட்டிருந்த 'கட்டவுட்' மீதும் கழிவு ஓயில் வீசப்பட்டுள்ளது. (ஒ-5-86)

கடை வாடகைக்கு
யாழ். நகர் ஜும்மா பள்ளிவாசல் லேன் ஸ்ரான்லி வீதிக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு. (39288) (7.6.3)
தொடர்பு: 077 218 8392, 021 222 9229

வீடு வாடகைக்கு உண்டு
சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு. அரச, தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
075 671 5762, 077 868 0790
(39291)(11.6.3)

வீடு காணிகள் விற்பனைக்கு
மீசாலை வடக்கு APC க்கு அருகில் வசதிகளுடன் கூடிய வீடு, காணி 4¼ பரப்பு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 899 2028
077 620 4728
(சி 11637)(7.6.3)

விற்பனைக்கு
Dozer D4E
CAT Company
தொடர்பு: 077 1068822, 0771068821
(35238)(6.4)

J.D.C.S.I
CENTRE FOR HOLISTIC HEALING
உளநல பயிற்சி நெறி

நிறைவாழ்வு மையம் உளவள ஆலோசனை நிறுவனத்தினால் வார இறுதியில் நடத்தப்படும் உளநல பயிற்சிநெறி (3 ஆம் பிரிவு) செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளது. விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர்தரப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தும், க.பொ.த சாதாரணதரப் பிரிவில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியையாவது பெற்றிருத்தல் வேண்டும்.
விசேட பயிற்சிகளாக பிள்ளைகளுக்கான உளவள ஆலோசனை, மனவடு போன்றவை கருத்தில் கொள்ளப்படும். ஒரு வருடப் பயிற்சியின் பின் சான்றிதழ் வழங்கப்படும். சமூகப்பணி தொடர்பானவர்கள், சமூக சேவையாளர், ஆசிரியர்கள் போன்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப இறுதித் திகதி செப்ரெம்பர் (15.09.2013)
கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்
Director
Center for Holistic Healing
C/O: Diocesan Office,
Vaddukoddai.
(சி/11661) (11.3.6)

# பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் பங்குகொள்ளக் கூடாது

## வலியுறுத்தி மாபெரும் கையெழுத்து வேட்டை

லண்டன், ஓக.30
பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பிரிட்டன் பங்கு கொள்ளக் கூடாது என வலியுறுத்தி லண்டனில் தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் பிரதேசங்களில் மாபெரும் கையெழுத்து வேட்டை நடைபெற்று வருகிறது.
பிரிட்டன் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் இந்தக் கையெழுத்து வேட்டை பேர்மின்காம், கவெண்ட்ரி, விம்பிள்டன், ஈலிங் பகுதிகளில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொது இடங்களில் நடைபெற்று வருகிறது.



அத்துடன் பிரிட்டன் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் ஈஸ்ட்ஹாம் தொழிற் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபன் ரிம்ஸ்சை சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் இந்தக் கையெழுத்து வேட்டைக்கு மக்களை ஆதரவு வழங்குமாறும் கேட்டுள்ளனர். (வ-14)

# தண்ணீர்த் தட்டுப்பாட்டுக்கு இலங்கையில் இடமில்லை

## பேராதனை பல்கலை உபவேந்தர் கருத்து

கொழும்பு, ஓக.30
தண்ணீரே கிடையாது என்று சொல்லும்படியான எந்த ஒரு நாளையும் இலங்கை நாடு எதிர் நோக்கப் போவதில்லை. ஏனென்றால் அந்த அளவுக்கு எமது நாட்டில் தண்ணீர் வளம் அபரிமிதமாக இருக்கிறது.
இவ்வாறு தெரிவித்தார் பேராதனைப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் அதுல சேனாரத்ன.
சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகளுக்கான லக்ஷ்மர் கதிர்காமர் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் பேராசிரியர் இக்கருத்தை முன்வைத்தார். ஐ.நா.சர்வதேச தண்ணீர் கூட்டுறவுத் தினத்தையொட்டி இந்நிகழ்வு நடைபெற்றது.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் தண்ணீரின் தரம் பற்றி குறிப்பிட்டதுடன், இதய நோய்கள், சிறு நீரக பிரச்சினைகள் போன்றவற்றுக்கும் கடினமான தண்ணீருக்கும் உள்ள தொடர்பை விளக்கியதுடன் பற்சொத்தைக்கும் புளுவோரைட் அமிலத்துக்குமுள்ள தொடர்பையும் விளக்கினார். பாதுகாப்பான குடிதண்ணீரை உறுதிப்படுத்துவதற்கு தேசிய சுத்தப்படுத்தல் தராதரங்களைப் பேண வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

### தண்ணீர் இல்லாத நாளும் வரும்

சர்வதேச தண்ணீர் முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் வேர்ட் பேசுகையில் நேர்மாறான கருத்தை வெளியிட்டார். பொருளாதார மற்றும் அரசியல் சக்திகள் உருவாக்கும் நிலைமைகளால் தண்ணீர் இல்லாத நாள் ஒன்று உண்மையில் ஏற்படக் கூடும் என்றார். எதிர்மறை விருப்பங்கள். சமாந்தர மாக்கப்பட்டு கொள்கைகள் விஞ்ஞான பூர்வமாகவும் சமூக விழிப்போடும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார். விவசாய வேதிப் பொருள்களாலும் கழிவுப் பொருள்களாலும் இலங்கையில் நிலத்தடி நீர் அசுத்தமாக்கப்படுகின்றது என்றார். பேராதனைப் பல்கலையைச் சேர்ந்த கலாநிதி எச்.ஏ. தர்மகுணவர்தன மற்றும் பலர் அங்கு கருத்துக்களை வெளியிட்டனர். (ப)

# சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் சிறுவர் தொடர்பான கருத்தரங்குகள்

வவுனியா, ஓக.30
வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.
எல்லோருக்கும் கல்வி, சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தவிர்ப்போம், வளமான சிறுவர்களை எம்மண்ணில் உருவாக்குவோம் ஆகிய கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு இவை நடத்தப்படுகின்றன.
மேலும் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள குடும்பப் பெண்கள், தாதியர்கள், பாட சாலை ஆசிரியர்கள், ஓட்டோ சாரதிகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் எனப் பலருக்கும் விழிப்புணர்வுடன் கூடிய கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.
இந்தக் கலந்துரையாடல்கள் மூலமாகப் பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் தீர்வுகளை வழங்குவதற்கு பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று மாதங்களில் வவுனியா மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமங்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.
(க-402)

# இலவச மருத்துவ முகாம் இன்று நெடுங்குளத்தில்

யாழ்ப்பாணம், ஓக.30
நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் நெடுங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-288)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
25.06.1998
பரமன் அடியில்
30.08.2007



செல்வன்
கண்ணதாசன் ரஜந்தன் (அன்பு)
( 2007ஆம் ஆண்டு தரம் 4 மாணவன்,
யா/ இணுவில் இந்துக் கல்லூரி)

எங்கள் பாசத்தின் அன்புவே நெஞ்சோடு கலந்த இனிய உறவே
உம் அன்பு நினைவலைகள் எம் உள்ளங்களில் நிழலாடுதே
ஆறு ஆண்டு என்ன ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
ஆறாது உம் நினைவு
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

இணுவில் கிழக்கு, இணுவில். (39288)(3.5.6) குடும்பத்தினர்.

## நாடக விழா

யாழ்ப்பாணம், ஓக.30
இளையோர் நாடக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந)

## வீடு வாடகைக்கு

யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 364 0941 (39296) (7.6.3)

## மரண அறிவித்தல்

### செல்லையா குருமூர்த்தி

(முன்னாள் பொறியலாளர், இ.போ.ச.-கோண்டாவில்)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குருமூர்த்தி 28.08.2013 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், தவயோக நாயகியின் (இளைப்பாறிய ஆசிரியை-யா/நடேஸ்வரா கல்லூரி) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற இராஜலட்சுமி மற்றும் திருஞானசம்பந்த மூர்த்தி (UK), காலஞ்சென்ற சிவபாலசுந்தரமூர்த்தி மற்றும் கனகாம்பிகை (கனடா), நகுலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஞானேஸ்வரியின் அருமை மைத்துனரும், காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் (கல்வி அதிகாரி) சகலனும், காலஞ்சென்ற பூலோகசிங்கம் மற்றும் செல்வபாக்கியம் (UK), சரஸ் வதி, பாலசுந்தரம் (கனடா), காலஞ்சென்ற சிவராசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.08.2013) சனிக்கிழமை காலை 8.30 இற்கு ஜெயரட்ண மலர்ச் சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு தொடர்ந்து இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப ஒரு மணியளவில் பொரளை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


9 2/4, விஷ்ணுகோட் தொடர் மாடி,
சிறபறி கார்டின், கொழும்பு-04.

தகவல்: குடும்பத்தினர்.
T.P:011 255 3357
(c/11801)(3.6.11)

## மரண அறிவித்தல்

### தம்பு செல்வராசா

[உரிமையாளர் - கௌரி றெக்ஸ்ரைல், சாவகச்சேரி சந்தை உட்புறம்
தர்மகர்த்தா சபை உறுப்பினர் - திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில்]



மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செல்வராசா நேற்று (29.08.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ் சென்றவர்களான தம்பிஐயா- தங்கம்மா தம்பதியரின் மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, இராசையா, தம்பிராசா, கனகசபை, துரைச்சாமி மற்றும் தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஏரம்ப மூர்த்தி மற்றும் விநாயகமூர்த்தி, இந்திரகுமார் ஆகியோரின் மைத்துனரும், உமாமகேஸ்வரன், சௌதாமினி, காந்தன், அறிவழகன், சுந்தரரூபி, நிமலன், கேதினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் நளினி, சிதம்பரநாயகம், சிவராஜி, யோகானந்தி, மதியழகன், அஜந்தா ஆகியோரின் மாமனாரும், யசிகரன், கஸ்தூரி, தகிரா, சங்கவி, சாரங்கி, ஏரகன், கோசினி, பவனி, பிறிஷா, ஜித்தூஸ், சஜீனா, கிஷாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்பிராய் வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை.
077 271 8249, 021 321 7943 (இலங்கை)
0044 208 793 2707 (லண்டன்)

தகவல்:
குடும்பத்தினர்.
(39299)(7.6.3)

# கட்டணத்தைக் கூட்டுங்கள் இல்லாவிட்டால் போராட்டம்

## பஸ் உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை



கொழும்பு, ஓக.30

நாம் கோரும் நூற்றுக்குப் பத்துவீதமான பஸ் கட்டண அதிகரிப்பை வழங்க அரசு முன்வராது போனால் எதிர் வரும் செப்ரெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் அனைத்து பஸ் உரிமையாளர்கள் சங் கங்களையும் ஒருங்கிணைத்து பஸ் வேலை நிறுத்தம் ஆரம் பிக்கப்படும் என்று லங்கா தனியார் பஸ் உரிமையா ளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது:-

பஸ் கட்டண அதிகரிப்புச் சம்பந் தமான தேசியக் கொள்கை கடந்த ஜூலை மாதத்தில் முடிவுக்கு வந்துள்ளது.

அதற்கமைய நாம் புதிய கட் டணங்களைப் பிரகடனப்படுத் தும் முயற்சியை மேற் கொண் டோம்.

பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பாக தீர்மானங்களை எடுப்பதற்கு தேசிய போக்கு வரத்து ஆணைக் குழுவுக்கு அதிகாரம் இல்லை; சட்டங் களில் அவ்விதம் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை; அதன் காரணமாகவே பஸ் கட்ட ணங்களை அதிகரிக்க இடம ளிக்க முடியாதென எழுத்து மூல மாக எதையும் அவர் களால் வழங்க இயலாதுள்ளது.

பஸ் கட்டணங்களை அதிகரிப் பதற்கு சட்ட ரீதியாக எமக்கு அமைந்திருந்த உரிமை கடந்த வாரத்தில் இழக்கப்பட் டுள்ளது.

அதாவது பஸ் கட்டணங்களை அதிக ரிப்பது சம்பந்தமாக அமைச்சரவை உப குழு வொன்றை நியமிப்பது தொடர் பாக போக்குவரத்து அமைச் சரினால் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப் பட்டதே அந்த இழப்புக்குக் காரணமாகியுள்ளது.

எனினும் நாம் எமது எதிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை.

பஸ் சங்கங்களிடையே ஒற் றுமை குறைந்திருப்பதே எமது முன்னைய முயற்சி தோல்வியில் முடிந்தமைக்குக் காரணம்.

எனவே மாற்றுக் கருத்துக் களை விட்டு பஸ் சங்கங்கள் அனைத்தும் ஒற்றுமையாக ஓரணியில் நின்று போராடு வதன் மூலமே எமது கோரிக் கைகளை வென்றெடுக்க முடி யும்.

அரசு தேர்தல் முடியும் வரை யில் பஸ் கட்டண அதிகரிப் பைத் தடுத்து விடுவதற்கு பல் வேறு உத்திகளைக் கையாண்டு எம்மை அடக்கிவிட எத்தனிக் கிறது. எனவே எமக்குள் பிளவு களுக்கு இடமளிக்காது, ஓரணி யில் நின்று போராட முன் வருமாறு அனைத்து பஸ் உரிமையாளர்கள் சங்கங் களையும் வேண்டுகிறேன் என்றார். (ச-22)

## அரச ஒப்பந்தகாரர்களுக்கு 2 மாதங்களில் கொடுப்பனவு

### திறைசேரிச் சுற்றறிக்கை விரைவில்

கொழும்பு, ஓக.30

அரசின் அபிவிருத்திச் செயற் பாடுகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள பணக் கொடுப்பனவுகளை இரண்டு மாதகாலத்துள் செலுத்தி முடிக்கக் கூடிய வகை யில் புதியசட்ட விதிகளை உள் ளடக்கிய திறைசேரிச் சுற்ற றிக்கை வெளியிடப்படும்.

இவ்வாறு நிதி மற்றும் பொரு ளாதார அபிவிருத்தி அமைச் சின் செயலர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்தார்.

கடந்த காலத்தில் தமக்கு அரசி டமிருந்து கிடைக்க வேண்டிய பணச் செலுத்தல்கள் நீண்ட காலமாகவே தாமதப்படுத்தப் பட்டு வந்துள்ளது என்று அவர் களிடமிருந்து தொடர்ச்சியாக கிடைக்கப் பெற்ற முறைப் பாடுகள் குறித்து மேற்கொள் ளப்பட்ட பரிசீலனை யொன் றின் பின்னரே இந்தத் தீர்மா னம் மேற்கொள்ளப்பட்டுள் ளது என்று அவர் கூறினார்.

புதிய சுற்றறிக்கைக்கு அமைய செலுத்தப்பட வேண்டியுள்ள சிட்டைகள் கிடைக்கும் ஒழுங்கு முறைக்கு அமைய, முதலில் சிறு தொகைகளுக்கான சிட்டைகளைச் செலுத்தி முடிப் பதற்கும் ஏனைய சிட்டை களை இரண்டு மாத கால வரையறைக்குள் செலுத்துவ தற்கும் சம்பந்தப்படும் நிறுவ னங்களின் நிதிப் பணிப்பா ளர்களுக்கு அதிகாரம் வழங் கப்படுகிறது. இவ்வாறு செயற் படாது பணச் செலுத்தல்க ளைத் தாமதப்படுத்துவோர் சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடைமுறை கட்டமைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ச-22)

## பொன்டெரா நிறுவனம் மீண்டும் சேவையில்

கொழும்பு,ஓக.30

பொன்டெரா நிறுவனம் தமது செயற்பாடுகளை இலங்கையில் மீண்டும் உடனடியாக ஆரம்பிக்கவுள்ளது என்று பொன்டெரா பிரான்ட் லங்கா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் லியோன் செல்மன்ட் குறிப்பிட்டார்.

தமது ஊழியர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பொன்டெரா நிறுவனத்தின் நிர்வாகம் செயற்பாடுகளை இடைநிறுத்தியிருந்தது என்று அவர் கூறினார்.

தமது நிறுவனத்தின் மீது விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை யுத்தரவு வெள்ளிக்கிழமை நீக்கப்பட்டமையால், பொன்டேரா நிறுவனம் தமது தயாரிப்புக்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோக நடவடிக்கைகளை இலங்கையில் மேற்கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மரண அறிவித்தல்

## சண்முகம் தணிகாசலம் (சமாதான நீதிவான்)



திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தணிகாசலம் நேற்று (29.08.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-தங்கச்சியம்மா தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான S.K. ஆறுமுகம்-மகேஸ் வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்த நாயகியின் அன்புக் கணவ ரும், பாலகுமரன் (U.K), ஞானகுமரன் (U.K), ஞானசக்தி (விரிவுரை யாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி, கோப்பாய்), செல்வக் குமரன் (U.K), ஆனந்தசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி (U.K), மேகலா (U.K) கணேசநாதன் (உடற்கல்விப் பணிப்பாளர், யாழ் பல்கலைக்கழகம்), யமுனாநிதி (U.K), ஜெனார்த்தனன் (கணிய அளவை யாளர்) ஆகியோரின் மாமனும், முத்துலிங்கத்தின் அன்புச் சகோதரனும், சிவகாமி, தணிகைகுமரன், வைஷ்ணவி, சாம்பவி, விஷாலினி, நிவா ஷினி, வர்ஷினி, அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும், இந்திராவதி, காலஞ்சென்றவர்களான துரைரத்தினம், பொன்னையா மற்றும் திருமதி சின்னத்தம்பி-தங்கம்மா, திருமதி சுப்பிரமணியம்-சரஸ்வதி, பஞ்ச ரட்ணம், திருமதி வினாயகமூர்த்தி-பரமேஸ்வரி, திருமதி திருநீல கண்டன்-மகேஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மைத்து னரும், அனுசியா-தில்லைநடராசா, அனுராதா-பவளகாந்தன், சுவர்ணியா ஆகியோரின் அன்பு மாமனும், பவளகாந்தன், திருமதி பவளராணி நல்ல நாதன், பவளநாதன், பவளகுமார் ஆகியோரின் ஆசை அப்பாவும், மயூரன் துளசி, வித்தியா, சுரேஸ்குமார் திருமதி சுபோதினி-சிறிகரன், திருமதி சுகந்தினி-பார்த்தீபன், விஜயகுமார், வினோஜினி, செல்வக்குமார், விக்ன கரன், திருமதி விஜிந்தினி-பிரபாகரன், விஜயரதனி, நிரூஜினி, நிஷாந் தினி, நிர்மலரூபன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (01.09.2013) ஞாயிற் றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

528, பலாலி வீதி,
திருநெல்வேலி.

தகவல்: மனைவி,
பிள்ளைகள்.
தொடர்புக்கு: 021 222 2106,
021 222 3822, 077 762 4475.

(39278) (10,14)

## 3 மாதங்களுக்குள்

# 120 ஆர்ப்பாட்டங்கள் மோதல்கள்



கொழும்பு.ஓக.30
கடந்த மூன்று மாதகாலத்துக்குள் பல தரப்பட்ட காரணங்களைக் காட்டி இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் 120 வரையான வன்முறைகளுடனான குழப்பங்கள். ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்புக்கள் இடம்பெற்றுள்ளன என்று புலனாய்வு பிரிவு சுட்டிக்காட்டுகின்றது.

மிகக் குறுகிய காலவரையறை ஒன்றுக்குள் இவ்வாறு போராட்டங்களும் எதிர்ப்புக்களும் உருவாகியிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்க ஒன்றாகும் என்று பாதுகாப்புப் பிரிவுகளின் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்புக்கள். வன்முறைகள் கலந்து மோசமான நிலைப்பாடுகளுக்கு உள்ளானதால் மூன்று உயிர்கள் பறிக்கப்பட்டு. 12 இடங்களில் பல மில்லியன்கள் வரையிலான சொத்து இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

மக்களின் பிரச்சினைகள் முறைப்படியாக தீர்த்து வைக்கப்படாமை போன்றே. சிறு சம்பவங்கள் அரசியல் காரணிகள் மீது தீவிரம் பெறுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதால் பாரதூரமான விளைவுகள் நடந்தேறியுள்ளன என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

**ரத்துபஸ்வெல பிரதே சத்தில் நடைபெற்ற குடிதண்ணீர் போராட்டத்தில் மூன்று உயிர்கள் பறிக்கப்பட்டன.**

அண்மையில் ரத்துபஸ்வெல பிரதேசத்தில் நடைபெற்ற குடிதண்ணீர் போராட்டத்தில் மூன்று உயிர்கள் பறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# தொழிற்சாலைகளை கண்காணிக்க நிறுவனம்

## நிறுவுவதற்கு அமைச்சரவைப் பத்திரம்




கொழும்பு.ஓக.30
தொழிற்சாலைகள் இயங்குவதனால் பொது மக்களுக்கு ஒவ்வாத தாக்கம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அது குறித்து ஆலோசனைகளை வழங்க மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் அரச நிறுவனமொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை அடுத்த வாரத்தில் முன்வைக்க தொழிற்துறைகள் மற்றும் வர்த்தக செயற்பாடுகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

ரத்துபஸ்வெல குடிதண்ணீர்ப் பிரச்சினை சம்பந்தமாக அண்மையில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந் தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய அதிகார சபையின் பணிப்பாளர் ரொஹான் பெரேரா தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மூன்று வ்கைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் தொழிற்துறைகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் அமைச்சின் கீழும். தொழில்துறைகள் அபிவிருத்திச் சபையின் கீழும். முதலீட்டுச் சபையின் கீழும் அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச-22)

# ஒலுவில் காணி விவகாரம்; இழப்பீடு வழங்க இணக்கம்



அம்பாறை.ஓக.30
ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீட்டின் ஒரு பகுதியை முதற்கட்டமாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்வரும் செப்ரெம்பர் முத லாம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படவுள்ள நிலையில், இழப்பீடு வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுக நிர்மாணப் பணிக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களில் ஒரு பகுதியினருக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் இது வரை வழங்கப்படாத நிலையில் இருந்து வந்தன.

இந்தநிலையில். திங்கட்கிழமை காணிச் சொந்தக்காரர்களுடனான பேச்சு ஒலுவில் துறைமுக சுற்றுலா விடுதியில் இடம் பெற்றது.

இந்தப் பேச்சில் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன், அதற்கேற்ப இழப்பீட்டுத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

இந்தப் பேச்சில் உள்ளூராட்சி. மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா, துறைமுகங்கள். நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் றோஹித அபேகுணவர்த்தன. மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை உட்பட பலர் கலந்து கொண்டனர்.(ச)

## இலங்கைக்கு சார்பாக செயற்படவே முடியாது

கொழும்பு.ஓக.30
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உருவாகும் எந்தவொரு பிரச்சினையிலும் தம்மால் இலங்கைக்கு சார்பாகச் செயற்பட முடியாது என்று சீனா மற்றும் ரஷ்யா அறிவித்துள்ளன.

இதுகுறித்து இலங்கையின் வெளியுறவு அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் கச்சதீவு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின்போது இலங்கை அரசு செயற்பட்டுள்ள விதம் திருப்தி கொள்ள இயலாதது என்று அந்த நாடுகள் தெரிவித்துள்ளன. (ச-22)

## வெலிவேரிய சம்பவத்துடன் 58 படையினருக்கு தொடர்பு

கொழும்பு.ஓக.30
வெலிவேரிய, ரத்துபஸ்வல பிர தேசத்தில் இடம்பெற்ற சம்பவத்துடன் 58 இராணுவத்தினர் சம்பந்தப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரி வித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்திடம் ஆதாரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அண்மையில் அறிக்கையுடன் அந்த ஆதாரங்கள் இராணுவத் தளபதியிடம் வழங்கப்பட்டதாக இராணுவம் கூறியுள்ளது.

இராணுவ நீதிமன்றம் 72 சாட்சியங்களை பதிவுசெய்துள்ளது. இராணுவ நீதிமன்றத்தின் அறிக் கையை தற்போது இராணுவத்தின் சட்டப் பிரிவின் பணிப்பாளர் பரிசீலித்து வருவதாகவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச)



குருணாகல் நகரில் வாழும் மதுரை நாயக்கா வம்சத்தவர்களுக்கு உரிமையான மாரியம்மன் ஆலயம் அந்த வம்சத்தவரகளால் புனா நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது. (ச-200)

## விபசாரத்தில் ஈடுபட்ட 20 பெண்கள் கைது

கொழும்பு.ஓக.30
கொழும்பு புறநகர் பகுதி யான சீதுவையில் விபசாரத்தில் ஈடுபட்டதான சந்தேகத்தின் பேரில் 20 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சீதுவ பிரதேசத்தில் அமைந்துள்ள இரவு நேர விடுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 37 வயதுக்கிடைப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இரவு நேர விடுதியின் முகாமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்ற உத்தரவின்படி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## குளவி கொட்டுக்கு இலக்கான 8 பேர் வைத்தியசாலையில்



கொழும்பு, ஓக.30
இரு வேறு தோட்டங்களில் தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் உள்ளிட்ட எட்டுப் பேர் குளவிகளின் கொட்டலுக்கு இலக்காகி இரு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பசறை மாப்பாகல பெருந்தோட்டம் மற்றும் அப்புத்தளை கல்கந்த பெருந்தோட்டம் ஆகிய தோட்டங்களிலேயே மேற்படி குளவி கொட்டுதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மாப்பாகல பெருந்தோட்டத்திலிருந்து தொழில் கடமைக்குச் சென்று கொண்டிருந்த இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பிரதி பொதுச் செயலாளர் இரா. சலோபராஜாவும் அவரது மகனும் குளவிகளின் கொட்டல்களுக்குள்ளாகியுள்ளனர். அயலவர்கள் ஒன்று கூடி இவ்விருவரையும் பசறையூரி பெருந்தோட்ட வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதே வேளை அப்புத்தளை கல்கந்த பெருந்தோட்டத்தில் தேயிலைத் தளிர்களைக் கொய்யும் வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை குளவிகள் சரமாரியாக கொட்டியுள்ளன.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டோர் அப்புத்தளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பெற்று வருபவர்களில் இருவரின் நிலை ஆபத்தானதாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

# பொதுநலவாய மாநாட்டு ஏற்பாடுகள் பேர்த் நகரையும் விஞ்சியவை

**உறுப்பு நாடுகள் பாராட்டு**



கொழும்பு.ஓக.30
பொதுநலவாய உச்சி மாநாட்டை முன்னிட்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் கடந்த முறை ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் முன்னெடுக்கப்பட்டவற்றிலும் பார்க்க வெகு சிறப்பாக உள்ளன என்று அதன் உறுப்புரிமை நாடுகள் பாராட்டு தெரிவித்துள்ளன என்று ஜனாதிபதியின் சர்வதேச ஊடகப் பேச்சாளர் அனுராதா ஹேரத் தெரிவித்தார்.

பொதுநலவாய அமைப்பில் உறுப்புரிமை வகிக்கும் 14 நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய முன்னோடிக்குழு இலங்கை வந்திருந்தது.

இந்தக் குழுவில் அங்கம் வகித்த சுமார் 80 சர்வதேச பிரதிநிதிகள் பொதுநலவாய உச்சி மாநாட்டை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள் குறித்த பூரண விளக்கத்தை பெற்றுக் கொண்டதுடன் மாநாடு நடைபெறவுள்ள முக்கிய இடங்களான கொழும்பு. ஹிக்கடுவை. ஹம்பாந்தோட்டை மற்றும் இரண்டு சர்வதேச விமான நிலையங்களையும் நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் தமது திருப்தியையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

மாநாடு தொடர்பிலான ஏற் பாடுகளை பார்வையிடும் வகையில் இலங்கை வந்த இரண்டாவது முன்னோடிக் குழு இதுவாகும். 16 நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 சர்வதேச பிரதிநிதிகள் அடங்கிய முதலாவது முன்னோடிக் குழு கடந்தவாரம் இலங்கை வந்து ஏற்பாடுகளை நேரில் கண்டறிந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழர் ஒன்றுபட்டவர்கள் என்பதை உலகுக்கு உணர்த்த வாக்களிப்போம்

## செல்வம் எம்.பி. அழைப்பு



கொழும்புத்துறை, ஓக.30
தமிழன் தமிழனாகத்தான் எப்போதும் ஒன்றுபட்டு நிற்கிறான் என்பதை உலகுக்கு உணர்த்த வடமாகாண சபைத் தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டும். இந்த ஒற்றுமையைக்காட்ட உங்கள்வாக்குகளை வீட்டுச்சின்னத்திற்கு இடுங்கள்.
இவ்வாறு தெரிவித்தார் தமிழ் தேசியக்கூட்டமைப் பிள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன்.
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பரப்புரைக் கூட்டம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,
முள்ளிவாய்க்காலில் மக்கள் பட்ட அவலமும் போராளிகளின் இலட்சியமுமே ஐ.நா வின் கதவைத் தட்டியது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் களுக்கு பொறுப்பு கூறும் வகையில் இனியாவது சர்வதேச நீதிமன்றில் அரசை நிறுத்தி விசாரிக்க வேண்டும். இதற்காக நாம் ஒருமித்து குரல் கொடுக்கவேண்டும்.
இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெற்று ஆட்சியில் அமர வேண்டும். அரசு திட்டமிட்டு தமிழ்மக்களது வாக்குக்களைச் சிதறடிக்க பல சுயேச்சைகளையும் குறிக்கோளற்ற அரசியல்வாதிகளையும் தேர்தலில் நிறுத்தியுள்ளது.
எமது பள்ளிவாசல்களை இடித்தவனுக்கு பர்தாவைக் கழற்றியவனுக்குத் தொப்பியை பறித்தவனுக்கு நாங்கள் வாக்களிக்க மாட்டோம்.
வீட்டுச் சின்னம் போட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கப் போகிறோமென்று மன்னார் முஸ்லிம் மக்கள் முடிவெடுத்துள்ளார்கள்.
எமது பகுதிகளில் இடம்பெறும் நில, கடல், மத ஆக்கிரமிப்புக் களுக்கு மாகாண சபை ஒரு அரணாக அமையும்.
எமது மக்களுக்கு உரிமை கேட்டதால் எத்தனையோபேர் இன்று கொல்லப்பட்டுள்ளனர். பலர் சிறைகளில் வாடுகின்றனர். இவர்களது விடுதலையையும், தமிழர்களது எதிர்கால அரசியலையும் கருத்தில் கொண்டு உங்கள் வாக்குப் பலத்தால் வெற்றியை நிரூபியுங்கள்- என்றார். (ஐ-135)

# ஆளும் அரசுடன் இணைந்து உரிமைகளைப் பெறுவோம்

## வவுனியா சுயேச்சை வேட்பாளர்

யாழ்ப்பாணம், ஓக.30
ஆளும் வர்க்கத்தை எதிர்த்து போராடி எதனையும் பெற முடியாது.
அவர்களுடன் இணைந்து நின்று வாதாடி எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற துணிவு எமக்கு உண்டு.
இதனால்தான் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் சுயேச்சைக் குழு 06 போட்டியிடுகிறோம் என அதன் முதன்மைவேட்பாளர் சிவலிங்கம் எழில்வேந்தன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமிழ் மக்களுக்கான எமது பணி மேலும் விரிவடைவதற்கு இந்தத் தேர்தலில் ஒரு களமாக உள்ளது.
தேர்தலில் நாம் ஓர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் அரச அங்கீகாரத்துடனும்

**தமிழ் மக்களுக்கான எமது பணி மேலும் விரிவடைவதற்கு இந்தத் தேர்தலில் ஒரு களமாக உள்ளது.**

அரச நிதியுடனும் எமது பரந்துபட்ட சேவையை மக்களுக்கு வழங்க முடியுமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு.
அதிகாரமுள்ள ஆட்சியாளர்களுடன் சேர்ந்து நின்று மலையக மக்களின் விமோசனத்திற்காக உழைக்கின்ற தொண்டமானின் செயற்பாடு மிகச்சாணக்கியமானது.
அதுபோல நொந்து போன எமது தமிழ் உறவுகளுக்காக ஆளும் தரப்பினருடன் இணைந்து எம் மக்களுக்கு இயன்றதை செய்ய நாம்எண்ணியுள்ளோம். -என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# அடக்குமுறைக்கு எதிராகக் குரல்கொடுப்பேன்

## கிளிநொச்சியில் வினுபானந்தகுமாரி



அக்கராயன், ஓக 30
எமது இனத்தின் அரசியல் உரிமைக்காகவும் பெண்கள் மீதான அனைத்து அடக்குமுறைகளுக்கு எதிராகவும் குரல் கொடுப்பேன். இதுவே எனது எதிர்கால மக்கள் சேவையாக அமையும்.
இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிடும் கே. வினுபானந்தகுமாரி .
கிளிநொச்சியில் தேர்தல் பரப்புரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
மாகாண சபை முறைமையை நாம் எமது இனத்தின் தீர்வாக ஒரு போதும் ஏற்றுக் கொண்டதே கிடையாது. இலட்சக் கணக்கில் எமது மக்கள் உயிர் நீத்தமை மாகாண சபையை வெற்றி கொள்வதற்காக அல்ல.
மாகாண சபையை நாம் புறக்கணிப்போமானால் எமக்குக் கிடைக்கும் ஜனநாயக ரீதியான சொற்ப வாய்ப்புக்களையும் இழக்கநேரிடும்.
அதுமட்டுமல்லாது எமது இனத்தினுடைய அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக, எதிர்ப்பு அரசியல் செய்பவர்களின் கைகளில் மாகாண சபை நிர்வாகத்தைக் கொடுத்து எமது வாழ்வையும்வரலாற்றையும் அழிப்பதற்கு நாமே வழியமைத்து கொடுத்து விடக்கூடாது.
குறைந்தபட்சம் மாகாண மட்டத்திலாவது எமது உரிமைகளைத் தக்கவைத்து அடுத்த கட்டம் நோக்கி எமது இலக்குகளை நகர்த்துவதற்கு உரிமைகளுடன் கூடிய அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு மாகாண சபையை தக்கவைப்பது அவசியமானது. இதனால்தான் தேர்தலில் நாம் போட்டியிடுகிறோம்.
எமது இனத்தினுடைய அரசியல் உரிமைகளுக்காகவும் பெண்கள் மீதான வன்முறைகளுக்கெதிராகவும் நான் குரல் கொடுப்பபேன்.
போரால் வாழ்விழந்து நிற்கும் பெண்கள், முன்னாள் பெண் போராளிகள் அனைவருக்காகவும் குரல் நான் குரல்கொடுப்பேன். அதுமட்டுமல்லாது பெண்களின் வேலை வாய்ப்புகள் குறித்து கவனம்செலுத்துவதோடு காணாமல் போன உறவுகளைமீட்கப்போராடும்குடும்பங்களின் ஜனநாயகம் போரிலும் பெரும் பங்கு வகிப்பேன்
எனவேதமிழ்மக்கள் உண்மை நிலை உணர்ந்து இந்த தேர்தலில் வாக்களிக்கவேண்டும் - என்றார். (ஐ-18)

**எமது இனத்தினுடைய அரசியல் உரிமைகளுக்காகவும் பெண்கள் மீதான வன்முறைகளுக்கெதிராகவும் நான் குரல் கொடுப்பபேன்.**







# அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே சுயேச்சையாகத் தேர்தலில் குதித்துள்ளேன்

## கறுப்பையா ஜெயக்குமார்

அக்கராயன், ஓக.30
ஜனநாயக வழியில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறோம் என கிளிநொச்சி மாவட்டத்தில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் கறுப் பையா ஜெயக்குமார் தெரிவித்தார். அரசியல் கட்சிகளு டன் இணையாமல் ஏன் சுயேச்சையாக தேர்தலில் போட்டியிடுகிறீர்கள் எனக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
உரிமை மறுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீண் டும் அரிசிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக ஜனநாயக வழியில் அரசுக்கு ஓர் அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும்.
எங்கள் மக்கள் எமது மண்ணில் சுபீட்ச மாகவும் நிம்மதியாகவும் எங்களை நாமே ஆளக்கூடிய நிலையை மக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள். மக்களின் உரிமைகள் மக்களுக்கே வழங்கப்படவேண்டும்:
தென்னிலங்கை மக்களுக்கு எந்த வசதிகள் கிடைக்கிறதோ அதே வசதிகள் தமிழ் மக்களுக்கும் கிடைக்கவேண்டும். இந்த உண்மைகளை வலியுறுத்தியே நான் தேர்தலில் குதித்துள்ளேன்-என்றார். (ஐ-18)
















ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுகமும் தேர்தல் பரப்புரையும் வட்டக்கச்சி மாயவனூரில் அண்மையில் இடம் பெற்றது. (ஐ-18)

## மாகாண சபைத் தேர்தலில்
# வாக்காளர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டாயம்

வவுனியா, ஓக. 30

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பின் போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டாயமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் அடையாள அட்டைகளில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆள் பதிவு திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் மதகுருமார்களுக்காக வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை போன்றவற்றில் ஏதேனுமொன்றைக் காண்பிக்கமுடியும்.

**தேர்தல்கள் செயலகம் அறிவிப்பு**

**உடல் ரீதியான குறைபாடு காரணமாக வாக்களிப்பு நிலையத் துக்கு செல்லமுடியாது எனக் கருதுபவர்களுக்கும் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.**

இத்தகைய எந்தவொரு ஆவணங்களும் இல்லாதவர்கள் தேர்தல் திணைக்களத்தால் வழங் கப்படும் தற்காலிக அடை யாள அட்டையை கட்டாயம் பெறவேண்டும். தற்காலிக அடையாள அட்டைகள் தேவைப்படுபவர்கள் செவ்வாய்கிழமைக்கு முன்னர் புதிதாக எடுக்கப்பட்ட முத்திரை அளவுடைய வர்ண அல்லது கறுப்பு வெள்ளை புகைப்படப் பிரதிகளுடன் கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

இதேவேளை மாகாண சபைத் தேர்தலில், உடல் ரீதியான குறைபாடு காரணமாக வாக்களிப்பு நிலையத்துக்கு செல்லமுடியாது எனக் கருதுபவர்களுக்கும் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

போக்குவரத்துஉதவிதேவைப்படுபவர்கள் தேர்தல் திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் தத்தமது மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (ஐ-402)

# அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு ஆளும் கட்சிக்கு வாக்களியுங்கள்
## ஐ.ம.சு.கூ. முல்லை இணைப்பாளர் கோருகிறார்

முல்லைத்தீவு.ஓக.30

நாடு அபிவிருத்தியடைய வேண்டுமாயின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வடமாகாண மக்கள் வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு கேட்டுள்ளார் ஐ.ம.சு.கூட்டமைப்பின் முல்லத்தீவு ஒட்டுசுட்டான் தொகுதி இணைப்பாளர் ஜெயினுதீன் அமீர்.



வடமாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தேர்தல் தொகுதி மக்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைதீவு மாவட்டத்தில் அபிவிருத்தயைத் துரிதப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே முழுமூச்சுடன் செயற்பட்டுவருகிறார்.

இந்த அபிவிருத்திகள் மாவட்டத்தில் தொடர்ந்து இடம் பெறுவதற்கு மக்கள் ஆதரவு தரவேண்டும். அபிவிருத்தி ஊடாகவே நாம் முன்னேற்றமடையலாம்.

எனவே, எதிர்வரும் வட மாகாண சபை தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என ஜெயினுதீன் அமீர் தனது அறிக்கையில் கோரியுள்ளார். (ஐ)









## யாழ். மாநகர சபையை தவறாக வழி நடத்தாதீர் - முதல்வருக்கு பிரதிமுதல்வர் புத்திமதி

யாழ்ப்பாணம், ஓக.30
யாழ்.மாநகர சபையைத் தவறாக வழிநடத்த வேண்டாம் எனப் பிரதி முதல்வர் எம்.ரமீஸ், திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவைப் பார்த்து புத்திமதி கூறினார்.
மாநகர சபையின் ஜூலை மாதக் கூட்டம்நேற்று வியாழக்கிழமை யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் தலைமையில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் ஆளும் தரப்பு உறுப்பினர் விஜயகாந்த் சுகாதாரக் குழு அறிக்கை தனக்குத் தரப்படவில்லை எனவும், தான் தற்போது சுகா தாரத்துக்குத் தலைவரா? இல்லையா? என்று தெரியவில்லை எனவும் குறிப்பிட்டார்.
இதனையடுத்து சுகாதாரக் குழுத் தலைவர் தொடர்பான விவாதம் இடம்பெற்ற போதே பிரதிமுதல்வர் ரமீஸ், மாநகர சபையைத் தவறாக வழி நடத்த வேண்டாம் என முதல்வரைப் பார்த்துக் குறிப் பிட்டார்.
அதற்குப் பதிலளித்த முதல் வர், நான் சரியாகவே செயற்படுகின்றேன். நீங்கள் தவறாகப் பேசவேண்டாம். சபை எந்தச் சந்தர்ப்பத்திலும் தவறாக வழிநடத்தப் படவில்லை என்று குறிப்பிட்டார். (கு-7)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

## கொழும்பில் இன்று மெழுவர்த்திப் போர்

திப்பு முடிவடைந்த பின்னர் இரவு 7 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஒன்று கூடும் காணாமற்போனோ ரின் ஆயிரக்கணக்கான உறவுகள் அமைதியாக மெழுகு வர்த்தி ஏந்திப் போராட்டத்தை நடத்த வுள்ளனர்.
இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர், காணாமற்போனோரின் உறவுகள் கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்த முற்பட்ட வேளை, அதில் பங்கெடுப்பதற்காக வடக்கிலிருந்து புறப் பட்ட மக்கள் வவுனியாவில் பொலிஸாரால் தடுத்து நிறுத் தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு-5)

## இலங்கை அரசுக்கு எதிராக திட்டமிட்டு செயற்படுகிறது ஐ.நா.

பெலாரஸ் போன்ற நாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்தி வருகின்றன என ஜனாதிபதி மஹிந்த அங்கு குறிப்பிட்டதாக அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசார ணைகளுக்கு இலங்கை மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகள் ஐ.நா வுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-5)

## மறைந்த காவலரண்கள் முளைக்கின்றன மீண்டும்

டுள்ளன. வடபகுதிக்கு இருநாள் பயணமாக வருகை தந்த நவநீதம்பிள்ளை, ஏ-9 பிரதான வீதியூடாக யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு சென்று பின் அங்கிருந்து ஏ-35 வீதி யூடாக பரந்தனிலிருந்து முல்லைத்தீவுக்கு சென்றார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுமாத்தளன், முள்ளிவாய்க் கால், கேப்பாபிலவு ஆகிய பிர தேசங்களுக்கு அவர் வீதியூ டாகவே சென்றார்.
நவநீதம் பிள்ளையின் இந்தப் பயணத்துக்காக கடந்த திங் கட்கிழமை இரவோடு இரவாக இராணுவ முகாம்கள், மினி முகாம்கள் என்பன அகற்றப்பட்டன. அத்துடன் சில இராணுவக் காவலரண்கள் உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தன.
ஐ.நா. ஆணையாளர் பயணம் செய்த வேளையில் வீதிகளில் இராணு வத்தினர் கடமையிலிருக்கவில்லை. மாறாகப் பொலிஸாரே கடமையி லிருந்தனர்.
குறிப்பாக ஏ-35 வீதியில் உடையார்கட்டு காளிகோயிலடிப் பகுதியிலுள்ள காவலரண், வள்ளிபுனம் காவலரண், புது மாத்தளன், வலைஞர்மடம், முள்ளி வாய்க்கால் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள காவலரண்கள் என்பன அகற்றப் பட்டுப் பின்னர் இப்போது மீண்டும் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை நவநீதம்பிள்ளையைச் சந்தித்த புது மாத்தளன் மக்கள், இராணுவம் உங்கள் வருகைக்காக முகாம்களை அகற்றியுள்ளது. அந்த முகாம்களுக்கு தாம் மீண்டும் வருவோம் என்று எம்மிடம் கூறிச் சென்றனர் எனச் சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு-5-6)

## நவி-கூட்டமைப்பினர் இன்று முக்கிய பேச்சு

சினமன் லேக்சைட் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இதன்போது கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராஜா, ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் மற்றும் கூட்டமைப்பின் வடமாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
நவநீதம்பிள்ளையுடனான இன்றைய சந்திப்பின்போது வடக்கு, கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்புகளினால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை, காணாமற்போனோர், சிறைச்சாலை களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் தொடர்பான விவரங்கள் உட்பட பல விடயங்கள் அடங்கிய அறிக்கை யொன்றை அவரிடம் கையளிக்கவுள்ளோம் என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று தெரிவித்தார்.
இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் இன்று அவர் சந்திக்கவுள்ளார் எனத் தெரியவருகின்றது.
கடந்த 25ஆம் திகதி இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதி உட்பட வடக்கு, கிழக்கின் பல பிரதேசங்களுக்கு நேரில் சென்று பொது மக்கள், சிவில் அமைப் புக்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் சந்திப்புக்களை நடத்தி தரவுகளைத் திரட்டி யிருந்தார்.
நாளை சனிக்கிழமை கொழும்பில் ஊடகவிய லாளர் மாநாட்டை நடத்தி விட்டு ஜெனிவா புறப்படும் அவர், எதிர்வரும் செப் ரெம்பர் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பூகோள காலக் கிரம மீளாய்வுக் கூட்டத் தொடரில் தனது இலங்கை பயணத் தின் போது திரட்டப் பட்ட தரவுகள் தொடர்பில் அறிக் கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளார் எனவும் தெரியவருகின்றது. (கு-சி)

## இராமநாதன் மீது கொலை முயற்சி வழக்கு

நாதனைக் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த நிலையில் அவரை நேற்றுச் சாவகச்சேரி நீதி மன்றில் முற்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், அவர் மீதான விசாரணை தொடர்ந்து இடம்பெற்றமையால் அவர் நேற்று நீதிமன் றில் முன்னிலைப்படுத்தப்பட வில்லை. 'இன்று அவர் மன்றில் முற்படுத்தப்படுவார் என யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (கு-4-9-400)

## பயங்கரவாதச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யோம்

யோகம் செய்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் சட்டத்துக்கு அப்பால் சென்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். வைராக்கியம் மற்றும் பாகுபாட்டைக் காண்பிப்பவர்களுக்கு எதிராகவும் சட்டநடிவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் தெரிவித்துள்ள அமைச்சர், கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் விவகாரம் தொடர்பிலும் எடுத்துரைத்துள்ளார்.
பொலிஸ், நீதியமைச்சின் கீழ் கொண்டுவராமல் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பிலான அமைச்சின் கீழ் கொண்டுவந்துள்ளமை தொடர்பில் நவநீதம்பிள்ளை தனது எதிர்ப்பை இந்தச் சந்திப்பில் வெளியிட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (கு)

## மரண அறிவித்தல்

### கணேஷன் காளிதாசன் (ஞானம்)



மன்னார், திருக்கேதீஸ்வரம், நாகதாழ்வை சொந்த இடமாகவும் மன்னார், சின்னக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட கணேஷன் காளிதாசன் (ஞானம்) கடந்த 27.08.2013 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.
அன்னார் கணேஷன் மற்றும் காலஞ்சென்ற ஜெயவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை மற்றும் கனகம்மா (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும் தனலெட்சுமியின் அன்புக் கணவரும் கேஷாயினி, குபேரகா, யரன்னியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலைவாணன், காளீஸ்வரன் (லண்டன்), கருணாநிதி (கட்டார்), கலைவாணி, கலையரசி ஆகியோரின் சகோதரனும் தியாகராஜா (கனடா), பன்னீர்ச் செல்வன் (ஜேர்மனி), சுதாகரன் (கனடா), விக்கினேஸ்வரி, பவளராணி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணியளவில் மன்னார் நகர இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னக்கடை,
மன்னார். 023 222 2943

தகவல்:
நிஸாகரன் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### அண்ணாமலை கந்தையாபிள்ளை செல்வரட்ணம்



(செல்வர்ஸ் - நெடுங்கேணி, 'முருகன் ஸ்ரோர்ஸ்' கதுருவெல, பொலன்னறுவ)
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
K.S.பொன்னம்பலம்,
எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி.
(39304) (5.8)

## கொக்குவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி S.சிவயோகம்
அவர்களின் பாசமிகு மாமியார்
### யோகாம்பிகை சாம்பசிவமூர்த்தி



அவர்கள் கடந்த 24.08.2013 அன்று காலமாகிவிட்டார். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(39301) (5.6) ஆசிரியர் கழகம், கொக்குவில் இந்துக் கல்லூரி.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
### சின்னையா இளையதம்பி

தோற்றம் - 15.01.1936 மறைவு - 01.08.2013

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் கள்ளப்பாடு முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இளைதம்பி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (31.08.2013) சனிக்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெரும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கள்ளப்பாடு, முல்லைத்தீவு. குடும்பத்தினர்.

## 23 ஆவது அகவையில் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இனித்திருக்க வந்தது
30.08.1990

நினைத்திருக்கச் சென்றது
15.08.2008

அமரர்
### பத்மஜா கணேசலிங்கம்



ஆண்டின்று ஐந்து சென்றதுவே நீ பிரிந்து
ஆருயிரே உனை நினைத்து ஏங்குகின்றோம் இன்றும்
ஆண்டிருப்பாய் என எண்ண மாண்டுவிட்ட
பத்மஜாவே! கண்மணியே!
வேண்டுகின்றோம் இறையை நின் சாந்திக்காய் இன்று.

புத்தூர் கிழக்கு, புத்தூர். (கிருஷ்ணா பேக்கரி) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்


### திருமதி இராசம்மா சபாநாயகம்



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சபாநாயகம் நேற்று (29.08.2013) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை சபாநாயகத்தின் அன்பு மனைவியும் புஷ்பராணி, பிரேமராணி, குணரத்தினம், ராசரத்தினம், தவரத்தினம், பாலராணி, பிரேமராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசானந்தன், இமானுவேல், ஜெயராசா, கோமதி, நந்தினி, வசந்தா, ஜெகன்மோகன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'ராச சபா'
சூராவத்தை,
சுன்னாகம். (39311)

தகவல்:
புஷ்பராணி, கணேசானந்தன் (மகள்),
க.உதயகுமார் (பேரன்).
021 205 9422




யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் கலந்துகொள்ளவுள்ள யாழ்.மாவட்ட வீர.வீராங்களைகளுக்கான இருநாள் பயிற்சி முகாம் யாழ்.மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. பயிற்சிகளில் கலந்துகொண்ட வீர. வீராங்கனைகள் மற்றும், வீர.வீராங்கனைகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சியில் ஒருகாட்சி.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஒக.30

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:

பி.ப. 3.30 மணி
நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க. எதிர் விண்மீன் வி.க. 'பி' அணி.
பி.ப. 4.30 மணி
நவஜீவன்ஸ் வி.க எதிர் யங்லயன்ஸ்வி.க. 'ஏ' அணி. (ற-23)

----------

யாழ்ப்பாணம். ஒக.30

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பொமர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப.4மணி
உதயதாரகை வி.க. எதிர் யங்கம்பன்ஸ் 'ஏ' அணி.
பி.ப. 4.45 மணி
கொலின்ஸ் 'பி' அணி எதிர் குப்பிளான் விக்கினேஸ்வரா.
(ற-23-422)

# உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

**யங்கம்பன்ஸ் உதைபந்துத் தொடர்**

யாழ்ப்பாணம்.ஒக.30

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் மயிலங்காடு ஞானமுருகன் 'பி' அணி, கலைமதி 'ஏ' அணி ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

மயிலங்காடு ஞானமுருகன் 'ஏ' அணிக்கும், நியூட்டன் 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் 'ஏ' அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாக தவரூபன் தெரிவானார்.

மயிலங்காடு ஞானமுருகன் 'பி' அணிக்கும் கலைமதி 'ஏ' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கலைமதி 'ஏ' அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாக அபி தெரிவானார். (ற-23)

**நவசக்தி வி.க. உதைபந்துத் தொடர்**

யாழ்ப்பாணம். ஒக.30



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை பொமர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் சென்.சேவியர் 'ஏ' அணி, குடத்தனை சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணிக்கும் சென்.சேவியர் 'ஏ' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.சேவியர் 'ஏ' அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யங்லயன்ஸ் 'ஏ' அணிக்கும், குடத்தனை சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குடத்தனை சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் பெற்றி பெற்றது. (ற-23)

**ஊரெழு றோயல் உதைபந்துத் தொடர்**

யாழ்ப்பாணம்.ஒக.30

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனும்தியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம், தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணிக்கும் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி 10:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ற-23)

## பல்கலை தடகளப் போட்டிகள் நாளை

வலி.வடக்கு, ஒக.30

யாழ். பல்கலைக் கழகத்தின் முதலாம் ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் தடகள விளையாட்டுப் போட்டிகள் நாளை 31ஆம் திகதி சனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை யும் யாழ். பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியா எஸ்.ஸ்ரீ சற்குணராசாவும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மொழிகள் மற்றும் ஆங்கிலத்துறைத் தலைவர் திருமதி சிவராணி ஸ்ரீசற்குணராசாவும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மெய்வல்லுனரும், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியையுமான திருமதி ரமணன் மிதிலாவும் கலந்துகொள்ளவுள்ளனர். முதல் நாள் நிகழ்வுகள் பிற்பகல் 1.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரையும் இரண்டாம் நாள் நிகழ்வுகள் காலை.8.30 மணி முதல் மாலை வரை நடைபெறவுள்ளன. (ற-86-422)

# இங்கிலாந்து வீரர்கள் முட்டாள்கள்

## சீறுகின்றார் ஷேன் வோர்ன்

இங்கிலாந்து வீரர்கள் முட்டாள்கள் என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஷேன் வோர்ன்.


ஆஸ்திரேலியாவுக்கெதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3:0 என்று கைப்பற்றியது. தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆஷஸ் கிண்ணம் வென்ற உற்சாகத்தில் இங்கிலாந்து அணியினர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது உற்சாக மிகுதியில் பீற்றர்சன், ஸ்டுவர்ட் ப்ரோட், அண்டர்சன் ஆகியோர் ஓவல் மைதானத்தின் ஆடுகளத்தில் சிறுநீர் கழித்தனர். அப்போது ஆஸ்திரேலிய வீரர்கள் மற்றும் ஊடகத்தினர் மைதானத்தில் தான் இருந்தனர். அதனால், இவ்விடயம் வெளிப்பட்டு விட்டது. கிரிக்கெட் வீரர்களின் புனித இடமான ஆடுகளத்தை அசிங்கப்படுத்திய வீரர்களின் செயல் குறித்து விசாரணை நடக்கிறது.

இது குறித்து ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் கூறுகையில்,

"வீரர்களின் கொண்டாட்டம் என்பது உடைமாற்றும் அறையினுள் இருப்பது தான் சிறந்தது . மிகவும் பழமை வாய்ந்த ஓவல் ஆடு களத்தில் சிறுநீர் கழித்தது. இங்கிலாந்து வீரர்களில் மித மிஞ்சிய முட்டாள்தனமான. திமிர் பிடித்த செயல்" என்று தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து வீரர்கள் ஆடுகளத்தில் சிறுநீர் கழித்தமை



குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அத்துடன் இந்தச் சம்பவத்துக்குத் தங்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று ஓவல் மைதானத்துக்கு உரிமையாளரான சர்ரே கவுன்டி கிளப் தெரிவித்துள்ளது.

இது குறித்து சர்ரே தலைமை நிர்வாகி ரிச்சர்டு கோல்டு கூறுகையில், "வீரர்களின் செயல் மிகுந்த ஏமாற்றமாக உள்ளது. மிகுந்த பாரம்பரியமிக்க ஆடுகளத்தில் இப்படி நடந்தது அற்பத்தனமானது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# அணித்தலைமை கிளார்க்குக்கே


ஆஸ்திரேலிய அணியின் தலைவராக மைக்கல் கிளார்க் தொடர்ந்தும் நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரை 3:0 என்ற ரீதியில் இழந்த நிலையிலேயே ஆஸ்திரேலிய கிரிக்கெட்டின் அணியின் திறமை வெளிப்பாட்டு முகாமையாளர் அடம் பிரேசர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில். "மைக்கல் கிளார்க் உலகத் தரம் வாய்ந்த வீரர். அவரின் தலைவர் பதவிக்கு எந்தவொரு அச்சுறுத்தலும் இல்லை. தொடர்ந்தும் அவரே ஆஸி அணியின்தலைமைப்பொறுப்பை வகிப்பார். அதில் எந்த மாற்றமும் இல்லை" என்று தெரிவித்துள்ளர். (ற)



# சங்காவின் தெரிவு கந்துரட்ட அணியே




இந்தியாவில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் அணியான கந்துரட்ட அணியை குமார் சங்கக்கார தெரிவுசெய்துள்ளார்.
அவருடைய இந்தியன் பிரீமியர் லீக் அணியான சண்றைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு பதிலாகவே கந்துரட்ட அணியை அவர் தெரிவு செய்துள்ளார்.
இலங்கையின் '20/20' சம்பியன்களாக தெரிவான கந்துரட்ட அணி சார்பாக முக்கிய பங்கை வகித்திருந்த குமார் சங்கக்கார, இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி சார்பாக ஒப்பந்தம் செய்துள்ளார்.
இவ்விரு அணிகளும் சம்பியன்ஸ் லீக் '20/20' தொடருக்கு தகுதிபெற்றுள்ள நிலையில் இவற்றில் எந்த அணியில் குமார் சங்கக்கார பங்குபற்றுவார் என்ற குழப்பம் காணப்பட்டது.
இந்நிலையிலேயே அவர் கந்துரட்ட அணி சார்பாக விளையாடும் தனது முடிவை அறிவித்துள்ளார்.
இதன்படி இம்முறை கந்துரட்ட அணிக்காக விளையாடுவதற்கு குமார் சங்கக்கார முடிவு செய்ததால் அவர் தனது ஐ.பி.எல் ஊதியத்தில் 20 சதவீதமான 140,000 ஐக்கிய அமெரிக்க டொலரை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. (ற)

# சாதனை படைத்தனர் இங்கிலாந்து மகளிர்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் ஒருநாள் தொடரை வென்று இங்கிலாந்து மகளிர் அணி சாதனை படைத்துள்ளது.
இங்கிலாந்து சென்றுள்ள ஆஸ்திரேலிய மகளிர் அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட ஆஷஸ் தொடரில் பங்கேற்றது. அதில் முதல் இரு போட்டிகளின் முடிவில் இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம நிலையில் காணப்பட்டன.
இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் ஆட்டம் மழை காரணமாக தாமதமாக நடைபெற்றது. அதில் முதலில் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 36 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.
அதனையடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு நைட் (69), டெய்லர் (64) கைகொடுக்க 33.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 204 ஓட்டங்கள் எடுத்து 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
இந்த வெற்றியை அடுத்து 2:1 என்ற கணக்கில் இங்கிலாந்து பெண்கள் அணி ஆஷஸ் மகளிர் தொடரை வென்றுள்ளது. (ற)



# சர்ச்சையானது "கட்டிப்பிடி வைத்தியம்"



அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரில் செரீனா வில்லியம்ஸிடம் தோல்வியடைந்த பிரான்செஸ்கா பந்து எடுத்துக் கொடுக்கும் இளைஞரை கட்டிப் பிடித்தமை சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.
அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டிகள் தற்போது சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன. அதில் செரீனா வில்லியம்ஸுக்கும், பிரான்செஸ்காவுக்கும் இடையிலான ஆட்டத்தில் அனல் பறந்தது.
அந்த ஆட்டத்தில் அபாரமாக ஆடிய செரீனா, 6:0, 6:1 என்ற நேர் செற்களில் அதிரடியாக பிரான்செஸ்காவை வீழ்த்தினார்.
செரீனாவின் அதிரடி வேகத்தை சமாளிக்க முடியாமல் சுருண்டு போன பிரான்செஸ்கா, அங்கிருந்த பந்து எடுத்துக் கொடுக்கும் இளைஞரை அணுகி அவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டார். இது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.
அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பிரான்செஸ்கா
'அந்த நேரத்தில் அப்படிச் செய்ய வேண்டும் என்று தோன்றியது செய்தேன். அந்த இளைஞரிடம், செரீனா மிகவும் கடுமையாக ஆடினார், ரொம்பக் கஷ்டம் என்று சொன்னேன். அது ஒரு 'ஜோக்..' அதை பெரிதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை" என்று தெரிவித்துள்ளார். (ற)

# உதைபந்து அணியை வாங்குகிறார் டோனி

மோட்டார் சைக்கிள் பந்தய அணியை தொடர்ந்து உதைபந்தாட்ட அணி ஒன்றை வாங்குவதற்கு இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனி தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
பிரீமியர் கிரிக்கெட், பூப்பந்து லீக் போன்று '20/20' பாணியில் உதைபந்து லீக் ஆட்டம் இந்தியாவில் அடுத்த ஆண்டு ஜனவரி 18 முதல் மார்ச் 30 வரை நடக்கவுள்ளது. இதில் 8 அணிகள் பங்கேற்கின்றன.
அந்த அணிகளை வாங்க பலர் போட்டியிடுகின்றனர். கொல்கத்தா பிரீமியர் கிரிக்கெட் அணி உரிமையாளர் நடிகர் ஷாருக்கான், கொல்கத்தா உதைபந்து அணியை வாங்கத் திட்டமிட்டுள்ளார்.
அதேவேளை, டோனி அவரது நெருங்கிய நண்பர் மற்றும் பொலிவூட் நடிகர் ஜோன் ஆப்ரஹாமும் இணைந்து ஓர் அணியை வாங்குவர் எனத் தெரிகிறது.
மோட்டார் சைக்கிள் பிரியரான டோனி, ஏற்கனவே சொந்தமாக 'மகி ரேசிங் டீம்' என்ற, அணியை வாங்கியுள்ளார். இதேபோல உதைபந்தாட்டத்திலும் ஆர்வமுடையதால் இப்போது உதைபந்து அணியை வாங்குவார் என நம்பப்படுகிறது. (ற)





# சச்சினை வீழ்த்தியதை மறக்க முடியாது



சச்சினின் இலக்கைக் கைப்பற்றியமை என் வாழ்வில் மறக்க முடியாத தருணம் என்று தெரிவித்துள்ளார் இந்திய சுழற்பந்துவீச்சாளர் பியுஸ் சாவ்லா.
இந்திய அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளரான பியுஸ் சாவ்லா கடந்த 2005-06ஆம் ஆண்டு நடந்த சலஞ்சர் தொடரில் இந்திய 'பி' அணிக்காக விளையாடினார்.
இந்தத் தொடரின் இறுதிச்சுற்றில், சுழலில் அசத்திய இவர் சச்சின், யுவராஜ் சிங், அணித்தலைவர் டோனி ஆகியோரது இலக்குகளைக் கைப்பற்றி, தேசிய அணி தேர்வாளர்களை தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தார்.
அதனையடுத்து அவர் மார்ச் 2006 ஆம் நாக்பூரில் நடந்த இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் ஆட்டத்துக்கு முதன்முதலில் இந்திய அணியில் சேர்க்கப்பட்டார். அண்மைக்காலமாக இந்திய அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வருகிறார்.
இது குறித்து பியுஸ் சாவ்லா கூறுகையில்.
"2005-06ஆம் ஆண்டு நடந்த சலஞ்சர் தொடரில் இந்திய 'பி' அணிக்காக விளையாடிய போது எனக்கு 16 வயது. இத்தொடரில், சர்வதேச பந்துவீச்சாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் சச்சினுக்கெதிராக பந்துவீசும் வாய்ப்பு கிடைத்தது.
சர்வதேச அளவில் எதிரணி பந்துவீச்சாளர்களை திணறடித்த இவர், எனது பந்தை எங்கே விட்டுவைக்கப் போகிறார் என்று எண்ணினேன். இருப்பினும் அவரது இலக்கை கைப்பற்ற வேண்டும் என்று நினைத்தேன். அது போல சச்சினின் இலக்கை வீழ்த்தினேன். இந்த தருணம், என் வாழ்வில் மறக்க முடியாத ஒன்றாகிவிட்டது. இதுவரை மூன்று டெஸ்ட் போட்டியில் மட்டும் விளையாடி இருப்பது ஏமாற்றம் அளிக்கிறது. விரைவில் இந்தியாவுக்காக மீண்டும் விளையாடுவேன். இதற்காக கடின பயிற்சி மேற் கொண்டு வருகிறேன்" என்று தெரிவித்தார். (ற)

# சம்பியன் லீக்கில் ஹரிஸ் இல்லை



ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் றயன் ஹரிஸ் சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரில் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்டுள்ள பின்தொடைத் தசைநார் உபாதை காரணமாகவே அவர் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் இடம்பெற்ற ஆஷஷ் தொடரில் மிகச்சிறப்பாகப் பந்துவீசியிருந்த றயன் ஹரிஸ், 4 ஆட்டங்களில் 24 இலக்குகளைக் கைப்பற்றி இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சவாலை வழங்கியிருந்தார். .

5ஆவது ஆஷஷ் ஆட்டத்தின் இறுதி நாளன்று காலில் ஏற்பட்ட வலி காரணமாக மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தார். ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்த றயன் ஹரிஸ், அங்கு வைத்து மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட போதே அவரது உபாதை குறித்து உறுதிப்படுத்தப்பட்டதோடு, 4 தொடக்கம் 6 வாரங்கள் அவருக்கு ஓய்வு தேவைப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரில் அவர் பிறிஸ்பேர்ண் ஹீற் சார்பாகப் பங்குபற்ற முடியாது என்பதோடு, ஒக்ரோபரில் இந்தியாவிற்கெதிராக இந்தியாவில் இடம்பெறவுள்ள ஒருநாள் சர்வதேச தொடரிலும் பங்குபெற முடியாது என்று கூறப்படுகின்றது.

(ற)

# அணித் தெரிவு விவகாரம் அதிருப்தியில் சங்கக்கார

சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரில் பங்குபற்றும் அணி குறித்து எழுந்துள்ள குழப்பம் கையாளப்பட்டுள்ள விதம் தொடர்பாக இலங்கை அணியின் குமார் சங்கக்கார தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் '20/20' சம்பியன்களாகத் தெரிவான கந்துரட்ட அணி சார்பாக முக்கிய பங்கை வகித்திருந்த குமார் சங்கக்கார, இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் சண்றைசர்ஸ் ஹைதராபாத் அணி சார்பாக ஒப்பந்தம் செய்துள்ளார்.


சம்பியன்ஸ் லீக் '20/20' தொடருக்கு இரு அணிகளும் தகுதி பெற்றுள்ள நிலையில், வீரர்களுக்கான ஒப்பந்தத்தினடிப்படையில் குமார் சங்கக்காரவைத் தெரிவு செய்யும் முதல் உரிமை சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கே காணப்பட்டது. எனினும், தற்போது சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரின் ஏற்பாட்டாளர்கள் ஆட்ட விதிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். புதிய மாற்றத்தின்படி வீரரொருவரின் இரண்டு அணிகள் சம்பியன்ஸ் லீக் '20/20' தொடருக்குத் தெரிவு செய்யப்பட்டால், எந்த அணியில் விளையாடுவது என்ற முடிவை அந்த வீரரே எடுக்க முடியும்.

இதன் காரணமாக குமார் சங்கக்கார தனது நாடான இலங்கையின் கந்துரட்ட அணியையா, இல்லையெனின் இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் அணியான சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணியையா தெரிவு செய்வார் என்ற எதிர்பார்ப்புக் காணப்படுகிறது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த குமார் சங்கக்கார,

"இந்தப் பிரச்சினை சரியான விதத்தில் கையாளப்பட்டிருக்கவில்லை. இந்தப் பிரச்சினை நாட்டிற்கும், ஐ.பி.எல் அணிக்குமெதிரான பிரச்சினை, பணத்திற்கும், விசுவாசத்திற்குமிடையிலான பிரச்சினை என்றவாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இது அவ்வாறான பிரச்சினை கிடையாது. இப்பிரச்சினையைத் தவிர்க்கும் முகமாக ஒவ்வொரு ஐ.பி.எல் தொடருக்கும் முன்னதாக வீரர்கள், உள்நாட்டு கிரிக்கெட் சபை, ஐ.பி.எல் அணி ஆகிய 3 தரப்பும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.



இம்முறை கந்துரட்ட அணிக்காக விளையாடுவதற்கு குமார் சங்கக்கார முடிவு செய்தால் அவர் தனது ஐ.பி.எல் ஊதியத்தில் 20 சதவீதமான 140,000 ஐக்கிய அமெரிக்க டொலரை இழக்க வேண்டியிருக்கும். மறுபுறத்தில் குமார் சங்கக்கார சண் றைசர்ஸ் அணிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் கந்துரட்ட அணிக்கு 150,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை சண் றைசர்ஸ் அணி வழங்க வேண்டியிருக்கும்.

(ற)

திசைகாட்டி (பிறை) லிமிற்
முன்மாதிரியான விசா ஆலோசனை விற்பனை நிறுவனம்
PV 82703 - T.P : 021 221 9016
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
* எல்லா நாள்களும் (சனி, ஞாயிறு, பொது விடுமுறை நாள் உட்பட) திறந்திருக்கும்
காலை 8 மணி முதல் பிற்பகல் 6.30 வரை ஆலோசனை வழங்கப்படும்.
* ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் அவசியம்
* தொலைபேசி மூலம் வியாபார விசாரணைகள் இடம் பெறாது.
* தொலைபேசி மூலம் நேரத்தை முன்பதிவு செய்தால் வீணான கால தாமதங்கள் தவிர்க்கப்படலாம்.
* படிக்க, உழைக்க முதல்தடவை ஆலோசனை இலவசம்.
* Visit Visa, Refusal, Sponsor, Skill migration என்பவற்றிற்கு ஆரம்ப ஆலோசனைக் கட்டணம் ரூபா 1500/= மட்டும் அறவிடப்படும்.
(39289)
(7.8.3)

SLEAS
விசேட கருத்தரங்கு
15ஆம் திகதி நடைபெற இருக்கும் திறந்த பரீட்சைக்கான பொது உளச்சார்பு கிரகித்தல் விடயங்கள்.
சனி, ஞாயிறு 10.00-4.00 மணி வரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
* மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை வகுப்புக்களும் இதே நேரம் நடைபெறும்.
* வவுனியாவில் C.B.A கதிரேசன் வீதியிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
T.P: 0754164564
(39285) (4.6.3)

கருத்தரங்கு
ஊவா, வெல்லச பல்கலைக்கழக மற்றும் ஏனைய பல்கலைக்கழக விசேட கற்கை தெரிவு பரீட்சைகளுக்குரிய பொது உளச்சார்பு.
ஆரம்பம்: ஞாயிறு (1/9/2013) 3 மணி
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு. 0754164564

IELTS A1 B1 B2 KU Education
ஸ்போக்கண் இங்கிலீஷ் வகுப்பும் Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில், உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய, அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education, No 75, Temple Road, Jaffna. IELTS Centre

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கைநெறிகள்
CBF&DBF
Batch 1:- Saturday & Sunday 7.00 -1.00 medium English
Batch 11:- Saturday & Sunday 7.00 -1.00 medium Tamil
Batch 111:- Saturday & Sunday 12.00 -5.00 medium Tamil
Batch 1v:- Weekdays 3.00 -6.00 medium Tamil
Chartered
CAB 1 & CAB 11
Batch 1:- Saturday & Sunday 8.00 -1.00 medium English
Batch 11:- Saturday & Sunday 8.00 -1.00 medium Tamil
Batch 111:- Weekdays 3.00 -6.00 medium Tamil
External degree
GAQ, BA1, BA (Final)
1st in com, BCOM(part 1), BCOM(part 11), BCOM(final)
Further Details:
JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382

உடனடி வேலைவாய்ப்பு
ESOFT Computer Studies (Pvt) Ltd
பதவி வெற்றிடங்கள்
விரிவுரையாளர் (Lecturer in English) Jaffna & Kilinochchi
தகைமை : சிறந்தமுறையில் (Diploma in English, IELTS & City& Guilds Courses) ஆகிய கற்கை நெறிகளை கற்பிக்கக் கூடிய ஆற்றலுடன் முழுநேர விரிவுரையாளர்கள் விரும்பத்தக்கது
மாணவ ஆலோசகர் (Student Counsellor) Kilinochchi
தகைமை : சிறந்த தொடர்பாடல், ஆங்கில அறிவு மற்றும் IT தொடர்பான அறிவு
போதனாசிரியர்கள் (Instructors) Mulliyawalai
தகைமை : Diploma in IT / HND in IT
தங்களது சுயவிபரக்கோவையை 07 நாட்களுக்கு முன்னதாகக் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.
ESOFT Shaping Lives, Creating Futures.
Human Resource Manager
ESOFT METRO CAMPUS - JAFFNA
No. 137, K K S Road, Jaffna
E-Mail : jaffna@esoft.lk | TEl: 021 222 4142 | 077 309 9 308

Academic Coordinator WANTED
உடனடி வேலைவாய்ப்பு
இலங்கையில் உயர்கல்வியை வழங்கிவரும் முதன்மையான நிறுவனத்தின் வலிமேற்கு கிளைக்கு மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
The ideal candidate should posses;
Degree in IT/Management field
Good communication Skills/ Leadership Qualities
Creative ideas/ ability to work under minimum supervision
பொருத்தமான நபர் பின்வரும் நன்மைகளைப் பெறுவார்
கவர்ச்சியான சம்பளம் மற்றும் ஊக்குவிப்பு போனஸ்
EPF/ETF/allowances/Skills Development trainings
Investment Opportunity also avilable
தங்கள் முழுவிபரங்கள் உள்ளடங்கலான சுயவிபரக்கோவையினை கீழ்க்காணும் email முகவரிக்கு 04-09-2013க்கு முன்பதாக அனுப்பி வைக்கவும். email: iconsuthan@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.